# தமிழ் மறை விருந்து



கா. பொ. இரத்தினம், பா.உ.

சிட்டை

அழுக்கம்பரை சனசமூக நிலையச் சபையினரால் 1981ம் நடத்தப் பெற்ற கந்தசஷ்டி மனனப் போட்டியில் பாலர் பிரிவு சகலபாடங்களையும் [illegible] ஒப்புவித்தமைக்காக இக்கான் செல்வி. க. [illegible] என்பவருக்கு பரிசாக வழங்கப்பெற்றது.

தி[illegible]யையா
அமைப்பாளர்

க. வாமதேவன்
செயலாளர்

௨௨. ௫. 81

த

(

கா

எம்

தமி
வெ

தமிழரசி . ந
Grade 11 Bio

# தமிழ்மறை விருந்து

*(தமிழ்மறைக் கழகத்தின் இருபதாவது திருக்குறள் மாநாட்டில் 29-5-80 இல் வெளியிடப்பட்டது.)*


தமிழ்மறைக் கழகத் தலைவர்

**கா. பொ. இரத்தினம்** பி.ஏ. ஆனர்சு (இலண்டன்),

எம். ஏ., பி. ஓ. எல் (சென்னை), பா. உ. ஊர்காவற்றுறை,



*தி. ஆ. 2011*

தமிழ்மறைக்கழக
வெளியீடு — 3

விலை 5-00 ரூபா

# உள்ளுறை


| | | | பக்கம் |
|---|---|---|---|
| | முன்னுரை | | |
| 1. | தமிழ்மறையின் தனிமாண்பு | ... | அ |
| 2. | தமிழ்மறை | ... | 1 |
| 3. | புரட்சிக் களஞ்சியம் | ... | 12 |
| 4. | நாடும் நல்லாட்சியும் | ... | 21 |
| 5. | வெற்றிக்கு வழி | ... | 30 |
| 6. | மலரினும் மெல்லிது | ... | 37 |
| 7. | நிறைவிளக்கு | ... | 44 |
| 8. | பெற்றதாய் | ... | 53 |
| 9. | அளவைகளும் அடையாளங்களும் | ... | 61 |
| 10. | தற்கொலை | ... | 68 |
| 11. | பொருளாதாரம் | ... | 74 |
| 12. | உன்னை நீ காதலிக்கின்றாயா | ... | 81 |
| 13. | அறப்போரும் தமிழ்மறையும் | ... | 87 |
| 14. | திருக்குறளை விளக்கும் நூல்கள் | ... | 95 |
| 15. | திருவள்ளுவர் தொடர் ஆண்டு | ... | 103 |
| 16. | தலைமை உரை | ... | 111 |

# முன்னுரை

முப்பதாண்டுகளுக்கு—ஒரு தலைமுறைக்கு முன்னுள்ள காலப் பகுதியில் 'தனித்தமிழ் இயக்கம்', 'சுயமரியாதை இயக்கம்', 'திராவிடக் கழகம்', 'திராவிட முன்னேற்றக் கழகம்' முதலியவற்றின் பணிகளால் தமிழ் மக்களிடையே புத்துணர்ச்சியும், மறுமலர்ச்சியும், சிந்தனைத் திருப்பமும், உண்மைநாட்டமும் உண்டாகத் தொடங்கின. சமயத்தின் பெயராலும், கண்மூடிப் பழக்க வழக்கங்களாலும் பகுத்தறிவுக்கும் தமிழ்ப்பண்பாட்டுக்கும் மாறாகத் தமிழர் சமுதாயத்தில் நிலைத்துநின்ற மூடக்கொள்கைகளும், சாதி வேற்றுமைகளும், தீண்டாமை பாராட்டுதல் போன்ற கொடுமைகளும், தாய்மொழியாந் தமிழை இழிவுபடுத்தும் செயல்களும் மறைந்தொழியத் தொடங்கின.

தமிழைப் படித்தவர்களில்— சங்க இலக்கியங்களைக் கற்றவர்களில்—திருக்குறளைப் பயின்றவர்களிற் பலர் இந்தச் சூழ்நிலையில் உண்மையை உணராமல் "வைதிகக் குடுக்கை" களுடன் சேர்ந்து வேதாகமங்களை உதவிக்கு இழுத்துக் கொண்டு சாதி சமய வைதிகவெறிக்கு ஆளாகிப் போலிக் கிளர்ச்சிகளில் ஈடுபட்டனர்; என்னோடும் பலர் மோதினர்; சொற்போரிலும் ஈடுபட்டனர். இவர்களின் அறியாமையையும், மயக்கத்தையும், பிறழ்வுணர்ச்சியையும், பகுத்தறிவைக் கொல்லும் பகர்வுகளையும் நீக்குதற்காகத், 'தாவாரம் இல்லை' எனும் நூலை 1950இல் வெளியிட்டேன்.

தமிழறிஞர்கள் என்ற போர்வையில் சிலர் ஆடிய குருட்டாட்டத்தையும் வெறியாட்டத்தையும் நீக்குதற்கும், தமிழ் மக்கள் உண்மையை உணர்ந்து வாழ்வதற்கும், தமிழ் இனத்திடையே காணப்பட்ட தாழ்வுமனப்பான்மை, சோர்வு மனப்பான்மை, அடிமைமனப்பான்மை, தன்னம்பிக்கையின்மை முதலியவற்றை நீக்குதற்கும் திருக்குறளையே தம் மறையெனத்—தமிழ்மறை எனத் தமிழ் இனம் ஒன்றுபட்டுப் போற்றும் நிலைமை உருவாக வேண்டும் எனும் எண்ணம்

என்னை ஆட்கொண்டது. இதனால் உந்தப்பட்டு 23-11-52 இல் தமிழ்மறைக் கழகத்தை நிறுவித் தமிழ்மறையின் பெருமையை உலகம் முழுவதும் அறியச்செய்தற்கு முயன்றேன்.

தமிழ் மறைக் கழகத்தின் வாயிலாகத் திருவள்ளுவர் திருநாளைத் தமிழர்கள் வாழும் நாடுகளெங்கும் கொண்டாடச் செய்தோம்; திருவள்ளுவர் தொடர் ஆண்டினைத் தமிழினத்தின் தொடர் ஆண்டாக வழங்கச் செய்தோம். எமது தமிழ் மறைக் கழகத்தின் பன்முனை முயற்சிகளை 1955 இல் தமிழ் மறைக் கழகம் வெளியிட்ட திருவள்ளுவர் திருநாள் மலர் எனும் நூலிற் காண்க.

தமிழ் மறைத் தேர்வுகளை ஆண்டுதோறும் யாம் நடத்திப் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கினோம்: அனைத்துலகத் தமிழ்மறைக் கட்டுரைப் போட்டியினை நடத்திப் பரிசில்களும் பாராட்டிதழ்களும் பெற்ற கட்டுரைகளைத் தொகுத்துத் தமிழ்மறைக் கட்டுரைகள் எனும் நூலை 1959 இல் வெளியிட்டோம்.

இம்முயற்சிகளால் தமிழ் மக்கள் பரந்துவாழும் இலங்கை, இந்தியா, மலேசியா. சிங்கப்பூர், பர்மா, பியூச்சித் தீவுகள், மொறிசியசு, தென்னாபிரிக்கா, அந்தமான் தீவுகள் முதலிய நாடுகளிலுள்ள தமிழர்களுடன் எமக்கு நேர்த் தொடர்பு உண்டாயிற்று. இதனால் இவர்களையும் பிற நாட்டுத் தமிழறிஞர்களையும். உலகளாவியதொரு நிறுவகத்தின் வாயிலாக இணைக்க வேண்டுமெனும் கருத்து எனதுள்ளத்தில் அரும்பி மலர்ந்தது.

பல நாட்டு மக்களின் உந்துதலினால் ''உலகத் தமிழ் மன்றத்தை'' 1963 ஆம் ஆண்டில் கோலாலம்பூரில் நிறுவி அந்நாட்டிற் பதிவு செய்தோம். இந்த உலகத் தமிழ் மன்றத்தை நிறுவிய கூட்டத்துக்குப் பேராசிரியர் கலாநிதி அருட்டிரு தனிநாயக அடிகளாரும் வருகை தந்து ஆக்கமும் ஊக்கமும் நல்கினர். இன்று தமிழ்மக்களிடையே உலகளாவிய நிறுவகங்கள் சிலவுள. இவை யாவற்றுக்கும் முற்பட்டதாக

வும், முன்னோடியாகவும் விளங்கியது உலகத் தமிழ் மன்றமே யாகும். இந்த உலகத் தமிழ் மன்றத்தின் சார்பில் 1966 இல் எழுத்தாளர் கல்கி எனும் நூலையும் வெளியிட்டோம். உலகப் பொதுநூலாம் தமிழ்மறையின் ஈடுபாடே உலகளாவிய மன்றத்தை உருவாக்கும் முயற்சியினை மேற்கொள்ளச் செய்ததென்பது குறிப்பிடத்தக்கது. நிற்க,

தமிழ்மறைக் கழகம் ஆண்டுதோறும் திருக்குறள் மாநாடுகளை இலங்கையின் பல பகுதிகளில் நடத்தி வருகின்றது. இன்று இருபதாவது திருக்குறள் மாநாட்டை வேலணையில் நடத்துகிறோம். இம்மாநாட்டில் இந்த நூலை வெளியிடுகிறோம். தமிழ்மறை பற்றி நான் எழுதிய கட்டுரைகள், திருக்குறள் மாநாடுகளில் நிகழ்த்திய தலைமை உரைகள் முதலியவற்றில் ஒரு பகுதியே **தமிழ்மறை விருந்து** எனும் பெயருடன் இந்நூலாக உருவாகியுளது. மற்றையபகுதி கற்பகமலர் எனும் பெயர்பூண்டு விரைவில் மலரும். இந்தக் கற்பகமலரை இருபத்தோராவது திருக்குறள் மாநாட்டில்வெளியிட எண்ணியுளோம். இந்த இரண்டு நூல்களிலுமுள்ள கட்டுரைகள் கவிதைகள் முதலியன இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், பர்மா முதலிய நாடுகளிலுள்ள தமிழ் ஏடுகளிலும் சிறப்பு மலர்களிலும் வெளிவந்தனவாகும். 1969இல் வெளியிடப்பட்ட திருவள்ளுவர் ஈராயிரம் ஆண்டுமலருக்கு நான் எழுதிய முன்னுரையிலே பின்வருமாறு குறிப்பிட்டேன்.

''இன்று தமிழர்கள் வாழும் நாடுகளில் அன்பர்கள் திருவள்ளுவர் ஈராயிரம் ஆண்டு நிறைவுவிழாவினைக் கொண்டாடுகிறார்கள். இந்த விழாவினைத் தமிழர்கள்மட்டும் கொண்டாடவில்லை. தமிழ்நாட்டு அரசும் கொண்டாடுகின்றது. உலகத்திலே வேறு எந்த அரசும் ஒரு புலவரைக் கொண்டாடாத முறையிலே பெருஞ்சிறப்புடன் கொண்டாடுகின்றது தமிழ்நாட்டரசு. இத்தகையதொரு 'தமிழ் அரசு' உருவாகித் திருவள்ளுவர் ஈராயிரம் ஆண்டை இத்தகைய பெருஞ்சிறப்புடன் கொண்டாடுமென்று அன்று நான் எண்ணவில்லை. இன்று இதனைக் காணும்போது நான் பெருமகிழ்வு எய்துகின்றேன்.

இலங்கையிலே எங்களுக்குப் பங்குள்ள ஓர் அரசு—எங்கள் எண்ணங்களுக்கு—வேண்டுகோளுக்கு மதிப்புக் கொடுத்துச் செயற்படும் அரசு—இருப்பின் அந்த அரசும் இந்த ஈராயிரம் ஆண்டு விழாவைக் கொண்டாட முன்வந்திருக்கும். பாராளுமன்ற உறுப்பினன் என்ற முறையில் என் நிலையை — உரிமையைப் பயன்படுத்தி இலங்கை அரசையும் இவ்விழாவில் ஈடுபடச்செய்ய முயன்றேன்: திருவள்ளுவர் முத்திரை வெளியிடுமாறும் கேட்டுளேன். அரசியலோடு தொடர்புடையவன் என்ற முறையில் எனது கடமையைச் செய்துள்ளேன். எனக்கு வாய்த்த அரசியல்நிலையை இப்பணிக்குப் பயன்படுத்தினேன். இந்நிலையைப் பயன்படுத்தி எனது தொகுதியில் இத்திருவள்ளுவர் ஈராயிரம் ஆண்டு நிறைவு விழாச் சபையினை அன்பர்களுடைய ஆதரவுடன் அமைத்தேன். இதுவும் நான் அன்று எதிர்பாராதது ஒன்று.''

இவ்வாறு அன்று நான் எழுதினேன், இன்று வேலணையில் இவ்வளவு பெருஞ்சிறப்புடன் இருபதாவது திருக்குறள் மாநாட்டை நடத்துகிறோம். இம்மாநாட்டில் மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் நண்பர் கலாநிதி வ. சுப. மாணிக்கம் அவர்கள் முன்னிலையில் கலாநிதி அருட்டிரு தனிநாயக அடிகளார் இந்நூலை வெளியிடுகின்றார். இவையும் நான் அன்று எதிர்பாராத நிகழ்ச்சிகளாகும்.

எனினும், இன்று அடிமைப் படுத்தப்பட்ட தமிழ் ஈழத்தில் எங்கள் இறைமையைப் பறி கொடுத்த நிலைமையில் நாம் இந்தத் திருக்குறள் மாநாட்டை நடத்துகிறோம். நாங்கள் இழந்த தமிழ் ஈழத்தை மீளப் பெற்று எங்கள் ஆட்சியில் திருக்குறளைப் போற்றும் திருநாள் விரைவில் வரல் வேண்டும். 1964ம் ஆண்டில். ''தாயின் மேல்ஆணை எம் தந்தை மேல்ஆணை தமிழரின் ஆட்சி எம் நாட்டில்'' என்று விடுதலைப் பரணி என்னும் ஏட்டில் பொறித்தேன்.

தமிழ் ஈழத்தை மீட்டு ஆட்சி செய்தலே தமிழ் மக்களின் குறிக்கோள்—இலட்சியம் என்று தமிழரின் தனிப் பெரும் அரசியல் கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணி

பிரகடனப்படுத்தி விட்டது. சென்ற பாராளுமன்றத் தேர்தலில் இதற்குத் தமிழ் மக்கள் தம் ஆணையை நல்கியுள்ளனர். எனவே தமிழ் ஈழத்தை மீட்கத் தமிழ் மக்கள் எண்ணிவிட்டார்கள். இந்த எண்ணத்திலே தமிழர் எல்லோரும் திண்ணியராகித் தமிழர் ஆட்சியை நாட்டும் நாளைத்தான் நாம் எதிர்பார்க்கிறோம். எதிர்பாராதன நிறைவேறியதைப்போல் இந்த எதிர்பார்ப்பும் எங்கள் வாழ் நாளில் நிறைவேறலாம் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

''பச்சை மண்ணும் சுட்ட மண்ணும்'' எனும் நூலை அண்மையில் வெளியிட்டபின் இந்நூலை ஆறு கிழமைக்குள்உருவாக்கி அச்சிட்டு வெளியிடுமாறு என்னை ஊக்கியது,

'' துன்பம் உறவரினுஞ் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை''.

எனுந் தமிழ்மறையேயாகும். இந்நூலினை விரைவாக அச்சிட்டு உதவிய சிறீகாந்தா அச்சகத்தினருக்கு எனது நன்றி.

வேலணை, கா. பொ. இரத்தினம்.
29-5-80.

# *தமிழ்மறையின் தனிமாண்பு*

இனியுலகில் எவருங்கண்டு இயம்பிடவே முடியாத
இனிமை மிக்க
தனிநெறியை உலகமக்கள் தலைநெறிதான்
எனக்கொண்டே தவிப்பே இன்றிக்
கனிவுறுதல் உள்ளத்திற் கவலையின்றிப் பூசலின்றிக்
கரவும் இன்றி
முனிவகற்றி வாழ்ந்திடவே முதற்புலவர்
*தமிழ்மறையில்* முன்பே சொன்னார்,

நல்லோர்கள் வகுத்துரைத்த நன்னெறிகள் பிறருடைய
நன்மை எண்ணாப்
புல்லோர்கள் தம்மாலே புவியோர்க்குப் பயனின்றிப்
போகச் சூதில்
வல்லோர்தாம் முயன்றாலும் வடுப்படுத்த முடியாத
வழியைக் காட்டல்
எல்லோரும் வழுத்துகின்ற எழில்நிறைந்த
*தமிழ்மறையின்* ஏற்றம் அன்றோ!

அருளினுக்குப் பொருள்கூறி அன்பினுக்கு
நல்லுருவம் அமைத்துத் தந்து
பொருளினுக்கு வழிசொல்லிப் புகழறத்தின்
திறமுணர்த்திப் பொல்லாத் தீமை
இருளினுக்கு விடிவுரைத்தே இன்பத்துக்கு
எல்லைவகுத்து இழிவு செய்யும்
மருளினுக்கு மருந்தியம்பி வாழ்வுநெறி வகுத்த
*தமிழ்மறையே* வாழி!

# தமிழ் மறை

உலகத்திலேயுள்ள சிறந்த நூல்கள் வேதங்கள் எனக் கூறப்படுகின்றன. சமயங்களின் முதனூல்களை மக்கள் வேதங்கள் என்று போற்றுகின்றனர். வேதங்கள் என்பது வட சொல். இதனைக் குறிக்கும் தனித்தமிழ்ச் சொல் மறைகள் என்பதாகும்.

மறை எனுஞ் சொல்லுக்குப் பல பொருள்களுண்டு. அடைக்கலம், இரகசியம், இரண்டாம் உழவு, எதிர்மறுப்பு, ஒளிப்பிடம், கறை, காப்பு, கேடகம், சங்குச்சுரி, சொல், புள்ளி, மந்திரம், மறையென்னேவல், மறைவு, வேதம் என்பன குறிப்பிடத்தக்கன.

மறை என்பது மறைந்த பொருளுடையதென்னும் பொருளில் வேதத்தைக் குறிக்கிறது என்பர் நச்சினார்க்கினியர். பேராசிரியர் கருத்தும் இதுவே. இவ்வுரையாசிரியர்களுடைய காலத்திலே வடமொழி வேதங்கள் இலகுவில் விளங்காத மொழிநடையை உடையனவாகிவிட்டன. அன்றியும் இவ் வேதங்களின் நேர்ப்பொருள்களிற் பல விழுமியனவாக அமையாமை கண்டுணர்ந்தோர் சிலர் இவற்றின் பெருமையைப் போற்றுதற்கு இவற்றில் மறை பொரு

ளுண்டென்றுங் கூறமுற்பட்டனர். இக்காரணங்க ளால் இவ்வுரையாசிரியர்களும் பிறரும் ''மறை'' எனுந் தனித் தமிழ்ச் சொல்லுக்கு இவ்வாறு பொருள் கூறினர். வடமொழியிலுள்ள நான்கு வேதங்களுள் ஒன்ருகிய அதர்வண வேதம் தலை நூலாகாது எனவும், ''பெரும்பான்மையும் உயிர் கட்குஆக்கமேயன்றிக் கேடுஞ் சூழும் மந்திரங்களும் பயிறலில்'' இடைத்தரமான நூல் எனவும் நச்சி னுர்க்கினியர் கூறியிருப்பது கூர்ந்து நோக்கத்தக்கது.

மறை என்பதற்கு இவ்வுரையாசிரியர்களும் பிறரும் கூறிய இப்பொருள் தமிழ்மறை நூல்களுக்குச் சிறிதும் பொருந்தாதென்பதைத் ''தமிழ் முழுதும்'' உணர்ந் தோர் தமிழ்ச்சான்ருேரின் பரந்த நோக்கை அறிந் தோர் - யாவரும் ஏற்றுக்கொள்வர்.

வடமொழி வேதங்களைத் தழுவி எழுந்த புரா ணங்கள் மிருதிகள் முதலிய நூல்கள் உயர்கல்வி யைச் சிலருக்கே தனியுரிமையாக்கின. வேதங்கள் முதலியவற்றை உயர்ந்த வருணத்தாரன்றி ஏனை யோர் கற்றல் கூடாதெனவும் அவை விதித்தன. இவ்விதியை மீறிக் கற்போருக்குப் பல கடுந் தண் டனைகளும் அந்நூல்களிற் கூறப்பட்டுள.

ஒரு குலத்துக்கு ஒரு நீதி கூறி மக்களில் ஒரு சாராரை அடக்கி ஒடுக்கி அடிமைகள் போல நடத்த முயல்வது முற்காலத்திலன்றி இக்காலத்துங் கூட உள்ளதொரு துரோகச் செயல் என்பதை நாம் நன்கு காண்கின்ருேம். இத்தகைய கொடுமை

களும், துரோகங்களும், பழிகளும் இன்றி உலக மக்களை ஓரினமாக, ஒரு சுற்றமாக, உயர்வு தாழ் வில்லாதவர்களாக, ஒரு நிறையினராகக் கொண்டு எல்லாரும் இன்புற்று நன்கு வாழ வழி வகுத்த பழம் பெருமைக்கு உரியவர்கள் நம் தமிழகச் சான்றோரேயாவர்.

இச்சான்றோர்கள் கண் போன்ற கல்வியை யாவரும் கற்கவேண்டும்; மேலும் மேலுங் கற்க வேண்டும்; இறக்கும்வரையும் கற்கவேண்டும் என்று மக்களை ஊக்கினர், அன்றியும் யாவரும் இலகுவில் கற்றுணர்ந்து தெளிந்து உய்யும்பொருட்டுத் தாங் கள் இயற்றிய பெருநூல்களை எல்லாம் தெளி வுடையனவாக யாவரும் படித்தறியத் தக்கன வாகவே இவர்கள் இயற்றினர். எனவே, இவர்கள் இயற்றிய மறை நூல்கள் மறைந்த பொருளுடையன வாயிருந்தன எனக் கூறல் எவ்வாற்றுனும் பொருத்த மற்றது.

பிறர் இலகுவில் விளங்காதவற்றை நன்கு விளக்குதலையும், மறைந்துள்ளவற்றைத் தெளி வாக்குதலையுமே இச்சான்றோர் தம் கடனாகக் கொண்டனர். கேட்டார்ப் பிணிக்குந் தகையவாக வும், எண் பொருளாகவும் கூறவேண்டுமெனவும், நிரந்து இனிய சொல்லுதல் வேண்டும் எனவும், சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் வேண்டு மெனவும் வள்ளுவர் வற்புறுத்தியுள்ளார்.

எனவே, தமிழிலுள்ள உயர்ந்த நூல்களை,— வேதங்கள் போன்ற நூல்களை — மறைகள் என்று

கூறும்பொழுது அவை மறைந்த பொருள்களை உடைமையால் மறைகள் எனப்பட்டன எனக் கூறல் ஆராய்ச்சிக்கும் மரபுக்கும் உண்மைக்கும் ஒவ்வாதென்க.

இவ்வாறு ஒவ்வாதெனக் கொள்ளின் 'மறை' என்பதன் பொருத்தமான பொருள் யாது? எனும் வினுத்தானே தோன்றுகிறது.

இங்கே மறை என்பது 'காப்பு' எனும் பொருளினையுடையதெனக் கொள்ளலாம். 'மெய்ம்மறை' 'வெயின் மறை' என்பன உடம்பைக் காப்பது எனவும் வெயிலைக் காப்பது எனவும் பொருள்பட்டு, கவசம், குடை முதலியவற்றை உணர்த்துதல் காண்க. முன்னணியில் நின்று வீரர்களைக் காத்து நிற்கும் பெருமையுடையோனுகையால் இமயவரம் பன்நெடுஞ்சேரலாதான் எனுஞ் சேர அரசனைச் ''சான்றோர் மெய்ம்மறை'' எனப் பதிற்றுப் பத்து எனும் நூல் போற்றுகிறது.

மறை, காப்பு, அரண் என்பன ஒத்த பொருளுடையன. மக்களின் எண்ணம், சொல், செயல் என்பவற்றைத் தீயவழியிற் செல்லவிடாது நல்வழிப்படுத்திக் காக்கும் அறிவினையூட்டுவதால் தமிழ்ச் சான்றோருடைய நூல்கள் மறைகள் எனவும் போற்றப்பட்டன.

''அறிவு அற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்க லாகா வரண்.''

எனுந் திருக்குறளில் 'காக்குங் கருவி', "அரண்" எனக் கூறப்படும் நல்அறிவை த் தரும் நூல்களே மறை நூல்களாகும்.

உலகத்துயிர்கள் யாவும் ஒருவகைக்காப்பினை நாடுகின்றன. குழந்தையைத் தாய் காக்கின்ருள். குடும்பத்தைத் தலைவன் காக்கின்ருன். நாட்டை அரசு காக்கின்றது. இவ்வாறு காப்பே வாழ்வுக்கு இன்றியமையாததாக விளங்குகிறது. எனவே வாழ்வின் எந்நிலையிலும் மக்களைக் காப்பாற்றும் அறிவை நல்கும் நூல்களைக் காப்பு நூல்கள் — மறை நூல்கள் என்று நம்முன்னேர் போற்றினர்கள் எனலாம்.

செய்வதின்னதென்று அறியாது இருளில் மயங்கும் மக்களுக்கு விளக்குப்போல ஒளிகொடுத்து வழிகாட்டி அவர்களைக் காப்பனவும், தீயவழிகளில் மனத்தைச் செல்லவிடாது நல்லவழிகளிற் செலுத்தச் செய்து காப்பனவும், சேற்றுநிலத்தில் வழுக்கி விழாமல் ஊன்றுகோல் காப்பதுபோல வாழ்விலே வழுக்கி விழாமல் காப்பனவும் சான்ருேருடைய அறிவுரைகள் எனத் திருக்குறள் தெளிவுற உரைக்கிறது. இவ்வாறு காக்கும் அறிவுரைகளைக் கொண்ட நூல்களே மறைநூல்கள் எனப்பட்டன என்க.

மறை எனுஞ் சொல் பழந்தமிழிலக்கண நூலாகிய தொல்காப்பியத்திலும் திருக்குறளிலும் காணப்படுகிறது.

"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப."

என்பது தொல்காப்பியச் சூத்திரம். இதனை அடியொற்றித் திருவள்ளுவரும்:

''நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்'' என்றார்.

தமிழில் மந்திரங்களைக் கூறுதற்குத் தனிப்பட்ட ஒரு செய்யுள் வகை தொல்காப்பியர் காலத்திற்கு முன்னரே இருந்தது என்பதை,

''அவைதாம் நூலினான உரையி னான
நொடியொடு புணர்ந்த பிசியி னான
ஏது நுதலிய முதுமொழி யான
மறைமொழி கிளந்த மந்திரத் தான
கூற்றிடை வைத்த குறிப்பி னான''

எனுந் தொல்காப்பியச் சூத்திரம் நன்கு புலப்படுத்துகிறது. இம்மந்திரச் செய்யுள் அடிவரையறை அற்றதென்பதும், மந்திரப் பொருட்கண் அப்பொருட்குரித்தல்லாச் சொல்வருதல் கூடாது என்பதும் தொல்காப்பியங் கூறும் உண்மைகளாகும்.

''தானே என்று பிரித்தான் இவை தமிழ் மந்திரமென்றற்கு'' என்பது ''நிறைமொழிமாந்தர் .........'' எனும் தொல்காப்பியச் சூத்திரத்துக்குப் பேராசிரியர் எழுதிய உரையாகும். தமிழ்மொழியும் வடமொழியும் நிலைகண்டுணர்ந்த சிவஞான முனிவரும் தமது காஞ்சிப் புராணத்திலே தமிழ் மந்திரங்களைப் பற்றிக் குறிப்பிட்டுளர்.

மந்திரம் என்பதும் காப்பது எனும் பொருளை உடையது. மறை மந்திரம் என்பன பெரிதும் ஒத்த பொருளையுடையனவென்று கூறலாம். ஆணையொடு சார்த்திக் கூறும் மறைமொழிகள் மந்திரமாகக் கொள்ளப்பட்டன. இவற்றை நிறைமொழி, வாய்மொழி, பொய்யாமொழி எனவும் கூறல் சாலும்.

தமிழ் மந்திரங்களைப் போலவே தமிழ் மறை நூல்களும் முன்னர் இருந்திருக்கவேண்டும். தமிழிலும் நான்கு மறைகள் இருந்தன என்றும் அவை மறைந்தொழிந்தன என்றும் ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். நான் மறை எனும் வழக்குத் தமிழுக்கேயுரிய தனிவழக்கென்றும், வடமொழி வேதங்கள் தொடக்கத்தில் மூன்ருக இருந்தன என்றுங் கூறுவர்.

இப்பொழுது "தமிழ்மறை" எனத் தனித்துயர்த்திப் போற்றப்படுவது திருக்குறளேயாகும். இப்போற்றுதல் இன்று நேற்றுத் தொடங்கியதன்று. திருக்குறள் தோன்றிய காலந்தொட்டு இன்றுவரை வாழ்ந்த அறிஞர் பெருமக்கள் திருக்குறளைத் 'தமிழ் வேதம்' எனவும், தமிழ்மறை எனவும் போற்றியுளர். இவ்வுலகில் மக்களினம் வாழும் காலம் முழுவதும் திருக்குறள் தமிழ்மறை எனப் போற்றப்படும். "பொய்யில் புலவன் பொருளுரை" என மணிமேகலை திருக்குறளின் உயர்வை உரைத்துளது. "தொல்லுலகில் எழுதுண்ட மறையன்ருே" என்று கம்பர் திருக்குறளை 'மறை'

என்று குறிப்பிட்டார். திருவள்ளுவமாலை எனும் நூலிலுள்ள பல வெண்பாக்கள் திருக்குறளைத் தமிழ் வேதம் எனவும், வடமொழி வேதங்களிலும் திருக்குறள் சிறந்ததெனவும் கூறுகின்றன. ''மெய் வைத்த சொல்'' என்று திருவள்ளுவருடைய திருவாக்கை உமாபதிசிவம் போற்றினர். திருக்குறள் சாதாரண மறையன்று, ''வான் மறை'' என்று பாடினர் பாரதியார்.

திருக்குறளே தமிழரின் மறை — தமிழ்மறை என்று கொள்ளும் வழக்குப் பழங்காலந் தொட்டே நிலைத்து வந்துள்ளதெனினும், திருக்குறளைத் தமிழ் மறையாக எல்லாத் தமிழரும் ஏற்றுப் போற்றி அதனை வழித்துணையாக வாழும் வழியைக் காட்டும் மறைநூலாகக் கொள்ளவில்லை.

நம் மக்களிற் பலர் ஊருணியிருக்க உவர்க் கழியில் நீருண்டு வருகின்றனர்; நடுவூருட் பழுத்த மரம் இருக்கப் பிறவூர் எட்டி மரத்தைப் பேணி வருகின்றனர்; மருந்தாகித்தப்பா மரம் இருக்க நச்சு மரத்தை நாடி ஓடுகின்றனர். இதனாலே தம் வாழ்விலே வழுக்கி வழுக்கி விழுகிறார்கள். வழுக்கி விழாமற்றடுத் துதவும் ஊன்றுகோல் வள்ளுவர் வாய்மொழி தான் என்பதை அவர்கள் இன்னும் நன்கு உணரவில்லை. இந்த உணர்ச்சி உண்டாகினாற்றான் நம் இனத்திடையே காணப்படும் பகுத்தறிவுக்கும் பண்புக்கும் மாறுபட்ட செயல்களும், அன்பையும் அருளையுஞ் சிதைக்குங் கொடுமைகளும் நீங்கும்.

நம்மினத்தின் இத்தகைய குறைகள் மட்டுமன்றி, நம் மொழியின் தலைமைக்கும் பெருமைக்கும் மாறுன போக்குக்களும் ஒழியும்; தமிழ் உரிமையுடன் அரசு வீற்றிருக்கவேண்டிய பல துறைகளில் ஆரியம், ஆங் கிலம், தெலுங்கு, முதலிய பிற மொழிகளை அரியணை ஏற்றிப் போற்றும் மடமையும் அகலும்.

''தேவார திருவாசகங்கள், நாலாயிரத் திவ் வியப் பிரபந்தங்கள் என்பனவுந் தமிழ்மறை களல்லவா! திருக்குறளை மட்டுந் தமிழ்மறையென்று போற்றுதல் வேண்டுமா?'' என்று கருதுவாருமுளர். தத்தஞ் சமய நூல்களை மாத்திரமே வேதமெனப் போற்றும் பல்வேறு மதத்தினருந் திருக்குறளை மட்டுந் தமிழ்மறை என்று போற்றுதற்கு உடன் படுவார்களா? என்றுஞ் சிலர் ஐயுறுகின்றனர்.

''மெய்ம்மை கொண்ட நூலையே அன்போடு வேதமென்று போற்றுவாய் வா வா வா'' எனப் பாரதியார் பாடுகிறுர். மெய்ம்மை நூல்களெல் லாம் மறைநூல்களே எனும் அவருடைய கருத்தை அறிவுடையார் எவரும் மறுக்கமாட்டார்.

சமயங்களின் முதனூல்களெல்லாஞ் சமய மறை களாகும். தமிழிலே தோன்றிய மெய்ம்மை நூல் களெல்லாந் தமிழ் மறைகளாகும். எனவே இவ் விருதிறத்து நூல்களுக்குமிடையில் எவ்வித முரண் பாடுந் தோன்றக் காரணமில்லை. 'தமிழ்மறை' என்பது காரணங் கருதியபொழுது தமிழிலுள்ள

மெய்ம்மை நூல்களைக் குறிப்பதாகவும், காரணங்கருதாத பொழுது இடு நறியளவாய்த் திருக்குறளைக் குறிப்ப தாகவும் கொண்டால் மயக்கத்துக்கு இடமில்லை

''நால்வர் சொல்சைவவேதம் நளிர்குருகூரன் சொல்லைப்
போல்வலார் சிலர்தம் சொல்லும், பொருவில்
பாகவதர் வேதம
வால்வளை உலவும் வீதிமயிலை வள்ளுவன் சொல்யார்க்கும்
கீழ்மையை அகற்றி மேன்மை அருளும் நல்வேதமாமே.''

என்னும் புலவர் புராணமுடையார் கூற்றினை யும் நோக்குக.

திருக்குறளைத் தமிழ்மறை என்று போற்றும் பொழுது தமிழிலே தோன்றிய தனிமறை என்று மட்டும் பொருள் கொள்ளாது இனிய மறை என வும் பொருள் கொள்ளலாம். யாவர்க்கும் எக் காலத்துக்கும் இனியதாயிருக்கும் இதன் தனிச் சிறப்பே இதனை உலகுக்கு ஒருமறையாகப் — பொது மறையாக ஆக்குகிறது.

உலகத்திலே மறைகள் எனப் போற்றப்படும் நூல்களிலே திருக்குறளைத் தவிர்ந்த யாவும் சமயச் சார்புடையனவாகவும், ஒரு நாட்டினருக்கோ, ஓர் இனத்தினருக்கோ, ஒரு கட்சியினர்க்கோ ஒரு காலத்துக்கோ உரியனவாகவும் இருக்கின்றன. திருக்குறளோ எச்சமயச் சார்புமற்றதாகவும் உல கத்து மக்கள் யாவருக்கும் பொதுவானதாகவும் எக்காலத்துக்கும் உரியதாகவும் மக்கட் கூட்டம்

ஒரு குலமாக ஒன்றுபட்டு வாழுதற்கு வழிவகுப்ப தாகவும் ஒளிர்கிறது. இதனுடைய இத்திறப் பாட்டைக் கல்லாடர்:

''சமயக் கணக்கர் மதிவழி கூறுது
உலகியல் கூறிப் பொருளிதுவென்ற வள்ளுவன்''

என்று போற்றினர்.

சுருங்கக் கூறின், இன்று ஐக்கிய நாடுகள் நிறுவகம் போன்ற உலகப் பொது மன்றங்கள் கைக்கொள்ளத்தக்க ஓர் உலகப் பொதுமறை — யாவர்க்கும் இனிய மறை — இத்தமிழ் மறையே எனலாம்.

# புரட்சிக் களஞ்சியம்

இன்று நாம் இருபதாம் நூற்ருண்டில் வாழ்கிருேம். ஈராயிரம் ஆண்டுகளுக்குமுன் மக்களின் வாழ்க்கை எவ்வாறு இருந்திருக்கும் என்பதைக் கற்பனை செய்துகொண்டு தமிழ் மறையாம் திருக்குறளை நாம் படித்தல் வேண்டும். அப்பொழுது தான் திருக்குறள் செய்த பெரும் புரட்சியையும், அதனுடைய பெருமையினையும், முற்போக்கையும், சிறப்பையும் நன்கு உணரலாம்.

சமயத்துறை, வாழ்வுத்துறை, பொருளாதாரத் துறை, அரசியற்றுறை முதலிய பல துறைகளிலே புரட்சியாளர் பலர் தோன்றி மக்கள் வாழ்வைச் செம்மைப்படுத்தியுளர். இப்புரட்சியாளர்களுக்குள்ளே முன்னணியில் விளங்குபவர் திருவள்ளுவராவர். மக்கள் வாழ்வின் துறையனைத்திலும் மாபெரும் புரட்சியினை அவர் உண்டாக்கியிருக்கிருர். அவருடைய தமிழ் மறை மாபெரும் புரட்சிக் களஞ்சியமாக மிளிர்கிறது. அவர் காலத்திலிருந்த கண்மூடிப் பழக்கவழக்கங்கள் யாவற்றுக்கும் மாருக அவர் புரட்சிசெய்திருக்கிருர். மக்கள் இவ்வுலகிலே இன்புற்று வாழுதற்கேற்ற வழிகளை எல்லாம் அவர் வகுத்திருக்கிருர். இன்று உலகப் பேரறிஞர் விரும்பும் புதிய

மாற்றங்களையும் அன்று எடுத்துரைத்திருக்கிறார். இன்றும் உலகம் நன்கு உணர்ந்து மேற்கொள்ள முடியாது தயங்கும் புரட்சித் திருப்பங்களையும் அவர் அன்றே தெளிவாக விளக்கியிருக்கிறார்.

இன்று உலகிலுள்ள போட்டி பொறாமைகளுக்கும், பெரும் பூசல்களுக்கும், பிரிவினைகளுக்கும் காரணமாயிருப்பது பொருளாதாரமேயாகும். நெற்றி வியர்வை நிலத்திற் சிந்த உழைக்கும் பாட்டாளி மக்கள் உண்ண உடுக்க உறங்கப் போதிய வாய்ப்பின்றித் துடிப்பதையும், அன்பும் அறமும் சேராத வழிகளிற் பொருளையீட்டிக்குவித்த செல்வர்கள் அப்பொருளைப் பல்வேறு புதுப்புது வழிகளிற் செலவு செய்து போகக்கடலிலே திளைப்பதையும் நாம் காண்கின்றோம். பிழைக்க வேறு வழியின்றிப் பிச்சை எடுத்து வாழ்கிறவர்களும் உலகத்து நாடுகள் பலவற்றிலே உளர்.

உழைத்து வாழமுடியாத — உழைப்புக்கேற்ற ஊதியம் பெறமுடியாத — ஒரு சமுதாயம் உருவாக்கப்பட்டால் அதை உருவாக்கினவர்கள் அழிக்கப்படவேண்டியவர்கள். ''தனி ஒருவனுக்கு இங்கு உணவில்லை எனில் சகத்தினை அழிப்போம்'' என்றார் பாரதியார். வள்ளுவர் காலத்திலே வறியவர்களாகவும் செல்வர்களாகவும் ஆவது விதியின் பயன் என்ற கொள்கையைப் பல சுயநலப்புலிகள் நிலைநிறுத்தி வயிறுவளர்த்தார்கள்; ''எல்லாம் கடவுளின் கட்டளை'', என்று அவர்கள் மக்களை ஏமாற்றி

ஞர்கள். எனவே, ஒருவன் இரந்து வாழவேண்டின் இந்த உலகம் மட்டுமன்றி, இந்த உலகத்தை ஆக்கியவனும் அழிந்து போகவேண்டும் என்று வள்ளுவர் வெகுண்டுரைத்தார்.

''இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக இவ்வுலகியற் றியான்.''

எதற்கும் வெகுளாத அருள் உள்ளம் படைத்த வள்ளுவர் பெருமானுடைய உள்ளம் கடவுளை ''இழுத்து'' மக்களை ஏமாற்றுபவர்களை எண்ணும் பொழுது கொதித்துக் குமுறுகிறது.

''கடவுளுடைய வாக்குக்கள் இவை, முனிவர்களுடைய கூற்றுக்கள் இவை, இவற்றை ஆராயாமல் ஏற்றுக்கொள்ளவேண்டும். ஆராய்தற்கு முற்பட்டால், பொருத்தமற்றன என்று இகழ்ந்தால் நரகத்தில் அழுந்துவீர்கள்'' என்று முழங்கிய நூல்கள் மலிந்த அக்காலத்தில் ''உண்மைப் பொருளை ஆராய்ந்து பார்த்து அறிதல் வேண்டும், குருட்டுத்தனமாக எதையும் நம்புதல் கூடாது, யார் கூற்றுனும் ஆராயாமல் ஏற்றுக்கொள்ளப்படாது'' என்று பெரும் புரட்சி செய்தவர் வள்ளுவர் பெருமான். ''எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு'' என்று ஒரு பெரிய அணுக்குண்டைப் போட்ட பெருமை தமிழ்மறைக்குரியது. ஆராய்ச்சி மனப்பான்மையை மக்கள் யாவருக்கும் உண்டாக்கியவர்களுக்குள் முதல்வர் திருவள்ளுவரேயாவர்.

ஆராய்ச்சி செய்கிறவர்களுக்கு வழிகாட்டியவரும், ஆராய்ச்சி செய்யுமாறு தூண்டியவரும் அவரே யாவர்.

''செத்தபின் சிவலோகம், வைகுண்டம்'' என்று பிதற்றியவர்களுக்கு இந்த உலகிலேயே இன்ப வாழ்வுண்டு, சுவர்க்க வாழ்வுண்டு, உண்மையான வாழ்வுண்டு என்று விளக்கியவரும் திருவள்ளுவரே. ''வையத்தில் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறை யுந் தெய்வத்துள் வைக்கப்படும்'' என்று முழங் கினுர் அவர்.

''காயமே பொய்யடா, காற்றடைத்த பையடா, பெண்ணினம் மாயப்பிசாசினம், உலகம் கானல் நீர்'' என்ற கொள்கையில் அழுந்தி, வாழும் வகையறியாமற் கிடந்து தவித்த மக்களுக்கு உல கத்திலே வாழும் முறையை வகுத்துக்காட்டிய தனிப்பெருமை தமிழ்மறைக்குரியது.

சாதிக்குரிய கடமைகளைச் செய்யவேண்டு மென்று வகுக்கப்பட்ட சட்டதிட்டங்களை உடைத் தெறிந்து நல்ல காரியங்களைச் செய்வதுதான் கடமையென்று தமிழ்மறை நிலைநாட்டியது. பயன் கிடைத்தாலுங் கிடைக்காவிடினும் நல்லவற்றைச் செய்யவேண்டும் என்று மக்களை அது தூண்டியது; ''மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்று'' என்று புகட்டியது.

"விதி விதி" என்றுகூறி மக்கட் குலத்தை மடமைச் சேற்றிலே புரள வைத்தனர் சுயநல வாதிகள் பலர். இந்தத் துரோகச் செயலை எதிர்த்துத் தமிழ்மறை பெரும் புரட்சி செய்தது "எல்லாம் எங்கள் தலைவிதி" என்று கருதிச் சோர்ந்து விழுந்து கிடந்த மக்களை,

"தெய்வத்தால் ஆகா தெனினும் முயற்சி
மெய்வருத்தக் கூலி தரும்."

"பயப்படாதீர்கள், முயலுங்கள், முயலுங்கள், முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்" என்று இயம்பித் தெய்வத்தையே ஆட்கொள்ளலாம் என்றும் அஃது ஊக்கியது; "குடிசெய்வல் என்னும் ஒருவர்க்குத் தெய்வம் மடிதற்றுத்தான் முந்துறும்" என்றுகூறி ஒருவன் தன்னை மட்டுமன்றித் தன் குடியையும் உயர்த்த முயன்றால் தெய்வமும் உதவி செய்ய ஓடிவரும் என்று நம்பிக்கை ஊட்டியது.

அடக்கப்பட்டவர், தாழ்த்தப்பட்டவர், நசுக்கப்பட்டவர் முதலானோருக்கு விடுதலை பெறும் வழியைக் காட்டியது; அவர்கள் உயர்ந்தோராக வாழும் முறையை அழுத்தம் திருத்தமாக எடுத்து விளக்கியது; "எண்ணிய எண்ணியாங்கு எய்துவர் எண்ணிய திண்ணியராகப் பெறின்", "அருமை யுடைத்தென்று அசாவாமை வேண்டும் முயற்சி பெருமைதரும்", "ஆக்கம் அதர் வினாய்ச் செல்லும் அசைவிலா ஊக்கமுடையானுழை" என்றெல்லாங் கூறி மக்களுக்குத் தன்னம்பிக்கையையும்,

மனத் திட்பத்தையும் உண்டாக்கியது; தாழ்வு மனப்பான்மையும் தோல்வி மனப்பான்மையும் நிறைந்து மடிந்து கிடந்த மக்களுக்கு வீரத்தையும் ஊக்கத்தையும் நல்கியது.

பெண்களையும் தாழ்ந்த சாதியினருடன் சேர்க்கிறது பகவத்கீதை. (சுலோகம் 9 — 32). மண் பொன் எனும் பொருள்களுடன் பெண்ணையும் சேர்த்து அடிமைப் படுத்திய சமுதாயத்தை வேரோடழிக்கும் முறையிலே தமிழ்மறை பெண்ணின் பெருமையைப் பேசிற்று; "**பெண்ணிற் பெருந்தக்க யாவுள? இல்லவள் மாண்பானல் இல்லதென்?" என்றெல்லாம் வினவியது.**

அறிஞர் சிகாமணிகள், பூதேவர், இருபிறப்பாளர், ஆசாரியர் என்று பட்டஞ் சூட்டித் திரிந்தவர்களை நோக்கி "அறிவினன் ஆகுவதுண்டோ பிறிதின்நோய் தந்நோய்போற் போற்றாக்கடை" என்று அது சுடச்சுடக் கேட்டது; "எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானும் மாணா செய்யாமை தலை" என்று அவர்களுக்கு அறிவுரை பகர்ந்தது.

பிறப்பினலே உயர்வு தாழ்வு கற்பித்த சுயநலப்புலிகளுக்கும், பெருமை பாராட்டிய பித்தர்களுக்கும் "பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான்", என்றும் "பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக் கல்" என்றும் அது பாடம் கற்றுக் கொடுத்தது. பணம், பட்டம், பதவி முதலியவற்

ருலும், சாதி, சமயம், இனம், நிறம் முதலியவற் ருலும், நர்டு, மொழி, அரசியற் கொள்கை முதலிய வற்ருலும் பிளவுபட்டுக் கிடக்கும் இவ்வுலகத்தை ஒன்ருகக் கொண்டு உலக மக்கள் யாவருக்கும் பொது நெறி வகுத்த தனிப்பெருமைக்குரியது நமது தமிழ் மறையேயாகும்.

பல துறைகளிலும் மனிதனை மனிதனுக வர்ழ— பிறர் உதவியின்றி வாழ — தனக்கும் பிறருக்கும் பயன்பட வாழ — வழிகாட்டிய தனிச் சிறப் பினுலே தமிழ் மறையை யாவரும் போற்றத் தொடங்கினர். பிறநாட்டு மக்களும் இதன் பெருமையை அறிந்தவுடன் தம்முடைய மொழி களிலே மொழி பெயர்த்துத் தம் மக்களும் பய னடையச் செய்கின்றனர். ''மக்கள் யாவரையும் முழு மனிதராக்கும் தமிழ் மறையைப் போன்று சிறந்தோங்கும் இலக்கிய நூல் இவ்வுலகில் வேறென்றுமில்லை'' என அல்பெட்டுசுவைச்சர் போன்ற பிறநாட்டுப் பேரறிஞர்களும் தமிழ் மறையைப் போற்றியுளர். மிகத் தொகையான மொழிகளிலே மொழிபெயர்க்கப்பட்ட ஓர் இலக் கியநூல் எமது தமிழ்மறையேயாகும்.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்த் தோன் றிப் பெரும் புரட்சி செய்து அன்பு வாழ்வை— அறநெறியை —அருட்டிறனை மக்களுக்கு விளக்கிய நமது தமிழ்மறை இன்னும் பல்லாயிரவாண்டு களுக்குப் பொருத்தமான வாழும் முறைகளைக்

கொண்டு விளங்குகிறது; சுருங்கக் கூறின், எக் காலத்துக்கும் உரிய பேருண்மைகளின் பெட்டகமாக வும் அது மிளிர்கிறது. இன்னும் மனிதகுலம் நன்கு அறியாத—அறிந்தும் போற்ற முற்படாத உண்மைகளே யும் மனிதகுலம் ஈடேற்றம் அடைதற்கு இன்றியமை யாது மேற்கொள்ள வேண்டிய வழிகளேயும் அது முழு உலகுக்கும் விளக்கிக் கொண்டிருக்கிறது. தீமையை நன்மையினுலொழியத் தீமையினுல் அழித்தல் முடியாது, பகையைக் கேண்மையினு லன்றிப் பகையினுல் மாற்றல் முடியாது, போர் மனப்பான்மையைச் சமாதானத்தாலன்றிப் போரி னுல் ஒழித்தல் சாலாது என்று அது விளக்கும் அடிப்படை உண்மைகளே இன்றும் உலகம் முழு மனத்துடன் ஏற்றுக்கொள்ளாமையாலேயே உலகத்தின் பல பாகங்களிலும் போட்டி பொருமைகளும் பூசல்களும் நிகழ்கின்றன; வல் லரசுகள் தம்முள் முரண்படுகின்றன; பகைத்தீயை வளர்க்கின்றன.

''இன்னு செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயஞ் செய்துவிடல்'', ''பகை நட்பாக் கொண் டொழுகும் பண்புடையார் தகைமைக் கட்டங் கிற்றுலகு'' எனும் இந்த அறிவுரைகளே, அணுக் குண்டு, நீர்வளிக்குண்டு, ஏவுகணைகள் முதலிய வற்ருல் உலகம் அழிந்தொழியாமல் நிலைத்து நிற்க வேண்டுமெனின் மக்கள் யாவரும் இனிக் கைக்கொள்ள வேண்டியன.

இன்று உலகிலுள்ள பல நாடுகள் தம் படைகளைப் பெருக்குகின்றன. இதற்குப் பிற நாடுகளைப் பற்றிய அச்சமும், ஐயமுமே காரணங்களாகும், படைப் பெருக்கத்தால் உலகில் நிலையான அமைதி உண்டாகாது. படையைப் பெருக்குவோர் போரிலே கண்ணும் கருத்துமாயிருப்பர்; நல்லவற்றை எண்ண மாட்டார்கள். எனவே, படையின்றி வாழும் வாழ்வே பகையின்றி வாழும் வாழ்வுக்கு வழியாகும். இதனைத் தமிழ் மறை,

> "படைகொண்டார் நெஞ்சம்போல் நன்று ஊக்காது ஒன்றின்
> உடல்சுவை உண்டார் மனம்"

எனும் குறளிற் பொதிந்து விளக்குறது. இதனை உலக வல்லரசுகள் பன்முறை சிந்தித்துத் தெளிதல் வேண்டும்.

வாழ்வின் துறையனைத்திலுமுள்ள ஊழல்களை நீக்கி மக்கள் நல்வாழ்வு வாழுதற்கு வேண்டிய வழிகளை எல்லாம் எடுத்துரைக்கும் தமிழ்மறை அன்பு நெறியினின்றும் சிறிதும் பிறழாமலே மாபெரும் புரட்சிக் கருத்துக்களை எடுத்துரைத்துள்ளது. படிப்போர் கேட்போர் உள்ளத்தைப் பிணிக்கும் முறையில் வள்ளுவர் வாய்ச் சொற்கள் அமைந்துள. மக்கள் உள்ளத்தை அவர் அணுகுவதைப்போல வேறெவரும் அணுகவில்லை.

அழிவின் எல்லையை அணுகிக்கொண்டிருக்கும் உலகத்துக்கு இன்று உய்யும் வழியைக் காட்டுவது தமிழ் மறையே. இதனை உலகம் முழுவதும் போற்றிப் பயனடையும் நாளும் விரைவில் வரும்.

# நாடும் நல்லாட்சியும்

மக்கள் வாழ்வுக்கு மாண்புமிக்க வழிவகுத்த திருவள்ளுவர் அறத்துப்பாலிலே இல்லறம், துறவறம் எனும் வாழ்வியல்களை வரைந்து காட்டிப், பொருட்பாலிலே அரசியலறத்தைத் தீட்டிக் காட்டிக், காமத்துப்பாலில் காதலின்பத்தை விளக்கியுள்ளார். ஆயிரத்து முந்நூற்று முப்பது குறள்களில் வாழ்வியலை முந்நூற்றெண்பது குறள்களும், அரசியலை எழுநூறு குறள்களும், காதலியலை இருநூற்றைம்பது குறள்களும் இயம்புகின்றன. நாட்டை ஆளும் முறைமையினைத் திருவள்ளுவர் தம் நூலின் பெரும்பகுதியிற் கூறியுள்ளார்.

முற்காலத்தில் கோனாட்சி நிலவிற்று. இக்காலத்தில் பெரிதும் குடியாட்சி நிலைத்துளது. குடியாட்சியிலும் அரசு பெரும்பாலும் ஒருவருடைய ஆட்சிக்குட்பட்டே நடக்கிறது. இவர் முதலமைச்சராவார். ஒரு நாட்டின் அரசை அந் நாட்டின் ''முதலமைச்சருடைய அரசு'' எனக்கூறும் வழக்கே இந்த உண்மையை நன்கு புலப்படுத்தத்தக்கது. முற்கால அரசர்கள் முடியுடை மன்னர்கள் எனின், இக்கால முதலமைச்சர்கள் முடிசூடா மன்னர்

களாவர். எனவே, முடியுடைய மன்னர்களுக்கு இன்றியமையாதனவெனத் திருவள்ளுவர் கூறுந் தகைமைகள் யாவும் முடிசூடா மன்னர்களுக்கும் உரியனவெனக் கொள்ளல் ஏற்புடைத்து. இவ்வாறு கொள்ளின், திருக்குறள் கூறும் அரசியலறம் எல்லோருக்கும் எக்காலத்துக்கும் பொருத்தமானது என்பது புலப்படும்.

ஒரு நாட்டின் நல்லியல்புகளைப் பற்றி வள்ளுவர் நாடு எனும் ஓர் அதிகாரத்தில் பத்துக் குறள்களிலே திறம்பட உரைத்துளர். குறையாத விளைவையும், நல்ல சான்றோரையும், குறைவிலாத செல்வரையும் கொண்டதே ஒரு நல்லநாடு என்று அவர் கூறுகிறார்; பிணி இன்றியும், நிறைந்த செல்வமுடையதாகவும், நல்விளைவுடையதாகவும், நல்இன்பம் நல்குவதாகவும், உட்பகை இல்லாததாகவும், காவல் உடையதாகவும் இருக்கும் நாடே சிறந்த நாடு என்றும் உரைக்கின்றார். எவ்வளவு சிறப்புக்கள் இருந்தாலும், நல்லாட்சி இல்லாத நாடு பயனற்றதாய்ப் போய்விடும் என்று கூறி ஒரு நாட்டின் நல்வாழ்வுக்கு நல்லாட்சியே இன்றியமையாதது என்று வற்புறுத்துகிறார். இதனை எவரும் மறுத்தல் முடியாது.

இஃது உலக வரலாறு புலப்படுத்தும் ஒரு பேருண்மையாகும். இதனை மோசிகீரனார் எனும் புலவர் ''நெல்லும் உயிரன்று, நீரும் உயிரன்றே, மன்னன் உயிர்த்தே மலர்தலை யுலகம்'' என்று தெளிவாக விளக்கியுள்ளார். ''கொடுங்கோலரசன் வாழும்

நாட்டிலும் கொல்புலி வாழும் காடு நல்லது'' எனுங் கூற்று இவ்வுண்மைக்கு அரண் செய்கின்றது. திருவள்ளுவர் ''அரசனைக் கண்கண்ட கடவுள்'' எனவும் கூறி அரசின் தலைமையையும் இன்றியமையாமையையும் விளக்கியுள்ளார். இந்த உண்மையை உணர்ந்தே அவர் அரசைப் பற்றித் தம் நூலின் பெரும் பகுதியிற் கூறியுள்ளார் என்பதை நாம் மறத்தல் கூடாது.

ஒரு நாட்டின் அரசு நல்லதாகவும் இருக்கலாம், கெட்டதாகவும் இருக்கலாம். நல்ல அரசின் தகைமைகள் பலவாகும். இவற்றையெல்லாம் நம் முன்னோர் "செங்கோல்" எனும் ஒரு சொல்லினுள் அடக்கிக் கூறியுளர். கொடிய அரசின் கொடுமைகளையும் ''கொடுங்கோல்'' எனும் ஒரு சொல்லினுள் அடக்கியுளர். இவ்விரு சொல்லாட்சியும் பண்டைத் தமிழ் மக்கள் அரசியற்றுறையை மிகுந்த முதன்மை படைத்ததொன்று என்று கருதினர்கள் என்பதையும், அதனை மிக நுட்பமாக ஆராய்ந்தார்கள் என்பதையும் நன்கு விளக்குகின்றது.

ஓர் அரசு செய்யவேண்டிய கடமைகள் பலவெனினும் முறை செய்தலையும் மக்களைக் காத்தலையுமே அதன் முதன்மையான கடமைகளாகக் கூறலாம். இவற்றை நன்கு செய்வதாலேயே முடியுடை மன்னரும் முடிசூடா மன்னராகிய முதலமைச்சரும் கடவுளின் தன்மையுடையவராகப் பாராட்டப்படுகின்றார்கள்.

''முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறைஎன்று வைக்கப் படும்''

என்பது வள்ளுவர் வாய்மொழி. இவ்விரு பெருங் கடமைகளையும் நன்கு செய்யாமல் ஏனைய வற்றைச் செய்வதால் எவ்வித நிலைத்த பயனையும் பெறல் முடியாது எனவே செங்கோல் ஆட்சி என்பது ஓர் அரசாங்கத்தின் செம்மையான செயல்கள் யாவற்றையும் குறிக்குமெனினும், அது நீதி வழங்குதல், குடிகளைக் காப்பாற்றுதல் எனும் இவ்விரு கடமைகளையுமே சிறப்பாகக் குறிக்கும். இதனைப்போலவே கொடுங்கோல் என்பதும் நீதி வழங்காமலும் காவாமலும் நெறிதவறுதலைச் சிறப்பாகக் குறிக்கும்.

நாட்டுக் கூத்துக்களிலே தொடக்கத்தில் அரசன் அமைச்சர்களை ''நாட்டில் மும்மாரி பொழிகிறதா? விளைவு நல்லாக இருக்கிறதா? மக்கள் நலிவின்றி வாழ்கிறார்களா?'' என்று பலவாறு வினவும் காட்சி ஒன்றுண்டு. செங்கோலாட்சிக்கு மழை வளமும், விளைவுப் பெருக்கமும் மக்களின் நல் வாழ்வும் சான்றுகளாகும். நாட்டில் செங் கோலாட்சி நிலைக்கச் செய்தலே அரசாங்கத்தின் முதற் கடமை என்பதையே இக்காட்சி புலப் படுத்துகிறது. இது

''இயல்புளிக் கோல்ஓச்சும் மன்னவன் நாட்ட
பெயலும் விளையுளுந் தொக்கு'' எனவும்,

''குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு''

எனவும், திருவள்ளுவர் கூறியுள்ளனவற்றையே அடிப்படையாகக் கொண்டது.

ஓர் அரசின் வாழ்வும், சிறப்பும், வெற்றியும் படைப்பலத்தால் நிலைப்பதில்லை. அறநெறி தவருத செங்கோலாட்சியாலேயே நிலைக்கும். இதனைத் திருவள்ளுவர்,

''வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோல்அதூஉங் கோடா தெனின்''

என்று கூறிப் புலப்படுத்துகின்ருர்.

''அறநெறி முதற்றே அரசின் கொற்றம்'' என்கிறது புறநானூறு. ஒரு நாட்டின் அரசியல் அறநெறிப்படாதாயின் அந்நாட்டிலே பல தீமைகள் உண்டாகும். அந்த நாடு உலகத்தின் பழிப்புக்கும் உரியதாகும். அந்த அரசியலை நடாத்தும் கொடுங்கோலரை அறமே அழித்துவிடும் என்பதைச் சிலப்பதிகாரம் சிறப்பாக விளக்குகின்றது. இத்தகைய கொடுங்கோலாட்சியினர் விரைவில் அழிந்தொழிந்து போவர் என்பதைத் திருவள்ளுவர் உலகத்துக்கு இடித்திடித்து அறிவுறுத்துகின்ருர்.

நீதி வழங்கி. மக்களை நெறிப்படுத்தி ஆள வேண்டிய அரசாங்கத்தினர் மக்களுக்குக் கொடுமை

செய்வார்களாயின் அவர்கள் கொலைஞர்களிலும் கொடியவர்களென்று திருவள்ளுவர் கூறுகின்றார். இதற்கு உலக நாடுகளின் வரலாற்றிலே பல சான்றுகள் உண்டு. பல நாடுகளில் வாழும் சிறுபான்மை இனத்தவர்கள் இதைத் தம் அனுபவத்திலேயே கண்டுளர். எனவே,

> ''கொலைமேற்கொண் டாரிற்கொடிதே அலைமேற்கொண்டு
> அல்லவை செய்துஒழுகும் வேந்து''

எனும் வள்ளுவர் வாக்குப் பொய்யா மொழியன்றோ!

ஒரு நாட்டிலே பல இனத்தவர்களும், பல சமயத்தவர்களும், பல கட்சியினரும் வாழ்வர். இவர்கள் யாவரையும் ஒத்த தன்மையராகக் கருதி அரசாங்கம் நீதி வழங்குதல் வேண்டும். ஓரினத்தவரை அணைத்தும், ஏனையோரை அடக்கியும் ஒடுக்கியும் ஆளும் அரசாங்கத்தினர் கொடுங்கோலராவர். இவ்வாறு அரசாங்கம் செய்யின் நீதி கிடைக்காத மக்கள் பேரிடர்ப்படுவர்; கண்ணீர் சிந்துவர். கண்ணகி சிந்திய கண்ணீர் பாண்டிய மன்னனையும் அவன் அரசையும் அழித்தது. நீதி பெறுது அவலப்படும் மக்கள் சிந்தும் கண்ணீரின் ஆற்றலைத் திருவள்ளுவர்,

> ''அல்லற்பட்டு ஆற்றுது அழுத கண்ணீரன்றே
> செல்வத்தைத் தேய்க்கும் படை''

என்று கூறுகின்ருர். இக்கூற்றுக்கும் உலக வரலாற்றிலே பற்பல சான்றுகள் உள.

கொடுங்கோலரசையுடைய நாடு, நாள் தோறும் பல துறைகளிலே கெடுமென்றும் திருவள்ளுவர் கூறுகின்ருர்.

> ''நாடொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
> நாள்தொறும் நாடு கெடும்''

இந்தக் குறளின் உண்மையை இன்று நாம் காண்கிருேமன்றே!

ஒரு நாட்டிலுள்ள ஒருவரோ சிலரோ கொடுமை செய்யின் அவர்களை அரசாங்கம் தண்டித்து நீதி வழங்கும். ஆனுல், அரசாங்கம் கொடுமை செய்யின் அதனைத் திருத்தி நீதி வழிப்படுத்தல் இலகுவானதன்று. பெரும்பான்மை இனத்தின் அரசாங்கமாகிச் சிறுபான்மை இனத்தவரைக் கொடுமைப்படுத்தும் ஓர் அரசாங்கத்தை நீதிநெறிப்படுத்தற்கு உலகில் எவ்வித வழியுமில்லை. இந்தப் பெரும் கொடுமையை உண்ணுட்டுப் பிரச்சினை என்று பிற அரசாங்கங்கள் கூறின் கண்ணை மூடிக் கொள்கின்றன. உலகத்தில் மனித உரிமைகளைக் காத்தற்குத் தோன்றிய ஐக்கிய நாடுகளின் சங்கம் போன்ற உலக மன்றங்களும் இக்கொடுமையை நீக்க வழிவகுக்கவில்லை. எனவே, பல நாடுகளிலுமுள்ள

சிறுபான்மை இனத்தவர்கள் ஒன்றுசேர்ந்து ஒரு நிறுவகத்தை அமைத்து நீதிபெறப் போராடவேண்டியது இன்றியமையாததொன்று.

பெரும்பான்மையினரின் அரசாங்கம் சிறுபான்மையினருக்குப் பெருங் கொடுமை செய்யின் அதனை எதிர்த்துத் தம்முரிமைக்குப் போராடுதற்கே காந்தியடிகள் சத்தியாக்கிரகப் போராட்டத்தை வகுத்தார். இப்போராட்டம் இன்று நலிவடைந்த மக்களுக்குப் பேருதவி செய்கின்றது. இப் போராட்டத்தில் ஈடுபடுவோர் உண்மையிலும், இன்னு செய்யாமையிலும் அசையாத நம்பிக்கையுடையவர்களாயிருந்தாலன்றித் தம் நோக்கத்தை விரைவில் நிறைவேற்றல் முடியாது. எனினும் இந்த அறப்போராட்டம் பொதுவாக உலகத்துக்கும் சிறப்பாகக் கொடுமைக்குட்படுத்தப்பட்டுத் துடிக்கும் சிறுபான்மையினருக்கும் விடுதலையளிக்கும் ஈடிணையற்றதொரு வழியாகும். இந்த வழி வகுப்புக்கும் அடிப்படை திருக்குறளே என்பதைத் திருக்குறளைப் படிப்பவர்கள் நன்குணர்வர்.

இத்தகைய கொடுங்கோலரசாங்கங்களுக்கு ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே திருவள்ளுவர் பெரும் எச்சரிக்கை விடுத்திருக்கின்றார். அவருடைய எச்சரிக்கையைப் பொருட்படுத்தாத அரசாங்கங்கள் யாவும் அழிந்தொழிந்து விட்டமையை உலக வரலாறு நன்கு காட்டுகிறது. இந்த எச்சரிக்கை உய்ய வழிகாணுது, அல்லற்படும் சிறுபான்மை இனத்தவருக்கு ஊக்கத்தையும் நம்பிக்கையையும் அளிக்கிறது.

"கொடுங்கோலாட்சி செய்யும் அரசாங்கத்தின் அரசர்களுக்கும் முதலமைச்சர்களுக்கும் வாழ்நாள் குறைந்து போகும்; அவர்களுடைய செல்வம் அழிந்துபோகும்: அவர்களுடைய அரசாங்கங்கள் கெடுப்பாரில்லாமல் தாமாகவே கெட்டுவிடும்; பழியும் பாவமும் எய்தி விழுந்து விடும்" எனும் எச்சரிக்கைகளைப் பொதிந்துள்ள பின்வரும் குறள்களை உலகம் முழுவதும் ஊன்றிக் கவனித்தல் வேண்டும். இவ்வாறு செய்யின், கொடுங்கோலாட்சியினர் உண்மையை உணர்ந்து செங்கோலாட்சி நடாத்துவதற்கு முயல்வார்கள்.

"இறைகடியன் என்று உரைக்கும் இன்னுச்சொல் வேந்தன்
உறைகடுகி ஒல்லைக் கெடும்"

"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானுங் கெடும்"

"எண்ப தைத்தான் ஓரா முறைசெய்யா மன்னவன்
தண்பதத்தான் தானே கெடும்"

"வெருவந்த செய்தொழுகும் வெங்கோலன் ஆயின்
ஒருவந்தம் ஒல்லைக் கெடும்"

ஒரு நாட்டிற்கு நல்லாட்சி இன்றியமையாதது என்பதைக் கொடுங்கோலாட்சியைப் பின்னணியாக்கி வள்ளுவர் திறம்பட விளக்கியிருப்பது எண்ணி, எண்ணி நயத்தற்குரியது.

# வெற்றிக்கு வழி

மக்கள் பலர் தம் வாழ்விலே வெற்றி காணுது வருந்துதற்குக் காரணம் அவர்கள் தங்களுடைய ஆற்றலே அறியாமையேயாகும். இதனுலேயே தாழ்வு மனப்பான்மையும், சோர்வு மனப்பான்மையும், தோல்வி மனப்பான்மையும் உண்டாகின்றன. இவை உண்டாஞல் மக்களும் அவர்களுடைய இனமும் உயர்வடைதல் முடியாது.

இந்த மனப்பான்மைகளே வளர்ப்பதற்கு ''எல்லாம் விதியின் விளேயாட்டு'' என்ற சாட்டுங் கூறப்படுகிறது. இந்த ''விதி'' என்ற மாயச் சாட்டிஞற் சோர்வடைந்து கெட்டுப்போனவர்கள் அளவிலாதவர்கள். பிறரைக் கொடுமைப்படுத்தி அடக்கி ஆள்பவர்களும், சுரண்டிப் பிழைப்பவர்களும், ஏமாற்றி வாழ்பவர்களும் இந்த விதியின் துணேயிஞற் பெருகுகின்றனர். தன்னம்பிக்கையையும் முயற்சியினேயும் இந்த விதி கெடுத்துவிடுகிறது. இந்த விதிக்கு ஊழ், பால், முறை, உண்மை, தெய்வம், நியதி என்ற பெயர்களுமுண்டு.

இந்த ''எல்லாம் விதிப்படி'' என்றகொள்கை, மக்களுக்குச் செய்த மாபெரும் கொடுமைகளை எல்லாம் கண்டார் வள்ளுவர் பெருமான். ''விதி'' யினைப்பற்றி விரிவாக ஓரதிகாரத்தில் அவர் விளக்குகிறார். விதியிலும் மிகுந்த வலிமையுள்ளது வேறொன்றும் இல்லை என்று கூறுவதையும் அவர் ஏற்றுக்கொள்கிறார்.

''ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும்'', என்றியம்புகிறார்.

இத்தகைய பேராற்றல் வாய்ந்தது என்று கூறப்படும் இந்த விதியையும் வெல்லலாம்; கம்பர் கூறுவது போல ''விதிக்கும் விதியாகலாம்'' என்று அவர் உறுதி கூறுகிறார், தளராத முயற்சியினால் விதியை வெல்லலாம் என்று வழிகாட்டுகிறார்; முயற்சியின் பெருமையை — வெற்றிக்கு வழியை — மக்கள் மனத்திற் பதியச் செய்கிறார். மக்கள் மனத்தில் வள்ளுவர் பெருமான் உண்டாக்கிய திருப்பங்களில் அரிய பெரிய புரட்சித் திருப்பம் இதுதான் எனலாம்.

''ஊழையும் உப்பக்கங் காண்பர் உலைவுஇன்றித்
தாழாது உஞற்று பவர்''

இந்தத் திருக்குறள் ''விதியின் விளையாட்டு'' ஊழின் விளைவு'', தெய்வச் செயல்'' என்று கூறிக் கூறிச் சோர்ந்து, உக்கி உடைந்துபோன உள்ளங்களுக்கு நம்பிக்கை எனும் ஊசி மருந்தை ஏற்றி ஊக்கம் அளிக்கிறது.

''தெய்வத்தால் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்'',

எனும் குறளில் ''விதிவிளையாடினாலும்'' உழைப்புக்கு ஏற்ற ஊதியம் கிடைக்கும்; முயற்சிக்குத் தக்க கூலி பெறலாம், என அவர் கூறி மக்களை உழைக்குமாறு ஊக்குகிறார்; உழைக்காமல் உயர்ச்சி அடைய முடியாது, வெற்றிபெற முடியாது என்பதை எல்லோருடைய உள்ளத்திலும் பதியவைக்கிறார். முன்வினைப் பயனைக் கருதாமலும், பிறர் உதவியை நாடாமலும் மக்கள் தம்மைத் தாமே உயர்த்தலாம் என்று அழுத்தந் திருத்தமாக எடுத்துக்காட்டி, அவ்வாறு உயர்த்துவதற்கு வழி வகுத்த தனிப்பெருமையும் வள்ளுவர் பெருமானுக்கே உரியது.

ஓர் அரிய செயலைச் செய்யுமாறு ஒருவரைக் கேட்டால் அவர் உடனே ''இதை நான் செய்வேனா? எனக்கு இதைச் செய்யத் தகுதி உண்டா! சிறிய வனாகிய என்னை விட்டு விடுங்கள்'' என்று கூறித் தளர்ச்சி அடைவதை நாம் நாடோறுங் காண்கிறோம். இவ்வாறு சொல்லாதவர்கள், தம் தகுதியின்மையைக் காட்ட விரும்பாமல் ''எமக்கு நேரமில்லை, இப்பொழுது வசதியில்லை'' என்று சாட்டுச் சொல்லிக் கடத்தி விடுகிறார்கள்.

படிக்கும் மாணவர்கள் சிலர், பாடங்கள் சிலவற்றைத தம்மாலே படிக்கமுடியாது என்று ஒதுக்குகிறார்கள். சில மாண்வர்கள் நன்கு படித்துப் பரீட்சைகளில் முதல் வகுப்பில் தேறினால், சோம்பலுள்ள மாணவர்கள் ''அவர்களைப்போல் நாங்கள்

செய்ய முடியுமா? அவர்கள் கெட்டிக்காரர், அவர்களுக்குப் பல வாய்ப்புக்களுண்டு'' என்று கூறித் தங்களைத் தேற்றிக் கொள்கிறார்கள்.

அரிய கருமங்களைச் செய்கிறவர்களுடைய ஆற்றலும், தகுதியும், பெருமையும் பலரிடத்து இல்லை என்பது உண்மைதான். ''இல்லையே'' என்று எண்ணித் தளர்ச்சி அடைந்துவிடக்கூடாது. அவற்றைப் பெற்ற பின்னரே நாம் முயல்வோம் என்று தளர்ந்து இருந்துவிட்டால், எக்காலத்திலும் அவற்றைப் பெறுதல் முடியாது. ஆகையால் தளர்ச்சி அடையாமல் முயலுங்கள், பெருமை தானாகவே வந்து விடும் என்று அருமையான வழியினைக் காட்டுகிறார் வள்ளுவர்.

''அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்.''

என்பது வள்ளுவர் வாக்கு.

பலவற்றைப் பெறவேண்டுமென்று மக்கள் பலர் மனக்கோட்டை கட்டுகிறார்கள். ஒருநாள் கட்டிய கோட்டைகளை அடுத்தநாள் அழித்து வேறு கோட்டைகளைக் கட்டுகிறார்கள். இவ்வாறு கட்டுவதும் அழிப்பதுமாகக் காலங் கழிப்பவர் பலர். இவர்கள் எண்ணியதைப் பெற வழி தெரியாமல் வீணில் காலங்கழிக்கிறார்கள்.

எண்ணுவது யாவருஞ் செய்யத் தக்கது; மிக மிக இலகுவானது. எண்ணியதைப் பெறலாமா

எனும் ஏக்கம் மக்களினத்தை எப்பொழுதும் வாட்டுகிறது. எண்ணியதைப் பெறலாமா என்பதை அறியச் சாத்திரங் கேட்கிறுர்கள் சிலர். எண்ணியதைப் பெற நேர்த்திக் கடன்வைக்கிறுர்கள் சிலர்.

எண்ணியதைப் பெறலாம், எண்ணியவாறே பெறலாம் என்று கூறி வழி காட்டுகிறவர் ஒருவர் இருக்கிறுர் என்றுல் அவரை மக்கள் 'சும்மா' விடுவார்களா'? எண்ணியதை எண்ணியவாறு பெறும் வழியை வள்ளுவர்பெருமான் சொல்கிறுர்.

''எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்''

என்கிறுர் அவர். மனத் திண்மையுடன் — உறுதியுடன் முயன்றுல் எண்ணியதை எண்ணியவாறு பெறலாம் என்பது இதன் கருத்தாகும்.

நெப்போலியனுடைய அகராதியில் செய்ய முடியாதது எனுஞ் சொல் இல்லை என்று ஒரு கதை சொல்வார்கள். அவன் எதையுஞ் செய்து முடிக்கும் ஆற்றல் வாய்ந்தவன் என்பதை இக் கதையாலே புலப்படுத்துவர். ஆனுல் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே திருவள்ளுவர் இந்த உலகத்துக்கு ஓர் உண்மையை அறிவுறுத்தி இருக்கிறுர். வள்ளுவர் கூறிய உண்மைக்கு இலக்காகப் பல பெரியார்கள் வாழ்ந்துளர். அவர்களுள்ளே நெப்போலியனும் ஒருவன் எனலாம். மறதி

யால்— சோர்வால் தளர்ச்சியடையாமல் உள்ளத்து உறுதியுடன் ஆராய்ந்து செய்பவர்களுக்குச் செய்ய முடியாத காரியம் இல்லை என்று திருவள்ளுவர் உரைக்கிறார்.

''அரியவென்று ஆகா தவில்லை பொச்சாவாக்
கருவியாற் போற்றிச் செயின்'' என்பது அவர் வாய்மொழி.

மறவாத மனத்துடன் ஆராய்ந்து செய்தால் ஒருவனால் செய்ய முடியாத காரியங்கள் இல்லை என்று கூறிக் காரியசித்தியின் இரகசியத்தை இக் குறள் நன்கு விளக்குகிறது. சோர்வினாலும், தளர்ச்சியினாலும், போதிய ஆராய்வு இன்மையாலுமே பலர் தம் தொழில்களை முற்ற முடியச் செய்யாமல் தோல்வி அடைகின்றனர். மனத் திட்பத்துடன் எண்ணி எண்ணிச் செய்யும் எக்காரியமும் வெற்றியீட்டும் என்று வள்ளுவர் உறுதி கூறுகிறார்.

''தெரிந்த இனத்தொடு தேர்ந்துஎண்ணிச் செய்வார்க்கு
அரும்பொருள் யாதுஒன்றும் இல்''

ஒரு தொழிலைச் செய்யத் தொடங்குமுன் அதனை நன்கு செய்து வெற்றியீட்டுதற்கு இன்றியமையாத பொருள், கருவி, காலம், இடம் முதலியவற்றை நன்கு ஆராய்ந்து தொடங்குதல் வேண்டும். இவற்றை ஆராய்ந்து, வெற்றியீட்டலாம் என்று எண்ணித் தொடங்கிவிட்டால் அதைச் செய்யும்பொழுது இடையிடையே எதற்கும் அசையாமலும் விட்டுக்கொடுக்காமலும் செய்யவேண்டும்.

சிறு இடர் வந்தவுடன் கலங்கிவிட்டால் எடுத்துக் கொண்ட தொழிலில் வெற்றிகாணல் முடியாது.

கலக்கமின்றிச் செய்யும்பொழுது பின்னர் செய்வோம் என்று சிலவற்றைத் தள்ளிப்போடும் வழக்கமும் மக்களிடையே உண்டு. இவ்வாறு ஒரு தொழிலை நீடிப்பதால் அத் தொழிலில் வெற்றி பெற முடியாமற் போகலாம். எனவே காலத்தைக் கடத்தாமல் தொழிலை விரைந்து செய்தல் வேண்டும். வெற்றியீட்ட விரும்புபவர்களுக்கு அசையாமையும் காலத்தை நீடிக்காமையும் இன்றியமையாதன. அசையாமையைத் துளங்காமை எனவும், நீடிக்காமையைத் தூங்காமை எனவும் வள்ளுவர் கூறுகிறார்.

''கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது
தூக்கங் கடிந்து செயல்''

என்பது அவருடைய அறிவுரை.

ஒரு தொழிலைச் செய்யும்பொழுது துன்பம் உண்டாகலாம். அவ்வாறு தொடக்கத்தில் உண்டாகும் துன்பத்தைக் கண்டு தளராமலும் தயங்காமலும் செய்தல் வேண்டும். தொழிலைச் செய்து முடிக்கும்பொழுது அதனால் பெறும் இன்பத்தை நினைத்தால் தொடக்கத்தில் உண்டாகும் துன்பத்தைத் தாங்கித் தளராமல் செய்யும் துணிவு பிறக்கும், எனவே,

''துன்ப முறவரினுஞ் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை'' என வள்ளுவர் பணிக்கின்றார்.

இத் திருக்குறள்களில் ஒன்றினைப் பின்பற்றினாலும்எல்லாத் துறையிலும் யாவரும் வெற்றி ஈட்டலாம்.

# மலரினும் மெல்லிது

திருநிறை மிசிகாமி எனும் சிங்களப் பெண் மணி திருக்குறளை முதன் முதலாகச் சிங்களத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டார். இந் நூலுக்கு ஆங்கில நாளேடொன்றில் மதிப்புரை எழுதிய அறிஞர் ஒருவர் திருக்குறளின் அருமை பெருமை களைப் பிறநூல்களோடு ஒப்பிட்டு விளக்கினர்; காமத்துப்பாலின் சிறப்பியல்புகளை நுட்பமாக எடுத்துக் காட்டி வியந்தார்.

''நீங்கிற் றெறூஉங் குறுகுங்காற் றண்ணெனும்
தீயாண்டுப் பெற்ருள் இவள்''

எனும் திருக்குறளை எடுத்துக் காட்டிப் பெண் களைப் பற்றியுரைத்த ஏனைய புலவர்கள் இவ்வாறு நிறைவாகக் கூறமுடியாதிடர்ப்பட்டனர் என்றும் அவர் எழுதியுள்ளார்.

தன்னிகரில்லாத தமிழ்மறையாந் திருக் குறளின் முப்பாலும் மக்கள் யாவருக்கும் வியப் பூட்டுந் தன்மையன வெனினும் காமத்துப்பால் பிற மொழியாளரைப் பெரிதும் கவரும் ஆற்றல் வாய்ந்த

தாயிருக்கிறது. இந்திய நூல்களிற் சிறந்தன யாவும் மறு உலகவாழ்வினை மக்களுக்கு நினை வூட்டி இவ்வுலக வாழ்வினை அவ்வுலக வாழ்வுக்கு வழிப்படுத்தும் முறையிலே வாழவேண்டும் என்றே பெரும்பாலும் அறிவுரை பகர்கின்றன. இவ் வுலக இன்பங்களைத் துறந்தாலன்றி மேலுலகில் நல்லின்பத்தை அடைய முடியாது என்றும், எனவே இவ்வுலகில் மண், பெண், பொன் முதலியவற்றைத் துறத்தல் வேண்டும் என்றும் அவை கூறுகின்றன. சுருங்கக்கூறின், பல நூல் கள் நெறி முறைப்படி ஐம்புலன் ஆரத் துய்க்கும் இன்பத்தைத் துறக்கவேண்டும் என் றுரைத்து இயற்கைக்கு மாறானதொரு எதிர்மறை வாழ்வை வாழுமாறு வலியுறுத்துகின்றன எனலாம்.

இந்திய நூல்களின் இத்தகைய எதிர்மறை மனப்பான்மையை அறிந்த பிறமொழியினர் திருக் குறளிற் காமத்துப்பாலைப் படிக்கும்பொழுது இவ் வுலக இன்பத்தை அஃது அழுத்திக் கூறுந் திறனை அறிந்து பெருவியப்படைகின்றனர். இருநூற்றைம் பது குறள்களில் இவ்வுலக இன்பங்களிற் சிறந்த தாகப் போற்றப்படும் காதலின்பத்தைப் பற்றி வள்ளுவர் கூறியிருக்கிறார்.

காமத்தைப் பற்றிப் பல நாடுகளிலே பல் வகையான நூல்கள் தோன்றியுள. இலக்கிய நூல்களிலும் புலவர்கள் பலவகையாகக் காதல்

வாழ்வைத் தீட்டிக் காட்டியுளர். எனினும் வள்ளு வரைப் போலக் காமத்தினைப் பற்றி முழுமை யாகவும், நாகரிகமாகவும் ஒருவருங் கூறவில்லை எனலாம். அறத்துப்பால், பொருட்பால் எனும் இரு பாலிலும் தம் கருத்துக்களைத் தாமாகவே உரைத்த வள்ளுவர் காமத்துப்பாலில் தலைவன், தலைவி, பாங்கி முதலியவர்களின் வாயிலாகக் காமத்தைப் பற்றிப் பேசுகிறார். இதனால் காமத் துப்பால் ஓர் உயிர்ப்புள்ள நாடகமாக அமைந்து விளங்குகிறது. காமத்துப்பாலைப் படிப்பவர்களுடன் இப்பாத்திரங்கள் பேசுகின்றன.

காமசூத்திரம், கொக்கோகம் போன்ற நூல் களை ஆபாசம் நிறைந்தவை எனச் சமுதாயம் ஒதுக்கித் தள்ளுகிறது. இவற்றில் கூறப்படு பவற்றை,

''கண்டுகேட்டு உண்டுஉயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே யுள'' எனவும்,

(ஒள்ளிய வளையல்களை உடைய பெண்ணிடத்து வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு பொருள் களினால் பெறப்படும் ஐம்புல இன்பங்களாகிய கண்ணாற் காணலும், காதாற் கேட்டலும், நாவா லுண்ணலும், மூக்கால் மூகர்தலும், மெய்யால் தீண்டலும் ஒன்றாக உளவாயின.)

''வீழும் இருவர்க்கு இனிதே வளியிடை
போழப் படா அமுயக்கு'' எனவும்

(ஒருவரையொருவர் விரும்பும் காதலரிருவருக்கும் காற்று இடையிலே புகாத சேர்க்கை இனியது)

பலவாறு வள்ளுவர் கூறும்பொழுது இவற்றை யாவரும் வியந்து நயக்கின்றனர். ஏன்? பச்சைப்படியாகச் சொல்லிச் செய்து பார்க்கத் தூண்டும் உடல் உணர்ச்சியை அந்நூல்கள் உண்டாக்குகின்றன. திருக்குறளோ இலக்கியப் பண்பை ஏற்றி இவற்றை நயத்தக்க நாகரிக முறையிற் கூறுகின்றது. இதனுல் உடலுணர்வு கிளம்பாமல் உள்ளத்திலே அழகியல் உணர்வு — கலேயுணர்வு — தோன்றி மக்களே மகிழ்விக்கிறது. பொறிகளால் நுகராது உள்ளத்தால் உணர்ந்தின்புறச் செய்யும் பேராற்றலுடைமை இலக்கியம் போன்ற இன்பக் கலேகளின் தனிச்சிறப்பன்றே!

காமத்தின் சிறப்புக்களே மக்களுக்கு விளக்குவதற்கு வள்ளுவர் பொருத்தமான உவமைகளேயும் உதாரணங்களேயும் கையாண்டிருக்கிருர். சொல்லிறந்து நிற்கும் உணர்ச்சிகளே எவ்வாறுநுட்பமாகவுந் தெளிவாகவும் உரைக்கலாம் என்பதைக் காமத்துப் பாலில் வள்ளுவர் காட்டியிருக்கிருர். கடுகைத் துளேத்து ஏழ்கடலேப் புகுத்துவதைப்போல, சில சொற்களுள்ளே பரந்த கருத்துக்களேயும் நுண்ணிய உணர்ச்சிகளேயும் எவ்வாறு புகுத்திப் பொலியச் செய்யலாம் என்பதைக் காமத்துப்பாலில் யாவருங் காணலாம். காமத்துப்பாலில் உள்ள ஒவ்வொரு குறளும் ஒவ்வொரு காவியமாக மிளிர்கின்றது.

உதாரணமாகக் காமத்தின் இயல்பையும், அதன் செவ்வியையும் பற்றிக் கூறும் ஒரு குறளை ஈண்டு நோக்குவோம்.

காமம் எத்தகையது? காம உணர்ச்சி எல்லோருக்கும் இயல்பாக உண்டாவதெனினும் காமத்தின் இயல்பை எல்லோரும் அறிவார்களா?

இக்காலத்தில் காமம் என்ற சொல் இழிந்த பொருளைக் குறிப்பதாகக் கொள்ளப்படுகிறது. காமமென்பது முறை தவறி அளவுகடந்து அனுபவிக்கும் இன்பம் என ஒதுக்கப்படுகிறது. காதல் எனுஞ் சொல்லே சிறந்த பொருள் உடையதாகப் போற்றப்படுகிறது. எனினும் காமம் எனுஞ் சொல் முற்காலத்தில் சிறந்த பொருளுடையதாகக் கொள்ளப்பட்டது. சங்கநூல்களிலே காமம் எனுஞ் சொல் இப்பொருளில் ஆளப்பட்டுள்ளது. தொல்காப்பியத்திலே காதலின்பம் 'காமக்கூட்டம்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஒத்த காதல் 'காமம்' எனத் தனிமையாகவும் ஒவ்வாக்காதல் ஒருதலைக்காமம், பொருந்தாக் காமம் என அடையடுத்தும் வழங்கிற்று. ஒத்தகாதல்—காமம் ஐந்திணையாகவும் ஒருதலைக்காமம் கைக்கிளையாகவும், பொருந்தாக்காமம் பெருந்திணையாகவுங் கொள்ளப்பட்டன. அக்கால வழக்கின்படியே வள்ளுவரும் தம் நூலிலே காமம் எனுஞ் சொல்லையே பெரிதும் ஆண்டார். இச்சொல் காமத்துப் பாலிலே முப்பத்தேழு குறள்களில் காணப்படுகிறது.

இயல்பூக்கங்களில் மிகுந்த வலிமை படைத்தது காம உணர்ச்சி. மக்களை மயக்கும் ஆற்றலிலும் இது மிக்கது. இதனுலே இவ்வுணர்ச்சியை அடக்குதல் வேண்டுமெனப் பிற்கால நூல்கள் வலியுறுத்தின. காமத்தைப்பற்றி அறிய முயலுதல் இழிவான செயலாகவும் கொள்ளப்பட்டது. காம உணர்ச்சியைத் தூண்டுவனவற்றில் ஒரு வெறுப்பை உண்டாக்கவும் சமுதாயம் முற்பட்டது. இந்த அடக்குமுறை மக்களிடையே காமத்தைப்பற்றி நுணுகி அறியும் ஆவலை உண்டாக்கிற்று. இந்த ஆவலைப் பயன்படுத்திப் பணமீட்டுதற்கு இப்பொழுது பல பத்திரிகைகளும் நூல்களும் முயன்று மக்களிடையே 'ஆபாசங்களை' மலியச் செய்கின்றன. இதனல் காதலைப் பற்றிய அறிவை இளைஞர்களுக்கு முறையாக ஊட்டி அவர்களைக் காப்பாற்ற வேண்டுமென்று கல்விநூல் வல்லுநரும் உளநூல் வல்லுநரும் இப்பொழுது கூறுகின்றனர்.

காமம் வெறுக்கப்பட வேண்டியதன்று; இழிவானதன்று. அது மெல்லியது. உலகத்துப் பொருள்களில் மெல்லியது மலர் என்பர். வண்டூதினலும், மலர்ந்து சிறிது நேரங் கழிந்தாலும், தொட்டாலும், மோந்தாலும் மலரின் மென்மை கிதைந்து விடும். இத்தகைய மலரிலும் மெல்லியது காமம். இதனை அறிந்து அனுபவிப்பவர் சிலரேயாவர் என்கிருர் வள்ளுவர்.

"மலரினு மெல்லிது காமம் சிலர்அதன்
செவ்வி தலைப்படு வார்"

என்பது அவர் வாக்கு.

காம இன்பத்தை நன்கு நுகர்தற்குரிய ஆணும் பெண்ணும் பல துறைகளில் ஒப்புடையவர்களாயிருத்தல் வேண்டும். பிறப்பு, ஒழுக்கம், வயது, உருவம், அன்பு, நிறை, அருள், அறிவு, செல்வம் முதலியனவே இந்த ஒப்புக்கள் எனத் தொல்காப்பியங் கூறுகிறது. "கண்டதும் காதல் கொண்டோம்" என்று கூறிப்பின் துன்புறுவோர் இந்த ஒப்புமைகள் தங்களிருவரிடமும் இல்லாமையாலேயே துன்பம் பிறக்கிறதென்று அறிதல் இன்றியமையாதது. இத்தகைய ஒற்றுமையையுடையவரும் இலகுவில் காமத்தை அனுபவித்தல் சாலாது. இவ்வாறு ஒப்புமை அமையப்பெற்ற காதலரிருவருடைய குறிப்பும், விருப்பும், நுகர்ச்சியும், இன்பமும் ஒரே நேரத்தில் ஒத்து அமைதல் வேண்டும். இவை எல்லாம் ஒத்து நுகருதற்குப் பொருத்தமான காலம் வேண்டும்; மெல்லணை, மலர், சாந்து, தென்றல், நிலா முதலிய உபகரணங்கள் வேண்டும். இவற்றுள் ஒன்றேனும் சிறிது வேறுபட்டால் காமம் வாடிவிடும்; குறைந்துவிடும். இத்தகைய அருமைப்பாடுகளை உடைமையால் காமத்தை மலரினும் மெல்லிது என்றார் வள்ளுவர்.

இவற்றை ஆராயுங்கால் காமத்தின் அருமையையும், சிறப்பையும், முழுமையையும் எவ்வளவு நுட்பமாக இக்குறளில் வள்ளுவர் கூறியிருக்கிறார் என்பது நன்கு புலப்படுகிறதன்றோ!

# நிறைவிளக்கு

ஒளி இருள் எனும் இருமைப் பொருள்களை மக்கள் யாவரும் அறிவர். ஒளியை நாடுவதும் இருளை வெறுப்பதும் மக்களியல்பு, இராக்காலத்தில் இருளினுல் உண்டாகும் இன்னல்களையும், இடர்களை யும் பொறுக்க முடியாத மக்கள் இருளை அகற்றி ஒளிதரும் பொருள்களைக் கண்டு பிடிப்பதில் பல்லா யிர ஆண்டுகளாக முயன்று வருகிறுர்கள்! இம்முயற் சியின் பயனுக விளக்கினை உருவாக்கினுர்கள்.

வீட்டில் மட்டுமன்றி வெளியிலுமுள்ள இருட்டை நீக்குதற்குரிய விளக்குகளைச் செய்தற்கும், மழை காற்று முதலியவற்ருற் பாதிக்கப்படாத விளக்குக ளைக் கண்டு பிடித்தற்கும், அறிஞர்கள் முயன்று பலவகையான விளக்குகளைப் படைத்துளர். மின் விளக்கு, வாயுவிளக்கு, முதலியன இக்காலத்திலே இருளையகற்றும் விளக்குகளிற் சிறந்தன. அணுவிளக் கும் இனித்தோன்றலாம். இரவினைப் பகல்போன்ற ஒளியுடையதாகச் செய்யும் முயற்சியிலும் விஞ்ஞா னம் முன்னேற்றம் அடையலாம். செயற்கை மதி கள் வாயிலாகப் பூமிக்கு இரவிலும் ஒளியைக் கொடு த்தற்கு விஞ்ஞானிகள் முயல்வதாகவும் அறிகிறேம்.

சுருங்கக் கூறின் மனிதர்கள் சிந்திக்கத் தொடங்கிய காலந் தொடக்கம் இருளை அகற்றி ஒளியைப் பரப்பும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர் எனலாம்.

இராக்காலத்திலே தோன்றும் இருள் புறஇருள் எனப்படும். இந்த இருள் மிகுந்து விட்டால் பார்ப்பதற்குரிய கண் தன் தொழிலைச் செய்யாது; மக்கள் திக்குத் தெரியாமல் திகைப்படைவார்கள். இருந்த இடத்தைவிட்டு அசையமுடியாத நிலைமை உண்டாகும். இந்தக் கொடிய புறஇருள்போல மக்களுடைய உள்ளத்திலும் ஒருவகையான இருள் உண்டு. அஃது அகவிருள் எனப்படும். இதனை அஞ்ஞானம், அறியாமை எனவும் கூறுவர்.

புறஇருள் முகத்துக் கண்ணை மறைப்பதுபோல இந்தஅகவிருள் அகக்கண்ணை மறைத்துவிடும். இந்த அகவிருளை நன்கு நீக்கினாலன்றி, மக்கள் அறிவுடையவர்களாக, வாழும் முறையறிந்து, வாழுதல் முடியாது. எனவே இந்த அகவிருளை நீக்குவதற்கு அறிஞர்கள் பலர் விளக்குகள் பலவற்றை ஏற்றினார்கள். புறஇருளை நீக்கும் விளக்குகள்போல, இவையும் பலவகையினவாய் அமைந்துள. குறிப்பிட்ட காலத்துக்கு மட்டும் ஒளிவிட்டனசில; ஏற்றப்பட்ட இடத்தில் மட்டும் இருளகற்றின சில; போதிய ஒளியைத் தராமல் மங்கி மங்கி அணைந்தன சில. இத்தகைய குறைபாடுகளின்றி என்றும் எங்குமுள்ள மக்களுடைய அகவிருளை நீக்கும் ஒளிவிளக்கினைப் பேரறிஞர் ஒருவர் ஏற்றினார். அவர் யார்? அவருடைய விளக்குயாது? இவ்வினாக்களுக்குத திருவள்ளுவர் — திருக்குறள் என்பனவே விடை என்பதை இன்று

தமிழ் மக்களுக்கு—ஏன் உலக மக்களுக்கு—எடுத்துக் கூறவேண்டியதில்லே.

திருக்குறளின் பெருமைகளேப் பன் முகமாக ஆய்ந்து உரைக்கும் வெண்பாக்களேயுடையது திருவள்ளுவமாலே எனும் நூல். இதிலுள்ள பாடல் களேப் பாடினுேர் பற்றிக் கருத்து வேற்றுமைகள் பலவுள. எனினும், இதிலுள்ள செய்யுள்கள் பல திருக்குறளின் திறத்திஃன நன்கு ஆய்ந்துரைக்கும் சீர்மையுடையன என்பதை யாவரும் ஏற்றுக் கொள்வர். இச்செய்யுள்களில் நப்பாலத்தனுர் பாடிய ஒரு வெண்பா **"திருவள்ளுவர் மக்களின் உள்ளிருஃள நீக்கும் விளக்கைஏற்றினுர்"** என்று உரைக்கிறது; திருக்குறளின் பகுதிகஃள, விளக்கின் உறுப்புக்களோடு அழகுறப் பொருத்திக் காட்டு கிறது.

இக்காலத்திலே பலவகை விளக்குகள் இருப்பி னும், இச் செய்யுள் தோன்றிய காலத்திலே அகலில் திரியிட்டு, நெய் விட்டெரிக்கும் விளக்கே எங்கும் பொதுவாக இருந்தது. எனவே இத்தகைய விளக் கையே புலவர்கள் அக்காலத்தில் உவமைக்கும் உரு வகத்துக்கும் பயன்படுத்தினர். திருநாவுக்கரசரும், பொய்கையாழ்வாரும், பூதத்தாழ்வாரும் இத்த கைய விளக்கைப் படைத்துளர். நப்பாலத்தனுரும் இந்த விளக்குடனேதான் திருக்குறஃள இஃணத்துக் காட்டினுர்.

விளக்கிலே நெய்யைக் கொள்ளும் பகுதியாகிய அகல், தகளி எனவும் படும். 'வள்ளுவர் ஏற்றிய திருக்குறளாகிய விளக்குக்குத் தகளி அறமாகும்; திரி பொருளாகும்; நெய் இன்பமாகும். நெருப்புச் சொல்லாகும்; தண்டு குறட்பாவாகும்; என்று அப்புலவர் பொருத்திக் காட்டினர். ஓரிடத்திலேற்றிய விளக்கு அவ்விடத்திலுள்ள இருளை நீக்குவதுபோல, வள்ளுவர் ஏற்றிய விளக்கு உலகத்தில் வாழ்வோர்தம் உள்ளிருளை நீக்கும் என்று அவர் அவ்விளக்கின் பயனையும் பகர்ந்துள்ளார்.

''அறந்தகளி ஆன்ற பொருள்திரி இன்பு
சிறந்தநெய் செஞ்சொற்றீத் தண்டு—குறும்பாவா
வள்ளுவனர் ஏற்றினர் வையத்து வாழ்வார்கள்
உள்ளிருள் நீக்கும் விளக்கு''

இதுதான் அவருடைய பாட்டு.

திருக்குறள், அறம், பொருள், இன்பம் எனும் முப்பொருளையும் முற்ற முழுதாக அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் எனும் முப்பால்களிற் கூறுகிறது. இம் மூன்று பொருள்களிலே, எவ்வித மாறுபாடுமின்றி என்றும், எங்கும் ஒருதன்மைத் தாய்நிலைத்து நிற்பதும், யாவற்றையும் தாங்கும் திறப்பாடுடையதும் அறமாகும். எனவே புலவர் **அறம் தகளியெனப்** பொருத்தமாக, அறத்துக்கு எவ்வித அடையுங் கொடுக்காது உரைத்தார். நெய்யையுந் திரியையுந் தகளி தாங்குவதுபோல, பொருளை

யும், இன்பத்தையும், அறம் தாங்குதல் வேண்டும். அறத்திற் கால்கொள்ளாத பொருளும் இன்பமும் பயனளிப்பதில்லை. இந்த நுட்பத்தை உணர்ந்தே புலவர் **அறத்தைத் தகளி** என்றார்.

பொருளைத் திரி என்று கூறிய புலவர் அப் பொருள் நல்வழியில் ஈட்டப்படும் பொருள் என்பதை **“ஆன்ற பொருள்”** என்று கூறிப் புலப்படுத்தினார். ‘திறனறிந்து தீதின்றி வந்த பொருள்’ என வள்ளுவர் கூறியதை ’ஆன்ற’ என்ற ஒரு சொல்லினுள்ளே பொதிந்துள்ள திறப்பாடு எண்ணி எண்ணி வியத்தற்குரியது. திரிநன்றாக அமையாவிடில் அதிலே தீயினைக் கொழுத்தல் முடியாது; கொழுத்தினாலும் நிலைத்து நின்று எரியாது. இதைப்போலவே மக்கள் வாழ்விலும், மாண்புடைய வழிகளிலே தேடாத பொருள் நிலைத்து நின்று நற்பயன் அளிக்காது. இதனை விளக்குதற்கே புலவர் ‘‘ஆன்ற பொருள்’’ என்றார்.

விளக்கு நன்கு எரிதற்குத் திரி மட்டும் நல்லதாய் அமைதல் போதாது. நெய்யும் நல்லதாய் இருத்தல் வேண்டும். இதனைப் புலவர் **“இன்பு சிறந்த நெய்”** என்று கூறிப் புலப்படுத்தியுளர், ‘அறத்தால் வருவதே இன்பம்’ என்றார் வள்ளுவர். அறநெறியில் வரும் நல்லின்பமே அன்பொடு புணர்ந்த ஐந்திணை இன்பமே சிறந்த நெய்யாக அமையும் என்பதை வலியுறுத்தவே புலவர் **“இன்பு சிறந்த நெய்”** என்று உரைத்தார். வேதம் கூறிய இராக்கதம்,

பைசாசம் முதலிய மன்றல் வகைகளையும், ஒரு தலைக்காமம், பொருந்தாக்காமம் முதலியவற்றை யும் 'சிறந்த' எனும்அடையால் ஒதுக்கித்தள்ளித் திருக்குறள் கூறும் இன்பம் தமிழ் நெறியே என் பதையும் நிலைநாட்டினர்.

அறத்தை அகலாகவும், பொருளைத் திரியாக வும், இன்பத்தை நெய்யாகவும் கொண்டு வள்ளு வர் ஆக்கிய விளக்கில் நின்றெரியும் தீ அவருடைய 'செஞ் சொல்' எனப் புலவர் உரைத்தார். வள்ளு வரைப் போலச் சொல்லின் திறன் அறிந்தவர் இவ்வுலகில் இல்லை எனலாம். சொல்வன்மை என்று ஓர் அதிகாரம் வகுத்துச் சொல்லின் திறனை விளக்கியவர் அவர். வெல்லுஞ் சொல், கேட்டார்ப் பிணிக்குஞ் சொல், பகைவர் விரும் புஞ் சொல் முதலியவற்றை அறிந்தவர் அவர். திறனறிந்து சொல்லவும், நிரந்து இனிது சொல்ல வும், சோர்வின்றிச் சொல்லவும், சுருங்கச் சொல்ல வும் வல்லவர் அவர். சொல்லின் தொகையினை யும், வகையினையும், நடையினையும். நல்லாற்றலை யும் நன்கு தெரிந்தவர் அவர். எனவே இத்தகைய பேராற்றலும், பேரறிவும் நிறைந்த அவர் சிறந்த பயன்தரும் சொற்களையே ஆண்டு, திருக்குறளை இயற்றினர் என்பதிற் சிறிதும் ஐயமில்லை. அவரு டைய சொற்கள் என்றும் பொய்யாத, மங் காத, மறையாத சொற்கள் என்பதையும் அவர் ஏற்றிய சொற்களாகிய தீ என்றும் அணையாத தீ என்பதையும் ''செஞ்சொல்'' எனுந் தொடராலே புலவர் திறம்பட உணர்த்தினர்.

முற்காலத்தில், விளக்கின் ஒளியைப் பரந்த இடத்திற் பரவச்செய்வதற்குத் தண்டினைப் பயன் படுத்தினர். இத் தண்டு, விளக்குத்தாள் எனவும் படும். இத்தண்டு உயர உயர விளக்கின் ஒளி பரவுமிடம் பெருகும். 'குன்றின் மேலிட்டவிளக்கு' எனும் பழைய உரை இந்த உண்மையை நன்கு விளக்குகிறது. அளவில்லாத ஒளியையுடைய விளக் கினுக்குப் பெருந்தண்டு வேண்டியதில்லை. குறுந் தண்டே போதும். திருவள்ளுவர் ஏற்றிய விளக்கு மிகுந்த ஒளியினையுடையதாகையால் அதற்குப் பெருந்தண்டு வேண்டியதில்லை. குறுந்தண்டிலேயே அது வைக்கப்பட்டுளது என்பதைப் புலவர் "**தண்டு குறும்பாவா**" எனுந் தொடரினுல் விளக்கினுர். தமிழிலுள்ள பா வகைகளில் மிகக் குறுகியது குறட்பா வள்ளுவர் இந்தக் குறும்பாவாலேயே திருக்குறளை இயற்றினுர். தண்டின் சிறுமையினுல் விளக்கொளியின் பெருமையைப் புலப்படுத்துந் திறன் உணர்ந்து மகிழ்தற்குரியது.

இவ்வாறு வள்ளுவர் ஏற்றிய விளக்கின் பயனை "**வையத்து வாழ்வார்கள் உள்ளிருள் நீக்கும் விளக்கு**" என்பதனுல் எடுத்துரைத்து வெண்பாவை முடித் தார் புலவர். இத்தொடரிலே திருக்குறளின் சிறப் பியல்புகள் பலவற்றை உள்ளுறுத்தியிருக்கிறுர் அவர். தமிழ் நாட்டிலே ஏற்றப்பட்டதாயினும் உலகம் முழுவதற்கும் பயன்படும் விளக்கு என் பதை "வையத்து வாழ்வார்கள்" எனுந் தொடர் கூறுகிறது. வையத்தார் என்று கூருமல் வையத்து

வாழ்வார்கள் என்று வாழ்வினை அழுத்திக் கூறித் திருக்குறள் வாழ்வுக்கு வழிகாட்டும் ஒரு நூல் என்பதையும் அவர் சுட்டிக் காட்டினர்.

இவ்வுலகிற் பிறந்த மக்கள் இவ்வுலகிலேயே நன்கு வாழல் வேண்டும்; அப்படி நன்கு வாழுதற்குரிய முறையுண்டு என்பவற்றை விளக்கி வையத்தில் வாழ் வாங்கு வாழும் நெறியை வகுப்பது திருக்குறள். செத்தபின் செல்லும் சிவலோகம், வைகுண்டம், பரலோகம் என்பவற்றுக்காக இந்த உலகை வெறுத்தொதுக்குங்கள், துறவுபூணுங்கள் என்று முழங்கி, வையத்து வாழ்வினை மாயமாக்கிய கொள்கைகள் நிறைந்த சூழலிலே வையத்திலேயே தெய்வமாக வாழலாம் என்பதை எடுத்துரைத்து நிறுவி, வாழ்வுக்கு உண்மைப் பொருள் சொன்ன பெருமை திருக்குறளின் தனிப் பெருமையாகும் திருக்குறளின் இச்சிறப்பியல்புகள் யாவும் "வையத்தில் வாழ்வார்கள்" எனுஞ் சொற்றொடரிற் கருக்கொண்டுள.

மக்கள் உள்ளத்து இருள் உண்டு என்பதையும் அதை நீக்குதற்குத் தக்க விளக்கு வேண்டும், என்பதையும் அந்த விளக்கே திருக்குறள் என்பதையும், 'உள்ளிருள் நீக்கும் விளக்கு' எனுந் தொடர் குறிப்பிடுகிறது.

உலகத்து விளக்குகளுக்குள்ள இரு பெருங் குறைகளில்லாத ஒரு நிறை விளக்குத் திருக்குறள்

என்பதையும் புலவர் தம் வெண்பாவில் அழுத்தந் திருத்தமாக எடுத்துக் காட்டிய அருமைப்பாடு அறிந்து இன்புறத்தக்கது.

உலகத்து விளக்குக்களுக்குரிய இருபெருங் குறைகளைத் திருக்குறளே கூறுகிறது. "பொருள் என்னும் பொய்யாவிளக்கம் இருளறுக்கும் எண்ணிய தேயத்துச் சென்று" எனுங் குறள் விளக்குகளின் இரு குறைகளையும் புலப்படுத்துகிறது. அணைந்துவிடுதலும், ஏற்றப்பட்ட இடத்திலன்றிப் பிற இடத்திலுள்ள இருளை நீக்காமையுமே அக்குறைகளாகும்.

திருவள்ளுவர் ஏற்றிய திருக்குறளாகிய விளக்கு எப்பொழுதும் யாவர்க்கும் இன்றியமையாத உறுதிப் பொருள்களாகிய அறம் பொருள் இன்பம் எனும் முப்பொருள்களால் அமைக்கப் பட்டதாகையாலும் என்றும் பொய்யாத செஞ்சொல் எனும் தீயினையுடையதாகையாலும் அது **"பொய்யா விளக்காக"** இலங்குகிறது.

ஓரிடத்தில் வாழ்வார் தம் உள்ளிருளை மட்டும் நீக்காது வையத்து வாழ்வார்கள் உள்ளிருளை நீக்குவதால் அது **"எங்குஞ் சென்று இருளறுக்கும் விளக்காக"** மிளிர்கிறது. எனவே, திருக்குறள் ஈடிணையற்றதொரு நிறைவிளக்கென்பது புலவருடைய வெண்பா முழுவதிலும் இழையோடியுள்ள கருத்தாகும்.

# பெற்றதாய்

'அன்பு', 'அருள்', 'அறம்' எனும் இம் மூன்று சொற்களும் தமிழரின் நாகரிகத்தையும் பண் பாட்டையும் எடுத்துக்கூறும் தனிச் சிறப்பு மிக்க செந்தமிழ்ச் சொற்களாகும். பல்லாயிர ஆண்டுகள் வாழ்ந்து உள்ளந் திருந்திய தமிழினம் வாழ்வின் உயிர் நிலையை உள்ளவாறுணர்ந்து வாழ்வு வளம் பெறுதற்குரிய பண்புகளை எல்லாம் உள்ளுறுத்தி இந்த மூன்று சொற்களையும் வழங்கிற்று. மக்கட் குலம் உயர்ந்த வாழ்வை வாழுதற்கு இந்த மூன்று சொற்களுங் குறிக்கும் பண்புகள் இன்றியமை யாதன. இம் மூன்று சொற்களும் குறிக்கும் கருத் துக்களை முழுதும் அடக்கிய சொற்களை உலகத்து வேறெம் மொழியிலும் காணல் முடியாது. இச் சொற்களின் கருத்தழுத்தம் மிளிர, இவற்றை வேறெம் மொழியிலும் மொழி பெயர்த்தலுஞ் சாலாது.

இம் மூன்றினுள் முதலாவதான அன்பு இந்த உலகத்து மக்களையெல்லாம் ஒருவரோடொரு வராகப் பிணைப்பது. அன்பு கொள்வோர் தொடர்

பிற்கேற்ப இது பலதிறப்படும். தாய்மை, காதல்......முதலியனவாக இது விளங்குகிறது. இவற்றுள் எல்லாம் இவ்வுலகில் முதலிடம் பெற்று விளங்குவது தாயன்பேயாகும். தாயன்பின் சிறப்பைத் தமிழ் மக்கள் நன்குணர்ந்து போற்றினர். அன்பின் உயர் எல்லைக்குப் பெற்ற தாயையே எடுத்துக்காட்டிப் பாடினர் அடியார்கள்.

தன் மக்கள் எந்நிலையிலிருந்தாலும் அவரிரிடத்து ஒத்த தன்மையான அன்புடையவளாயிருப்பாள் தாய். இதனைப் ''பிறப்போரன்ன உடன் வயிற்றுள்ளும் சிறப்பின் பாலால் தாயும் மனந்திரியும்'' என்ற அடிகளில் தாயும் என்பதில் உள்ள உம்மையால் பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் புலப்படுத்துகின்றான். இத்தகைய தனிப்பெருமை வாய்ந்த பெற்ற தாயை — ஈன்றாளைத் திருவள்ளுவர் நான்கு குறள்களில் நம் கண்முன்னே கொணர்ந்து காட்டி அரிய உண்மைகளை விளக்குகிறார்.

பத்துத்திங்கள் சுமந்து ஒரு மகனைப் பெற்றெடுத்தவுடன் தாய் பெறும் இன்பம் தனியின்பமாகும். இஃது உலகத்துள்ள தாய்மார் யாவரும் பெற விழையும் இன்பமாகும். எனினும், இந்த இன்பத்திலும் அவர்களுக்கு மிகுந்த உவகை அளிக்கும் இன்பம் ஒன்றுண்டு, அது தம் மக்களைச் சான்றோர் எனப் பிறர் போற்றுவதைக் கேட்கும் இன்பமாகும்.

''ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய்.''

தமிழினத்தின் உயர்ந்த குறிக்கோளை இந்தக் குறளில் வள்ளுவர் தீட்டிக் காட்டுகிறார். பட்டம், பதவி, பணம் முதலியவற்றிலும் சான்றாண்மையைச் சிறந்ததாகத் தமிழ்த் தாய்க்குலம் போற்றிற்று. சான்றோராக—நன்மக்களாகத் தம் மக்கள் விளங்குவதையே ஈன்றாள் விரும்பினாள். தாய்க் குலத்தின் இக் குறிக்கோள் தமிழினத்தின் தலை சிறந்த பண்பாட்டை நன்கு விளக்குகிறது.

இவ்வுலகிலே பண்டைக் காலத்திற் சிறப்புற்றோங்கிய மக்களினங்கள் பல. இவற்றுட் சில வியாபாரப் பெருக்கத்தையும், சில பிறநாடுகளை ஆட்சிப்படுத்தலையும், சில கைத்தொழில் முன்னேற்றத்தையும் குறிக்கோளாகக் கொண்டன. தமிழ்த் தாய்மார் சான்றாண்மையைக் குறிக்கோளாகக் கொண்டமையாலேயே தமிழினம் இன்றும் வாழ்ந்து வருகின்றது. சான்றாண்மையைக் கைவிடாது இருப்பின் அஃது என்றும் வாழும்.

ஐயிருதிங்கள் சுமந்து பெற்றுப் பாலூட்டித் தாலாட்டிச் சீராட்டி வளர்த்த தம் தாயைத் தமிழ் மக்கள் பொன்னே போற் போற்றுவர்; தாயிற் சிறந்த தெய்வம் பிறிதில்லை எனக் கொண்டாடுவர். இத்தகைய பெற்றதாயைப் பசியால் வருந்த விடுதலே இந்த உலகத்திலுள்ள பழி

பாவங்களில் மிகக் கொடியது என்பது தமிழினம் உருவாக்கிய உயர்ந்த கொள்கைகளில் ஒன்ருகும். எதைத்தான் செய்யாதிருப்பினும் ஈன்ருள் பசியைத் தீர்க்காதிருப்பது கொடுமைகளிலெல்லாம் கொடியது எனத் தமிழினங் கருதிற்று. இக்கருத்துத் தமிழினம் தாய்க்குலத்துக்கு அளித்த உயர்வை நன்கு புலப் படுத்துகிறது. இந்த மிகப் பெரிய கொடுமையை நீக்குதற்காகத் தீயனவற்றையுஞ் செய்யலாம் எனக் கூறுவாருமுளர். ஆனல், தமிழினத்தின் உயர் கொள்கைகளே விளக்கிய வள்ளுவர் ஈன்ருளின் பசியைக் கண்டிரங்கினுலும் அதனைத் தீர்த்தற்கு ஒருவன் சான்ருேர் பழிக்கும் தொழிலைச் செய்யக் கூடாது என்று பணிக்கின்ருர்.

> ''ஈன்ருள் பசிகாண்பா ணுயினுஞ் செய்யற்க
> சான்ருேர் பழிக்கும் வினை.''

இக் குறள் ஈன்ருளின் பெருமையையும், தமிழரின் பீடுடைக் கொள்கையையும் ஒருங்கே விளக்குகிறது.

தம் உயிரினுஞ் சிறப்பாகப் போற்றும் பெற்ற தாயைக் காப்பாற்றுதற்குத் தானும், மக்கள் பாவமும் பழியும் பயக்குஞ் செயல்களைச் செய்தல் கூடாது எனும் வள்ளுவர் தம் இவ்வாய்மொழி, தமிழினம் அற நெறியிற் கொண்டிருந்த உறுதி யினை அழுத்தந்திருத்தமாக எடுத்துரைக்கிறது. பகை, பாவம், பழி, வறுமை முதலியவற்றைப் பெருக்கி மக்களின் வாழ்வைப் பாழாக்குவன சூதாடலும், கள்ளுண்ணலுமாகும். இவை பல்லா

யிரவாண்டுகளாக மக்கட் சமுதாயத்தைக் கெடுத்து வருகின்றன. இவற்றின் தீமைகளை வள்ளுவரைப் போல உள்ளத்தைப் பிணிக்கும் முறையில் நுட்பமாக எவரும் எடுத்துரைக்கவில்லை எனல் உயர்வு நவிற்சியாகாது. கள்ளுண்டு களிப்பவரை யாவரும் வெறுப்பர். எது செய்தாலும் உவக்கும் பெற்ற தாயும் கள்ளுண்டு களிக்கும் மகனை வெறுப்பாள் எனில், சான்றோர் அவனை எவ்வாறு பொறுப்பர். சான்றோர் வெறுக்குஞ் செயலை ஈன்றாளுக்கு இனியதாகாத செயலை — ஈன்றாளை மகிழ்விக்க வேண்டிய கடப்பாடுடைய ஒருவன் செய்யலாமா? "நீ உன்னைப் பொருட்படுத்தாவிடினும் உன் தாயை யாகுதல் மதிக்க வேண்டாமா" என்று கூறிக் கள்ளுண்டு களிப்பவனைத் தெருட்டுகிறார் வள்ளுவர்.

"ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால் என்மற்றுச்
சான்றோர் முகத்துக் களி."

மக்கள் வாழ்விலே துன்பங்கள் யாவற்றுக்கும் அடிப்படை வறுமையே. வறுமையின் கொடுமையைத் தமிழ்ப் புலவர்கள் மட்டுமன்றிப் பிற மொழிப் புலவர்களும் பல படியாக விளக்கியுளர். வறுமையிலுங் கொடியது இல்லை என்பதை 'வறுமையிலும் இன்னாதது வறுமையே' என்று வள்ளுவர் தமக்கேயுரிய தனிப்பாணியில் கூறியுளர். வறுமையே மக்களினத்தை வாட்டும் உலகத்துப் பூசல்கள் யாவற்றுக்குங் காரணமாயிருக்கிறது. இந்த வறுமைக்குரிய காரணங்கள் பல. இவற்

றுள்ளே, மது, மாது, சூது ஆகியவற்ருல், அஃதாவது கள்ளுண்டல், வரைவின் மகளிரைச் சேர்தல், சூதாடல் முதலிய காரணங்களால் மக்களிற் பலர் தம்மைத் தாமே வறியவர்களாக்கிக் கொள்கின்றனர். இவ்வாறு உண்டாகும் வறுமையைத் திருவள்ளுவர்,

''இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்
திருநீக்கப் பட்டார் தொடர்பு.''

என்று விளக்கியுளர்.

**இவற்ருல் உண்டாகும் வறுமையை அவர் "அறஞ்சாரா வறுமை" என்கின்ருர்.** அஃதாவது ஒருவன் அறநெறியில் ஒழுகாமல் தீயவழிகளில் நடந்து தேடிக்கொள்ளும் வறுமையாகும். தடுக்க முடியாத காரணங்களாலோ, பிறக்கும் பொழுதோ ஒருவன் வறியவனுகலாம். இந்த வறுமை உடையவனைப் பெருமக்கள் வெறுக்கமாட்டார்கள்; பெற்றதாய் இத்தகையோரிடத்துப் பேரன்பும் இரக்கமும் உடையவளாயிருப்பாள்.

ஆனுல், கெட்ட வழிகளிலே பணத்தை வீணுகச் செலவு செய்து அடையும் அறஞ்சாராத வறுமை யாவராலும் வெறுக்கப்படும். இந்த வறுமையின் இழிவை மக்கள் உள்ளத்திற் பதியச் செய்தற்கு வள்ளுவர் பெருமான் இதனுடன் ஈன்ற தாயைத் தொடர்புபடுத்துகிருர். எவ்வித இழிவையும் பொறுக்கும் பெற்ற

தாயைக்கூட அறஞ் சாராத வறுமை தாய்மைப் பண்பினின்றும் பிறழச் செய்துவிடுகிறது. அறஞ் சாராத வறுமை எய்தியவனைப் பெற்றதாய் தன் மகனைக் கருதாது பிறன் போலக் கருதுவாள் எனில், இவ் வறுமையின் கொடுமையைப் பற்றி மேலுங் கூறல் வேண்டுமா?

''அறஞ்சாரா நல்குரவு ஈன்ற தாயானும்
பிறன்போல நோக்கப் படும்.''

தாயே தன் மகனைப் பிறன் போலக் கருதுதற்குக் காரணமான அறஞ்சாராத வறுமைக்கு ஆளாகாமல் மக்கள் வாழ்ந்தால் சமுதாய வாழ்வு வளம் பெறுமன்றோ!

இருமனப் பெண்டிர், கள், கவறு என்பவற்றிலே இருமனப் பெண்டிர் சூது ஆகிய இரண்டுடனும் தொடர்பு கொள்ளுதற்கு முதற் காரணமாக இருப்பது கள்ளாகையால், கள்ளுண்டு களிப்பவன் ஈன்ற தாயாலும் வெறுக்கப்படுவான் என்று தனித்து அழுத்திக் கூறிய வள்ளுவர் இந்தக் குறளிலே அவை மூன்றாலும் உண்டாகும் அறஞ் சாராத நல்குரவை உடையான் ஈன்ற தாயால் வெறுக்கப்படுவான் என்று கூறி அம் மூன்றும் மக்களின் சமுதாய வாழ்வுக்குக் கேடு தருவன என்பதையும் புலப்படுத்தியுளர்.

பெற்ற தாயை மகிழ்வித்தல் மக்கள் கடன். பெற்ற தாய் தன் மகனைச் சான்றோன் எனப் பிறர் போற்றினல் ஒப்புயர்வற்ற மகிழ்ச்சி அடைவாள். பெற்ற தாயின் பசியைத் தீர்த்தற்குத் தானும் சான்றோர் பழிக்கும் வினையை ஒருவன் செய்தல் கூடாது. கள்ளுண்டு களித்தலும், அறஞ் சாராத வறுமையெய்தலும் பெற்ற தாயாலும் வெறுக்கப்படுவன. இவ்வுண்மைகளை மக்கள் உள்ளத்தில் நன்கு பதித்தற்கு விரும்பினர் வள்ளுவர். பெற்ற தாயிடத்து மக்கள் கொண்ட இயற்கை அன்பு வாயிலாக அவர்கள் உள்ளத்தை அவர் அணுகுந் திறன் எண்ணி எண்ணி வியக்கத் தக்கது.

# அளவைகளும் அடையாளங்களும்

பொருள்களின் நீளம், பரப்பு, நிறை, வெப்பம் முதலியவற்றை அளந்து அறிதற்குப் பலவித அளவைகளைப் பயன்படுத்துகிறோம். மக்களின் உயரம் நிறை முதலியவற்றையும் இவ்வளவைகளால் அளந்தறியலாம். எனினும், இவற்றால் மக்களின் மனப்பாங்கு, குணநலம், செயற்றன்மை முதலியவற்றை அளந்தறிதல் முடியாது. இவற்றையும் அளந்தறியத்தக்க சில அளவைகளையும் அடையாளங்களையும் திருவள்ளுவர் உலகத்துக்குக் கொடுத்திருக்கிறார். தமிழ்மறையெனப் போற்றப்படும் அவருடைய திருக்குறளிலே நுட்பமான அளவைகளுஞ் சிறந்த அடையாளங்களுங் கூறப்படுகின்றன.

மக்கள் பெருமை உடையவர்களா? சிறுமை உடையவர்களா என்பதை அறிதற்குத் திருவள்ளுவர் ஓர் உரைகல்லை வழங்குகிறார். ஒவ்வொருவருடைய செயலுமே அவரவர் தகுதியைக் காட்டும் உரைகல் என்கிறார். பொன்னை உரைகல்லில் இட்டு அதன் மாற்றை அறிகிறோம். இதனைப்

போல் மக்களின் தகுதியை — உயர்வை — அறிவதற்கு அவர்களுடைய செயலாகிய உரைகல் உதவுகின்றது.

''பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்குந் தத்தங்
கருமமே கட்டளைக் கல்.''

ஒருவன் சால்பு உடையவனு என்பதை எவ்வாறு அறியலாம்? இதற்கும் ஓர் உரைகல்லைத் தருகிறுர் வள்ளுவர். ''விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை'' என்று கூறும் மனப்பான்மையே மக்களிடைப் பெரும்பாலுங் காணப்படுகிறது. தம்மிலுங் குறைந்தவர்களிடத்துத் தோல்வியை ஏற்றல் மிக அரிய செயல். இச் செயலைச் செய்யும் ஒருவனிடத்துச் சால்பு உண்டென்கிறுர் வள்ளுவர்; சால்பை உரைத்துப் பார்க்கும் உரைகல் இழிந்தார் மாட்டும் தோல்வியை ஏற்றலாகிய பண்பே என்கிறுர்.

''சால்பிற்குக் கட்டளையாதெனிற் றேல்வி
துலையல்லார் கண்ணுங் கொளல்.''

சமுதாய வாழ்வில் ஒவ்வொருவரும் பலரோடு தொடர்பு கொள்ளுகிறுர்கள். இத்தொடர்பு நட்பாகவேனும் பகையாகவேனும் நொதுமலாகவேனும் உருப்படுகிறது. தொடர்பு கொள்ளுபவர் யாவருடனும் நட்பாயிருக்கும் நிலைமையே ஒருவனுக்குச் சிறப்புத்தரும். எனினும் நண்பர்களை ஆராய்ந்தேகொள்ளுதல் வேண்டும். நண்பர்கள் எனும் போர்வையில் அடுத்துக் கெடுப்பாரும்

உளர். தமக்கு நன்மை கிடைக்கும் வரையும் நண்பராயிருந்து வருவாய் கிடைக்காவிடின் பிரிப வரும் உளர். எனவே உண்மையான நண்பர்களை அறிவது எப்படி? திருவள்ளுவர் இதற்கு ஓர் அளவு கோல் தருகின்றார்.

ஒருவனுக்குக் கேடுவந்தால் உண்மை நண்பர் கள் அவனுக்கு உதவி செய்வார்கள். போலியாக நடித்தவர்கள் அக் கேட்டினை நீக்குதற்கு முற் படார்கள். எனவே ஒருவனுக்கு ஏற்படுங் கேடு நண்பர்களை அளந்தறிதற்குரிய அளவுகோலாகும் என்கிறார் வள்ளுவர். கேடானாலும் அதுவும் ஓர் நன்மையை விளைவிக்கிறது; நண்பர்களை அளந் தறிய உதவுகிறது என்கிறார் அவர்.

''கேட்டினு முண்டோ ருறுதி கிளைஞரை
நீட்டி யளப்பதோர் கோல்.''

அன்புதான் வாழ்வின் உயிர்நிலை; குடும்பப் பயிர்களை வளர்க்கும் நீர்; சமுதாயத்தைப் பிணைக் கும் கயிறு; இந்த அன்பு, உள்ளத்திலே உண்டாவது. இதனை மிகுதியாக உடையவர்களை எவ்வாறு அறி யலாம்? இஃது இல்லாதவர்களை எப்படி அறியலாம்?

பிறருக்குத் தம்முயிரையே கொடுப்பவர்களே **அன்புடையவர்கள்.** பிறருக்கென ஒன்றையுங் கொடுக்காது யாவற்றையுந் தமக்கென வைத்துக் கொள்ளுகிறவர்களே **அன்பில்லாதவர்கள்** என்கிறார் திருவள்ளுவர்.

''அன்பிலா ரெல்லாந் தமக்குரியர் அன்புடையார்
என்பு முரியர் பிறர்க்கு.''

மக்கள் யாவரும் அறிவுடையவர்களாக இருக்கிருர்கள்; கல்வி கேள்விகளால் அறிவினே வளர்க்கிருர்கள்; பட்டங்கள் பதவிகள் அறிவுக்கு அடையாளம் எனக் கருதுகின்றனர். மக்களிடையே உள்ள அறிவு பலதிறப்பட்டது. அறிவு ஆக்கத்தையுங் கொடுக்கிறது; அழிவுக்கு வழியுங் கோலுகிறது. அறிவின் முற்றிய பயன் யாது? தலேயான அறிவு யாது? திருவள்ளுவர் கூறுகிருர் கேளுங்கள்!

மக்களுக்கேயன்றிப் பிற உயிர்களுக்கும் வரும் இடர்களேயும் தமக்கு வருவனவாகக் கொண்டு, அவற்றைக் காத்தலே அறிவின் பயன் என்கிருர்.

''அறிவிஞ லாகுவ துண்டோ பிறிதினேய்
தந்நோய்போற் போற்ருக் கடை.''

தமக்குத் தீமை செய்யாதவர்களுக்குத் தீமை செய்தல் கொடியவர் செயலாகும். தமக்குத் தீமை செய்கிறவர்களுக்குத் தாமும் தீமை செய்ய எண்ணுதல் சிலரியல்பு. தமக்குத் தீமை செய்கிறவர்களுக்குந் தீமை செய்யாமல் விடுதலே தலேயான அறிவு என்கிருர் திருவள்ளுவர்.

''அறிவினு ளெல்லாந் தலேயென்ப தீய
செறுவார்க்குஞ் செய்யா விடல்.''

ஒழுக்கம் என்பது ஒருவனுடைய வாழ்க்கைத் துறை முழுவதுஞ் செறிந்துள்ளது. நல்ல ஒழுக் கத்துடன் வாழவேண்டியது ஒருவனுடைய கடமை யாகும். எனவே ஒழுக்கம் என்பது பொதுவாக நல்லொழுக்கத்தையே குறிக்கிறது. நல்லொழுக்கம் உடையவர்களை அறிதற்குப் பல வழிகள் உள. பொய் முதலிய தீய சொற்களை மறந்தும் தம் வாயினுற் சொல்லாதவர்களே ஒழுக்கம் உடையவர் கள் என்கிறுர் வள்ளுவர். வேடிக்கைக்காகத் தானும் தீய சொற்களை ஒழுக்கமுடையவர்கள் கூறக் கூடாது.

''ஒழுக்க முடையவர் கொல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல்.''

பெருமைக்கும் சிறுமைக்கும் உள்ள வேறு பாட்டை மிகச் சிறப்பாக ஒரு குறளில் விளக்கு கிறுர் திருவள்ளுவர். பெருமைக்குணம் உடைய வர்கள் என்றும் பணிவுடையவர்களாயிருப்பார் கள்; தமது பெருமையினுலே தருக்கு அடைய மாட்டார்கள். பிறருடைய குற்றத்தை மறைத்துக் குணங்களைக் கூறுவர். சிறுமையுடையவர்கள் தம் மைத் தாமே வியப்பார்கள்; பெருமையுடையவர் கள் போலத் தருக்கித்திரிவார்கள். பிறருடைய குணங்களை மறைத்துக் குற்றங்களையே கூறுவர்.

''பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து.''

அந்தணர் எனும் சொல்லின் பொருள் அழகிய தண்ணளியையுடையோர் என்பது. இவர்களை அற வோர் என்றுங் கூறலாம். அவர்கள் எல்லா உயிர்கள் மேலும் தண்ணளியுடையவர் களாய் ஒழுகுவார்கள்.

''அந்தணரெ ன்போரற வோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழு கலான்.''

தாம் பிறந்த குடியைப் பற்றிப் பெருமை கொள்வது மக்கள் இயல்பு. குடி. குலம், இல் என்பன ஒரு பொருட் சொற்கள். தமது குடிக்கு இழுக்கு ஏற்படாமல் அக்குடியை விளங்கச் செய் தல் ஒவ்வொருவருடைய கடமையுமாகும். சில ரிடத்துக் கெட்ட குணங்கள் காணப்பட்டால் அவர்களுடைய குடியையும் பழிக்கும் வழக்கு உலகிலுள்ளது. ஒருவர் உயர்ந்த குடியிற் பிறந்த வரா என்பதை அறிதற்குப் பல வழிகள் உள. இவற்றுளெல்லாஞ் சிறந்தது அவர் வாயிலிருந்து பிறக்குஞ் சொற்களே என்கிறார் வள்ளுவர். இதனை ஓர் உவமையாலும் அவர் விளக்குகிறார். நிலத் தினுடைய இயல்பை — நல்ல நிலமா அன்று என் பதை — அதில் முளைத்த முளைகாட்டும். இது போல ஒருவருடைய வாயிலிருந்து பிறக்குஞ் சொற்கள் அவருடைய குடி உயர்ந்ததா என் பதைக் காட்டும் என்கிறார்.

''நிலத்திற் கிடந்தமை கால்காட்டுங் காட்டுங்
குலத்திற் பிறந்தார்வாய்ச் சொல்.''

இதுவரையும், மக்களிடத்துக் காணப்படும் நல்ல குணங்களிலும் தீயகுணங்களிலும் சில வற்றை அறிதற்குத் திருவள்ளுவர் வகுத்த அளவை களையும் அடையாளங்களையும் அறிந்தோம். மக் களிடத்தில் எல்லா நற்குணங்களும் நிறைந்திருத் தல் முடியாது. நற்குணமே நிறைந்து எவ்வித தீக்குணமும் இல்லாதவர்கள் இன்று உலகில் இல்லை எனலாம். உலகத்தின் இயல்பை — மக்களின் போக்கை — நன்கு உணர்ந்தே திருவள்ளுவரும் அரியவற்றைக் கற்று எத்தகைய குற்றங்களும் இன்றி இருப்பவர்களிடத்துக்கூட அறியாமை இருக்கும் என்று கூறியுளர்.

''அரியகற் ருசற்ருர் கண்ணுந் தெரியுங்கா
லின்மை யரிதே வெளிறு.''

எனவே, உலகில் நல்லவர்கள் இல்லையா? எல் லோருந் தீயவர்களா? என்ற வினு எழும்புகிறது. இதற்கும் பொருத்தமான விடை கூறுகிருர் திரு வள்ளுவர் ஒருவரிடத்துள்ள குணங்களையுங் குற் றங்களையும் ஒப்பிட்டுப் பார்த்துக் குணங்கள் கூடி யிருந்தால் அவரை நல்லவராகக் கொள்க; குற் றங்கள் கூடியிருந்தால் அவரைத்தீயவராகக் கொள்க என்கிருர். எவ்வளவு அருமையான தீர்ப்பு!

''குணநாடிக் குற்றமு நாடிய வற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்.''

# தற்கொலை

தன்னுயிரை நீப்பினும் பிறருயிரைப் போக்கும் வினை செய்யக்கூடாது என்று கூறிய பேரருளாள ராகிய வள்ளுவர் தம் நூலிலே **"இறந்து போதல் நன்று", "செத்துத் தொலையக்கூடாதா?......"** என்று பலவாறு தற்கொலையை ஊக்குகிறார். "வாழுங் கள், வாழுதற்கே பிறந்த மக்கட்குலமே நன்கு வாழுங்கள்; நோயின்றிக் கவலையின்றி இன்பமாக வாழுங்கள்; வாழும் முறையறிந்து வாழுங்கள்! உள்ளத்திலே பெரிய எண்ணங்களை எண்ணுங்கள்: எண்ணியவற்றை எல்லாம் நீங்கள் பெறலாம்; நீங்களே உங்களை உயர்த்திக்கொள்ளலாம்", என் றெல்லாம் ஊக்கக் குரல் எழுப்பி, மக்களுக்கு ஊன்றுகோல் கொடுத்த வள்ளுவர் சிலரைப் பார்த்து **"நீங்கள் இறப்பது நல்லது"** என்று உரைக்கிறார்.

இவ்வுலகிற் பிறந்த மக்கள் வாழ்வதற்குத் துடிதுடிப்பவர்கள் என்பதை வள்ளுவர் அறியாத வரல்லர். அளவிலாத துன்பங்களை மேலும் மேலும் அனுபவித்தாலும் உயிரைப் போக்க மக்கள் விரும்புவதில்லை. துன்பங் கூடக் கூட உயிர் உடலை

மேலும் மேலும் காதலித்துக்கொண்டேயிருக்கும். இந்தப் பேருண்மையைப் பொருளை இழக்க இழக்கச் சூதினை மேலும் மேலும் காதலிக்குஞ் சூதர்களைச் சுட்டிக்காட்டி வள்ளுவர் விளக்கியிருக்கிறார்.

"இழத்தொறூஉங் காதலிக்குஞ் சூதேபோல் துன்பம்
உழத்தொறூஉங் காதற் றுயிர்."

இத்தகைய வள்ளுவர் பெருமான் சிலரைத் தற்கொலை செய்யுமாறு கூறுகின்றார் எனில் அவர் கூற்று வியப்பை மட்டுமன்றி ஆராய்ச்சியையும் பிறப்பித்தல் இயல்பே.

மக்கள் யாவரும் பெருந்தகைமையுடையவர்களாய் வாழ்தல் வேண்டும். பெருந்தகைமையை எக்காரணங் கொண்டும் இழத்தல் கூடாது. அதனை இழக்க வேண்டிவரின் உயிரை இழத்தல் நன்று என்று வள்ளுவர் இடித்து உரைக்கிறார். பெருந்தகைமையை இழந்து ஊன் உடலைப் போற்றும் வாழ்வும் ஒரு வாழ்வா என வினவுகிறார் அவர்.

"மருந்தோமற் றூன்ஓம்பும் வாழ்க்கை பெருந்தகைமை
பீடழிய வந்த இடத்து."

பெருந்தகைமைக்கு அழிவுண்டாகினால், தற்கொலை செய்யவேண்டும் என்கிறார் அவர்.

இவ்வுலகிலுள்ள மக்கள் ஒருவரோடு ஒருவர் நட்பு, நொதுமல், பகை எனும் மூன்று நிலையிலே தொடர்பு உடையவர்களாயிருப்பர். பல காரணங்களாலே பகைமை தோன்றலாம். ஒருவருக்கோ, ஒரு குடும்பத்துக்கோ மட்டுமன்றி ஓரினத்துக்கே பகைவர் உளராகலாம். பகைவர்களுக்குப் பணியாமல் வர்ழுதல் மானமுடைய மக்கள் செயலாகும். தாம் நின்ற நிலையை விட்டுத் தம்முடன் பொருந்தாதார் பின் சென்று அவர்களுடைய அடிவருடிகளாகிச் சில நயங்களைப் பெறுதலினும் இறந்துவிடுதல் நல்லது என்கிறூர் வள்ளுவர்.

> ''ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலின் அந்நிலையே
> கெட்டான் எனப்படுதல் நன்று.''

சொந்த வாழ்வுத்துறைகளில் மட்டுமன்றி அரசியற்றுறையிலும் சிலர் தம் கட்சியைத் துறந்து சிற்சில நன்மைக்காகத் தம்மை இகழ்வார் பின் சென்று பணிந்து வாழ்தலை எங்கும் காண்கிறேம். இவர்களுக்கு ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே வள்ளுவர் ''தற்கொலை'' நல்லது என்று அறிவுறுத்தியிருக்கிறூர்.

மக்கள் வாழ்வை மானவாழ்வெனலாம். மானமில்லா வாழ்வு மாக்கள் வாழ்வே. மக்களுக்கு உரிய குணங்களுக்கெல்லாம் அடிப்படையானது மானமே. மானம் சேராத எக்குணமும், எச்சொல்லும், எச்செயலும் சிறப்பளிப்பதில்லை. தமிழினம் மானத்தை உயிரிலும் சிறந்ததாகக்

கொண்டு வாழ்ந்தது; மானத்தை இழக்க நேர்ந்தால், உயிரை இழந்துவிடல் வேண்டும் எனும் குறிக்கோளைக் கொண்டிருந்தது. எனவே, வள்ளுவர் பெருமானும் மானத்தைக் காப்பாற்றுதற்கு உயிர் விடுதல் வேண்டுமெனின் அதனைச் செய்க என்று கூறுகிறார்.

''மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்.''

கவரிமான் தன் மயிர்த்திரளில் ஒரு மயிர் நீங்கினும் உயிர் வாழாது என்பர். இதனை உவமையாகக் காட்டி ,மானத்தைப் போற்றும் மாண்புடையார் தற்கொலை செய்துகொள்வர் என்பதை வள்ளுவர் விளக்குகிறார்.

இன்று உலகத்திலுள்ள தீமைகளுள்ளே மிகக் கொடியது புறங்கூறுதலாகும். புறங்கூறுதல் என்பது ஒருவரில்லாத இடத்தில் அவரைப் பழித்துரைத்தலாகும். புறங்கூறுதலை ஒரு கலையாகக் கூடச் சிலர் வளர்த்துவிட்டனர். புறங்கூறுபவர்கள், தாம் பழித்துரைப்பவர்கள் முன்னிலையில் அவர்களுடைய நண்பர்கள்போல நடித்து அவர்களைப் புகழ்வார்கள்; அவர்களில்லாத இடத்தில் அவர்களைத் தூற்றுவார்கள். பொய்யாகப் போற்றுதலும் மறைந்து நின்று தூற்றுதலுமே இவர்கள்

தொழில். இந்த இருவகைத் தொழிலிலும் பொய் யர்களாய் இவர்கள் காட்சியளிக்கிறார்கள். எனவே இவர்களை இறந்துபோகுமாறு வள்ளுவர் பகர் கின்றார்.

''புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாதல்
அறங்கூறும் ஆக்கம் தரும்.''

புறங்கூறி வாழ்கிறவர்கள் தற்கொலை செய்து கொண்டால் அவர்களுக்கு நன்மையும் உண்டாகும் என்று அவர் உரைக்கின்றார்.

இன்று உலகத்தில் 'சம உடைமை' 'பொது உடைமை' முதலிய கொள்கைகள் தலைதூக்கியுள. பொருளாதாரச் சமநிலை இன்மையே உலகத் திலுள்ள போட்டி பொறாமைகளுக்கும் பூசல் புழுக்கங்களுக்கும் காரணம் என்கின்றனர். பல்லா யிரம் ஆண்டு நாகரிகமாய் வாழ்ந்த தமிழினம் சம உடைமையின் சிறப்பை நன்கு உணர்ந்தது. மக்களுடைய முயற்சிகளின் பெருமை சிறுமைகளை யும் அஃது அறிந்திருந்தது. வாய்ப்பும் முயற்சியும் உடையாரிடத்துப் பொருளும் அவை இல்லாரிடத்து வறுமையும் பெருகும் என்பது அவ்வினம் அறியாத தன்று. எனவே, நம் புலவர்கள் பொருளாதாரத் தில் ஒரு சமநிலையை உண்டாக்குவதற்கு ஓா அருமையான வழியினை வகுத்தனர். பொருள் ஈட்டினோரைப் பொருள் இல்லாதவருக்குக் கொடுங் கள் என்றார்கள்; முயற்சியுடையோருடைய குறிக்

கோள் பிறருக்கு உபகாரம் செய்தலே என்றனர்; ''கொடை'' அறமே சிறந்த அறம் என வற் புறுத்தினர்; ஈதலே இறப்பின் பயன் — ஊதியம் என்றும் உரைத்தனர். கொடுக்க முடியாவிடின் இறத்தல் நலம் என்று கொடையின் சிறப்பை மக்கள் மனத்திற் படியச் செய்தவர்களுள்ளே வள்ளுவர் தலைசிறந்தவர்.

''சாதலின் இன்னாத தில்லை இனிததூஉம்
ஈத லியையாக் கடை.''

சாதலை எல்லோரும் வெறுக்கிறார்கள். அதனிலும் பார்க்க மக்களுக்குக் கொடியதொன் றில்லை. எனினும், தற்கொலையும் ஈயமுடியாத விடத்து இனியது என்கிறார் வள்ளுவர். சம உடைமைக்குத் தக்க ஒரே ஒரு வழியான கொடையறத்தின் விழுப்பத்தை இதனைக் காட்டிலும் சிறப்பாக உணர்த்தல் முடியுமா?

''பெருந்தகைமை கெடவோ, மானத்தை இழக்கவோ, பகைவர் பின்செல்லவோ நேர்ந்தால் தற்கொலை செய்க. புறங்கூறிப் பொய்த்து வாழ் தலினும் தற்கொலையால் நன்மை உண்டு. கொடுக்க முடியாதவிடத்துத் தற்கொலை இனிது'' என்று வள்ளுவர் கூறியிருக்கிறார். இதனால் புறங்கூறாமையும், மானமும், ஈதலும் மனித வாழ்வுக்கு இன்றி யமையாதன என்பதும், இவற்றை யாவரும் பேணி வாழ்ந்தால் உலகம் உய்யும் என்பதும் உளங் கொளற்குரியன.

# பொருளாதாரம்

"அவர்பாடு பெரும் கஷ்டம்"; "அவர்பாடு பிழையில்லை"; "அவர்கள் நல்லாய் நொந்து போனார்கள்"; "அவர்கள் நல்லாய் எழும்பிவிட்டார்கள்"; அந்தக் கம்பனி நல்லாய் நடக்குது"; "அந்தக் கம்பனி ஈடாடுது......" இப்படி மக்கள் நாள்தோறும் பேசுவது வழக்கம். இப்படிப் பேசும் போது அவர்கள் பொருளாதாரமே பேசுகிறார்கள். எனவே பொருளாதார வல்லுநர்களுக்கு மட்டுமே பொருளாதார மதிப்பீடு உரியதன்று.

வரவு — செலவு என்ற அடிப்படையில், உழைப்பு — இழப்பு என்ற முறையில், முதல் — ஊதியம் என்ற தொடர்பில், இலாபம் — நட்டம் என்ற வகையில் பொருளாதாரம் எல்லோருடைய வாழ்க்கையுடனும் இணைந்துள்ளது. இவ்வாறு ஒருவருடனும், ஒரு குடும்பத்துடனும், ஒரு நிறுவகத்துடனும், ஓர் அரசுடனும் இணைந்துள்ள பொருளாதாரத்தின் அடிப்படை உண்மைகளைத் திருவள்ளுவர் திறம்பட விளக்கியுள்ளார்.

பொருளீட்டல் நல்ல வழியில் நடைபெறல் வேண்டும் என்பதே வள்ளுவர் வற்புறுத்தும் நெறியாகும். ''அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம் புல்லார் புரள விடல்'' என்பது அவர் வாக்கு. நீதி நெறியில் பொருளைத் தேடாமல் இருட்டுச் சந்தையிலும், கள்ளக் கடத்தலாலும் பொருளைத் தேடுதல் பொருத்தமற்றது. பழியான வழிகளில் பொருளைச் சேர்த்துச் செல்வராகுதலிலும் வறுமையுடைவர்களாயிருத்தல் சிறந்தது என்பது வள்ளுவர் கருத்து.

எவ்வகையான தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களும் வரவுக்குமேற் செலவு செய்யக்கூடாது. செலவு கூடினுல் கேட்டுக்கு வித்திடும். வரவு குறைவாயிருந்தாலும் செலவை வரவுக்கு மேற்படாமல் கட்டுப்படுத்தினுல் துன்பமின்றி வாழலாம். இந்த உண்மையை உணராமையாலும், உணர்ந்து கடைப்பிடியாமையாலும் பலர் கடன்பட்டு அல்லற்படுகின்றனர். எனவே கேடின்றி வாழ விரும்பும் ஒவ்வொருவரும் உள்ளத்திற் பதித்து, வாழ்விற் கடைப்பிடிக்கவேண்டிய பொருளாதார அடிப்படை உண்மையை ''ஆகாறு அளவு இட்டிதாயினும் கேடில்லை, போகாறு அகலாக் கடை'' எனும் இக் குறள் எடுத்துரைக்கின்றது. இந்த உண்மை, மக்களின் வாழ்வை வளம்படுத்துவதற்கு இன்றியமையாதது என்பதை நன்கு உணர்ந்தவர் வள்ளுவர். இதனுலே அவர் இதனைப் பல குறள்களில் வலியுறுத்துகின்றுர். பொருளைக் கொடுக்கும் பொழுதும்

வாழ்வுக்குப் பயன்படுத்தும் பொழுதும் ''அள வறிந்து'' செய்க எனப் பணிக்கின்ருர்.

பொருளை ஈட்டும் வழிகளில் ஈடுபடுதற்கு முன் வரவு செலவுகளைச் சீர்தூக்கிப் பார்த்தே ஈடுபடல் தேண்டும். ''முடிவும் இடையூறும் முற்றி யாங்கு எய்தும் படுபயனும் பார்த்துச் செயல்'' எனும் குறள் ஒரு தொழிலைச் செய்யும்பொழுது அதனை முடித்தற்கு வேண்டிய உழைப்பையும், தொழில் செய்யும்பொழுது உண்டாகும் இடையூறுகளையும், அத்தொழிலால் உண்டாகும் பயனை யும் சீர்தூக்கிப் பயன் பெரிதாகும் எனிற் செய்ய வேண்டும் என்பதை அழுத்தந் திருத்தமாகக் கூறு கின்றது. இக் காலத்தில் சாத்தியக் கூற்றறிக்கை எனக் கூறப்படுவதை இக்குறள் குறிப்பிடுகின்றது. வாழ்வினை மட்டுமன்றி வாழ்விலே செய்யும் தொழில்களையும் திட்டமிட்டு, செய்யும் நெறியைத் தேர்ந்து, அள வறிந்து செயயவேண்டுமென்பதும், இந்நெறியே வெற்றிக்கு வழி என்பதுமே திருக்குறளின் திட்ப நுட்பம் செறிந்த கருத்து. எனவே, பெருளீட்டலி லும் வரவையும் செலவையும் ஆராய்ந்து பார்த்தே தொழிலைச் செய்யவேண்டுமென்பதைப் பல குறள்களில் வள்ளுவர் வற்புறுத்துகின்ருர்.

''அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும்
ஊதியமும் சூழ்ந்து செயல்.''

இலாபத்தை — வருவாயைப் பெற எண்ணித் தான் எவரும் தொழில்களில் ஈடுபடுவர். இலா பத்தில் உள்ள ஆசையால் போதிப ஆராய்வின் றித் தொழில்களைத் தொடங்கி முதலையும் இழந்து முறிந்து கெட்டுப்போனவர்கள் பலர். இவர்கள் சென்ற வழியில் மக்கள் சென்று கெட்டுப்போகா மல் இருப்பதற்காக, "ஆக்கங்கருதி முதல் இழக் கும் செய்வினை ஊக்கார் அறிவுடையார்" என்று வள்ளுவர் அறிவுரை கூறுகின்றார். ஒரு தொழிலில் அத் தொழிலோடு தொடர்புடைய தொழில்களையும், பக்கவிளைவுதரும் தொழில்களையும் செய்தல்வேண்டும் என்றும் வள்ளுவர் இரண்டா யிரம் ஆண்டுகளுக்கு முன்னரே உரைத்துளர்.

"வினையால் வினையாக்கிக் கோடல் நனைகவுள்
யானையால் யானையாத் தற்று."

போதிய முதலின்றிக் கடன்பட்டுத் தொழில் களைத் தொடக்கிக் கையிலிருந்த பொருளையும் இழந்து கடனும் தீர்க்க முடியாமல் திண்டாடு பவர்களையும் நாம் காண்கின்றோம். இவர்கள் திரு வள்ளுவர் கூறிய,

"குன்றுஏறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்து
ஒன்றுஉண்டாகச் செய்வான் வினை."

எனும் குறளைப் பொருட்படுத்தாமையாலே இவ் வாறு இடர்ப்படுகின்றனர். "தன் கைத்து" என்பது

கையிலுள்ள பொருளைக் குறிக்கின்றது. தன் கையிலுள்ள — இலகுவாக முதலிடத்தக்க பொருளைக் கொண்டு தொழில் செய்தால் அச்சமுந் துன்பமுமின்றித் தொழிலைச் செய்து பயன் பெறலாம். அன்றேல் தொழிலில் வெற்றி பெறுதல் இலகுவன்று.

ஓர் அரசு எவ்வாறு பொருளீட்ட வேண்டும் எனவும், எவ்வாறு செலவு செய்யவேண்டுமென வும் வள்ளுவர் விளக்கியுளர். ஆண்டு தோறும் பாராளுமன்றங்களிற் சமர்ப்பிக்கப்படும் வரவு செலவுத் திட்டங்களின் அடிப்படையையும் அவர் அமைத்துக் காட்டியுளர்.

''உறுபொருளும் உல்கு பொருளும்தன் ஒன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள்.''

எனுங் குறளில் அரசுக்குப் பொருள் வரும் வழிகளைக் குறிப்பிடுகின்றார். இவ்வாறு பொருள் வரும் வழிகளைப் பெருக்குதலும், வருவாய் முழுவதையும் தொகுத்தலும், தொகுத்தவற்றைக் காத்தலும், காத்தவற்றை மக்கள் நலத்துக்குச் செலவிடலும் அரசின் கடமையாகும்.

அரசுக்குப் பொருள் தேவைப்படும்பொழுது நியாயமான வழியிலே மக்களின் தகுதிக்கும், அவர்களின் பொருள் நிலைமைக்கும் ஏற்கவே வரிவிதிக்கப்படல் வேண்டும். இவ்வாறு செய்யாது மக்களிடம் வரி போட்டுப் பொருள் கேட்கும் அரசு, கையில்

வேலோடு நின்று வழிப்போக்கர்களின் பொருளேப் பறிக்தும் கள்வனே ஒத்தது எனவும் வள்ளுவர் கூறுகின்றார்.

பொருளே ஈட்டுபவர்கள் பிறருக்குக் கொடுத்துத் தாமும் அனுபவிக்கவேண்டுமென்று வள்ளுவர் பலகுறள்களில் வற்புறுத்துகின்றார். சமதர்மத்தை—சம வாழ்வை நிலே நாட்டத் தமிழ் மக்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் கண்ட வழி பொருளே ஈட்டியவர்கள் பிறருக்கும் கொடுத்துத் தாமும் துய்க்க வேண்டும் என்பதே. அரசு சட்டத்தால் பறித்துக் கொடுக்காமல், பொருளே ஈட்டினேர் தாமாகவே 'பகிர்ந்துண்டால்' எவரும் வரவேற்கும் ''சமதர்மம்'' — ஊழல்களுக்கு இடமில்லாத ''சம வாழ்வு'' மலர்ந்து நிலேக்கும். இதனே இன்றும் மக்கள் நன்கு ஆராய்ந்து பார்க்கவில்லே. பிற வழிகள் பிழைத்தபின் கடைசியில் இந்த வழியைத்தான் சமதர்மத்தை சமவாய்ப்புச் சம வாழ்வுச் சமுதாயத்தை — உருவாக்க முயலுவோர் நாடுவார்கள் என்பதில் ஐயமில்லே.

பொருளேச் சேமித்து வைக்க விரும்பினுல் பசி தீர்க்கும் தொழில்களில் அதனே இடுக எனும் திருவள்ளுவர் கருத்து இங்கு சிறப்பாகக் குறிப்பிடத் தக்கது.

''அற்ருர் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்ருன் பொருள் வைப் புழி.''

ஒருவரோ, ஓர் அரசோ முதலீடு செய்யும் தொழில்களில் முன்னீடு பெறவேண்டியது பசி தீர்த்தற்குரிய கமத்தொழில் என்பதையும், மக்களின் முதற்

கடமை — பொருளாதாரத்தின் உயிர் நிலை — கமத்தொழிலே என்பதையும் அவர் திறம்பட விளக்கியுளர். பெருளாதாரச் சிக்கல்களைத் தீர்க்க விரும்பும் அறிஞர்கள் — உலகினைப் பசிப்பிணி ஆட்சி செய்யாமல் தடுக்க விரும்பும் ஐக்கிய நாடுகள் நிறுவகம் போன்றவை — உளங்கொள்ள வேண்டிய ஈடிணையற்ற கருத்து இது.

''பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை'' என்பது வள்ளுவர் கண்ட முடிபு. உலக நாடுகளிலுள்ள போட்டி பூசல்களுக்கெல்லாம், மக்களின் வாழ்வைப் பாதிக்கும் செயல்களுக்கெல்லாம், பொருளாதாரச் சீரின்மையே காரணம் என்பவர்கள் எத்தனை நூல்களை எழுதி விளக்கினாலும் வள்ளுவர் இந்த ஓர் அடியினுள் பொதிந்தக்கருத்தை முற்றாக — முழுதாக விளக்கமுடியாது.

இத்தகைய பொருளை ஈட்டுதற்கு உழைப்பே மூலதனமெனும் கொள்கையின் முதல்வர் திருவள்ளுவரேயாவார். வையத்தில் வாழும் நெறி கூற முனைந்த நூல்களிலே திருக்குறளைப்போல் உழைப்பை மூலதனமாக்கி மக்கள் வாழ்வில் அதற்கு முதலிடங் கொடுத்த நூல்கள் வேறெதுவுமில்லை. மக்கள் வாழ்வின் துறையனைத்துக்கும் மூலதனம் உழைப்பே என்பதும், மக்கள் உழைத்தே உயர்வடையவேண்டுமென்பதும், உழைக்காமல் சுரண்டி வாழ்வது பழிதரும் செயல் என்பதும் திருக்குறளின் உயிர்நிலைக் கருத்துக்களாகும்.

''ஆக்கம் அதர்வினய்ச் செல்லும் அசைவிலா
ஊக்கம் உடையான் உழை.''

# உன்னை நீ காதலிக்கிருயா

இஃது என்ன கேள்வி? தன்னைத் தான் காதலிக்காத ஒருவன் உண்டா? என்று பலர் கேட்கலாம். இஃது என்னுடைய வினு அன்று ; ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் எழுப்பப்பட்ட வினு; உலகமக்களுக்கு வாழும் நெறியை எடுத்துக்காட்டிய வள்ளுவர் பெருமான் கேட்ட வினு.

இன்பத்தை நாடுவது உயிரியல்பு. துன்பத்தை நீக்கி இன்பமாக வாழுதற்கு முயலும் மக்கள் பலர் துன்பத்திலேயே அழுந்தி வருந்துகிருர்கள். தமக்காகத் - தம் நல்வாழ்வுக்காகப் பின்விளைவு நோக்காமல் எதையும் செய்ய இவர்கள் முயலுகிருர்கள். தாம் இன்பமடைந்தாற் போதும் என்ற எண்ணம் இவர்களிடம் இருக்கிறது. எனினும், இவர்கள் தங்களைத் தாங்களே காதலிக்காதவர்கள் போல் நடந்து துன்பக்கடலில் மூழ்கிருர்கள். இவர்கள் உள்ளத்திற் படத்தக்க முறையிலே பேசி உண்மையை எவ்வாறு உணர்த்துகிருர் வள்ளுவர் என்று பாருங்கள்.

இவர்கள் தம்மைப்பற்றிய கவலைதான் உடையவர்கள்; பிறரைப்பற்றிச் சிறிதுங் கருதாதவர்கள். இவர்களிடத்திலே "பிறருக்குத் தீங்குசெய்யாதே, பிறரிடத்து அன்புகாட்டு, பிறருக்கு உதவி செய்" என்று எடுத்த எடுப்பிலே கூறிவிட்டால் அவற்றுக்கு இவர்கள் சிறிதுஞ் செவிசாய்க்கமாட்டார்கள். கள்ளுப் போதையில் மயங்கி இருப்பவனுக்குக் குடிப்பதின் தீமைகளை விளக்குவதாற் பயனுண்டா? இதைப்போலவே இவர்களுக்கும் பிறருக்குச் செய்யவேண்டிய கடமைகளைப்பற்றிக் கூறுவதாற் பயன் உண்டாகாது. இவர்கள் தம்நலம் மட்டுமே பற்றிய கவலைதான் உடையவர்கள்; தம்மைத்தாம் காதலிப்பதாக எண்ணிக்கொண்டு செயற்படுபவர்கள்.

எனவே, வள்ளுவர் இவர்கள் உள்ளத்தில் ஓர் அதிர்ச்சி உண்டாகத்தக்கதாக "உங்களை நீங்கள் காதலிக்கிறீர்களா?" என்று ஒரு விந்தையான கேள்வியைக் கேட்கின்முர்.

"என்ன இவர் பொல்லாதவராக இருக்கிருரே: எங்களை நாங்கள் காதலிக்காமலா இந்த நாய்படாப்பாடு படுகிருேம்!" என்று அவர்கள் சிறிது சிந்திக்கின்முர்கள். "ஏன் இப்படி எங்களை மடக்குகிறீர்? நாங்கள் அப்படி என்ன செய்து விட்டோம். எங்களுக்கு நாங்களே பகைவர் என்று சொல்லப்பார்க்கிறீரே! என்ன ஐயா! உங்கள் நெஞ்சழுத்தம்," என்று கேட்கிருர்கள். உடனே வள்ளுவர்.

"ஒருவன் தன்னைத் தான் காதலிப்பானுயின் எவ் வித தீய காரியங்களையும் செய்யமாட்டான்;- தீய காரி யங்களைச் செய்கிறவன் தன்னைத்தான் காதலிப்பதில்லை" என்கிருர்.

"தன்னைத்தான் காத லனுயின் எனைத்தொன்றும்
துன்னற்க தீவினைப் பால்."

இதனைக் கேட்டவர்கள் சிந்திக்கிருர்கள். உண் மை அவர்களுடைய உள்ளத்திலே இடையிடையே தோன்றுகிறது. எனினும், தம் செயல்களுக்குத் தம் அறிவின்மையே காரணம் என்று சாட்டுக்கூற முயல்கிருர்கள்.

"அறநூல்களில் விதித்தனவற்றையும் விலக் கினவற்றையும் நாம் அறியோம். அவற்றை நாம் படிக்கவும் இல்லையே" என்கின்றனர்- வள்ளுவர் சொல்கிருர்: "நெருப்பைத் தொட்டால் சுடும் என்பதை நீங்கள் அறிவீர்கள். ஒருவன் உங்களைப் பழித்தால் நீங்கள் துன்பம் அடைகிறீர்கள். எனவே நீங்கள் பிறரை நெருப்பாலே சுட்டால் அது அவர்களைச் சுட்டு எரிக்கும் என்பதையும், நீங்கள் பிறரைப் பழித்துரைத்தால் அஃது அவர் களைத் துன்புறுத்தும் என்பதையும் உங்கள் அனு பவத்தால் அறியலாம். இவ்வாறு உங்களுக்குத் துன்பந்தருபவற்றை நீங்கள் பிறருக்குச் செய்யா மல் விட்டாற் போதும்."

"இன்னு எனத்தான் உணர்ந்தவை துன்னுமை
வேண்டும் பிறன்கட் செயல்."

என்பது அவரது வாய்மொழியாகும்.

உன்னை நீ காதலிக்கின்ருயா? என்று வினவுதல் போன்ற பாங்கில் வள்ளுவர் வேறு பல உண்மைகளையும் மக்களுக்கு உரைத்துளர். இந்த உலகத்தில் நடைபெறும் பூசல்கள்—போட்டிகள் முட்டல்கள் - மோதல்கள், கொலைகள்-கொடுமைகளுக்கெல்லாம் பெரிதும் சினமே காரணமாகும்.

ஒருவரோ பலரோ, ஓரினத்தவரோ ஒரு நாட்டினரோ செய்யும் எத்தகைய கொடிய செயலுக்குமுரிய காரணத்தை நுணுகி ஆராய்ந்தால் அச்செயலுக்குச் சினமே—கோபமே காரணமா யமைந்திருப்பதைக் காணலாம். ஒருவனுக்குக் கோபம் உண்டாகும்பொழுது அவனுடைய உள்ளத்தை அது முற்ருகக் கவர்ந்து, சிந்தனையைக் கொன்று, தனித்து ஓங்கி, அவனை ஆட்டிவைக்கும் பேராற்றல் அக்கோபத்துக்குரியது.

"உள்ளங் கவர்ந்து எழுந்து ஓங்கும் சினம்" என்று சினத்தின் இந்த ஆற்றலைத் தீட்டிக்காட்டுகின்ருர் சிவப்பிரகாச சுவாமிகள் தம்மிலும் வலியவரிடத்து மட்டுமன்றி மெலியவரிடத்துச் சினம் கொண்டாலும் சினம் கொண்டவர் தீமையையே அடைவர். எனவே, இத்தச் சினத்துக்கு மக்கள் சிறிதும் தம் உள்ளத்தில் இடம் கொடுக்கக்கூடாது என்பதைப் படிப்போர் உள்ளத்தில்

நன்கு பதியவைத்தற்காக வள்ளுவர் பெருமான் ''உன்னை நீ காத்துக்கொள்ள விரும்புகிருயா? அப்படியானுல் உன்னிடம் சினம் உண்டாகாமல் காத்துக்கொள், அப்படிநீ காத்துக்கொள்ளாவிடின் உன்னுடைய சினம் உன்னையே கொன்றுவிடும்'' என்று எச்சரிக்கை செய்கிருர்.

''தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லுஞ் சினம்.''

என்பது அவருடைய பொய்யா மொழி.

"தீதும் நன்றும் பிறர்தர வாரா" என்பது பல்லாயிர ஆண்டுகள் பண்புடன் வாழ்ந்த தமிழினம் கண்ட பேருண்மை. இதனை மக்கள் உள்ளத்தில் பதியவைத்தற்கு வள்ளுவர் பெருமான் கையாளும் அணுகுமுறைகள் தனிச்சிறப்புடையவை.

மக்கள் உளவியல்பையும், அவர்களின் நாட்டத்தையும் அவர் நன்கறிந்தவர். மக்கள் எல்லோரும் நோயில்லாமல்—துன்பமில்லாமல்—கேடில்லாமல் வாழ்வதற்கே விரும்புகிருர்கள். இவ்வாறு வாழவிரும்புகிறவர்களை நோக்கி வள்ளுவர் பெருமான் நீங்கள் இவ்வாறு வாழவிரும்பினுல் பிறருக்குத் தீமைகளை — கொடுமைகளை — துன்பங்களைச் செய்யாதீர் என்று பின்வரும் மூன்று குறள்களினுல் அறிவுரை பகர்கின்றுர்.

''தீப்பால தான்பிறர்கட் செய்யற்க நோய்ப்பால
தன்னை அடல்வேண்டா தான்''

'நோய்எல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர்''

''அருங்கேடன் என்ப தறிக மருங்கோடித்
தீவினை செய்யான் எனின்''

மக்கள் ஒவ்வொருவரும் இயற்கை நியதியின் வண்ணம் பெரும்பாலும் தன்னைத்தான் காதலிப்பவரேயாவர். இந்தக் காதலுக்கு மாருக அவர்கள் தேடிக்கொள்ளும் தொல்லைகளேயும் துன்பங்களேயும் அவற்றுக்குரிய காரணங்களேயும் வள்ளுவர் பொதுமையாகக் கூறிப் படிப்போர் கேட்போரைச் சிந்திக்கச் செய்யும் இத் திறப்பாட்டினை வேறெந் நூலிலும் காணல் முடியாது.

# அறப்போரும் தமிழ்மறையும்.

இவ்வுலகிலுள்ள மக்களின் கூட்டு வாழ்விலே பல சிக்கல்கள் உண்டாகின்றன. வாழ்வின் துறைகள் பலவற்றிலே பெரும்பான்மையினர் — சிறுபான்மையினர் எனவோ, வலிபடைத்தோர் - வலியற்றோர் எனவோ பிரிவுகள் தோன்றுகின்றன. இப்பிரிவுகள் போட்டியையும் பூசலையும் வளர்க்கின்றன.

பண நிலையிலோ, படைப் பலத்திலோ, ஆட்சி அதிகாரத்திலோ, மக்கட் தொகையிலோ மிகுந்திருப்பவர்கள் இவற்றிலே குறைந்திருப்பவர்களின் உரிமைகளைப் பறித்து அவர்களை அடக்கி ஒடுக்க முயலுகின்றனர். உலக வரலாற்று நூல்களிற் பெரும் பகுதி இந்த முயற்சியின் விளைவுகளையே கூறுகின்றது.

பெரும்பான்மையினருடன் சரிநிகர் சமானமாக வாழுதற்குச் சிறுபான்மையினர் போர்க்கருவிகள் கொண்டு அவர்களுடன் போராடி வெற்றி

யீட்டுதல் முடியாது. போரிலே படைப்பலம் மிக்க வர்களே எப்பொழுதும் வெல்வார்கள். எனவே சிறுபான்மையினர் பறிக்கப்பட்ட தங்கள் உரிமை களை வன்முறைச் செயல்களாற் பெறல் முடியாது. இவ்வாருயின், சிறுபான்மையினருக்குத் தங்கள் உரி மைகளைப் பெறுதற்கு வேறுவழியில்லையா? எனுங் கேள்வி எழுதல் இயல்பே. இந்த நூற்ருண்டுவரை அவர்கள் வேறு வழியற்றவர்களாகவே பெரும் பான்மையினர் தயவில் வாழ்ந்து வந்தனர்.

இந்த நூற்ருண்டிலே காந்தி அடிகள் உரிமை களை இழந்து ஒடுங்கி அடங்கிக் கிடக்கும் சிறுபான் மைமக்கள் தங்கள் உரிமைகளைப் பெறுதற்கு ஒரு பெருவழியை வகுத்தார். இந்த வழிதான் சத்தியாக் கிரகப் போராட்டம் எனப்படுவது. இதனை அறப்போர் எனவும் கூறலாம். உலகம் உய்தி அடைதற்குக் காந்தி அடிகள் காட்டிய வழிகளிற் தலைசிறந்தது இவ்வழியேயாகும்.

அறப்போர் வலிமிக்க பெரும்பான்மையினருக்கு வேண்டியதில்லை. பெரும்பான்மையினர் வன்மு றைச் செயல்களாலேயே வெற்றியீட்டத்தக்கவர் கள். பெருபான்மையினரால் நசுக்கப்படுபவர்களு க்கே — தோல்வியடைந்தவர்களுக்கே இந்த அறப் போர் உரியது. இதனை மேற்கொள்வோர் தாங்கள் நசுக்கப்பட்டவர்கள் — தோல்வியுற்றவர்கள் என்ப தனுலேயே இதனை நாடுகின்றனர். எனவே இந்த அறப்போரில் தோல்விக்கு இடமில்லை, தோல்வி யின் அடையாளமே அறப்போர் என்றும் கூறலாம்.

சத்தியாக்கிரகப் போராட்டம் என்பதன் பொருள் உண்மையைக் கடைப்பிடித்துப் போராடல் என்பதாகும். இதன் அடிப்படை 'அகிம்சை'. அகிம்சையைத் திருக்குறள் ''இன்னுசெய்யாமை'' என்றுரைக்கிறது. பிறருடைய உரிமைகளைப் பறிப்பதற்கு முயல்பவர்கள் சத்தியாக்கிரகத்தில் ஈடுபடல் முடியாது. இதற்காகச் செய்யப்படும் சத்தியாக்கிரகம் உண்மையில் அசத்தியாக்கிரகம்—மறப்போர்—எனவே, கொள்ளப்படும். பிறருடைய நியாயமான உரிமைகளைப் பாதிக்காமல் பறிக்கப்பட்ட தங்கள் உரிமைகளைப் பெறுதற்கு அறவழியிற் போராடுதலே சத்தியாக்கிரகம் என்பதை இக்காலத்திற் பலர் உணர்வதில்லை. பறிக்கப்பட்ட உரிமைகளைப் பெறுதற்கு அறப்போர் புரியும்பொழுது உண்மை, இன்னு செய்யாமை என்பவைகளே போர்க்கருவிகளாக இருத்தல்வேண்டும்.

இப்போரில் ஈடுபடுவோர் தம்மை வருத்துவதாலும், உண்மையினின்று வழுவாமல் நடப்பதாலும், மாற்ருனின் மனத்தை இழகச்செய்வதையும், தம் உரிமைகளைப் பெறுதற்குத் தாம் கொண்ட உறுதியை உலகத்துக்கு உணர்த்துவதையுமே தலையாய நோக்கங்களாகக் கொள்ளல் வேண்டும். இம்முறையில் நடத்தப்படும் அறப்போர் எக்காலத்தும் எவ்வித தீமையையும் விளைக்காது. நீர் எப்பொழுதும் நெருப்பை அணைக்கும். சிற்றளவான நீர் பெருநெருப்பை அணைக்காதெனினும் அதில் ஒரு பகுதியை அணைக்கும். இதைப்போன்றே அறப்போரும் மாற்ருரின் எதிர்ப்பைக்—கொடுஞ்செயலை முற்

முக அழிக்காவிடினும் அதில் ஒரு பகுதியையேனும் குறைக்கும். எண்ணேயைப்போல நீர் என்றும் நெருப்பைப் பெருக்காது. அறப்போரும் வன்செயல்களேப்போலக் கொடுமைகளேப் பெருக்காது. இந்த உண்மையை அறியாமற் பலர் அறப்போரைக் குறைத்துக் கணிப்பதற்கு அவர்களுக்கு அறத்தில் நம்பிக்கையின்மையே காரணமாகும்.

சட்டமறுப்பு, ஒத்துழையாமை, புறக்கணித்தல் முதலிய அறப்போர் முறைகளேக் காந்தி அடிகள் நன்கு விளக்கியுளர். அறப்போர் பெருவீரம் உடையவர்களுக்கே உரியது; கோழைகளுக்கு உரியதன்று எனவும் அவர் கூறியுளர்.

அறப்போரில் ஈடுபடுபவர்களுக்கும், முன்னணியில் நின்று இப்போரை நடத்துபவர்களுக்கும் உள்ளத்தில் உறுதி வேண்டும். அறத்தின் பேராற்றலில் அசையாத நம்பிக்கை உடையவர்களுக்கே உள்ளத்தில் உறுதி நிலேத்திருக்கும்.

அறம் என்றும் வெல்லும் என்பதை நம்பாதவர்கள் அறப்போரில் உண்டாகும் இடர்ப்பாடுகளேக் கண்டு தளர்ச்சி அடைதல் கூடும். அறத்தினேத் தீமை கவ்வும்போது அறம் தோற்பது போலத் தோன்றலாம். எனினும் ஈற்றில் அறமே வெல்லும். கிற்றிலர், முசோலினி போன்ற கொடுங்கோலர்களின் வரலாறுகள் இதனே நன்கு புலப்படுகின்றன.

"தருமத்தின் வாழ்வதனேச் சூது கவ்வும்
தருமம் மறுபடி வெல்லும்."

என்று பாரதியார் கூறுவதையும் அறப்போரில் ஈடு படுவோர் நன்கு அறிந்து கொள்ளல் வேண்டும்.

**அறம் என்றும் வெல்லும் எனும் உண்மையையும், தீமை செய்வோரை அறமே அழிக்கும் என்பதையும், அறவழியிலே பிறருக்குத் தீமை செய்யாமல் வாழ்பவர் கள் வெற்றி பெறுவார்கள் என்பதையும், மறத்தையும் அன்பினுலே—அறத்தாலே வெல்லலாம் என்பதையும் அழுத்தந் திருத்தமாக விளக்கி மக்களுக்கு அறப்போ ரிலே அசையாத நம்பிக்கையை உண்டாக்கும் ஒரேயொரு நூல் தமிழ் மறையேயாகும்.** காந்தியடிகள் வகுத்து ரைத்த அறப்போரின் அடிப்படைகள் யாவும் திருக் குறளிலேயே அமைந்து கிடக்கின்றன. இந்தப் பேரு ண்மையை உணர்ந்தமையாலேயே காந்தி அடிகள் திருக்குறளைப் படிக்க விரும்பித் தமிழினைக் கற்ருர்.

அறத்தின் ஆற்றலும் அறப்போரின் திறனும் பல குறள்களிலே விளக்கப்பட்டுள. ஒருவரையோ, ஓரினத்தினரையோ நசுக்கி அடக்க முயல்பவர்கள் யாவராயிருப்பினும்—ஒருவராயிருப்பினும் — குழுவி னராயிருப்பினும் அரசினராயிருப்பினும் அறத் ருலே அழிக்கப்படுவர் என்பதைத் தெளிவாகத் தமிழ்மறை செப்புகிறது.

> ''மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
> அறஞ்சூழுஞ் சூழ்ந்தவன் கேடு.''

என்பது பொய்யாமொழியாகும். பிறருக்குக் கேடு செய்பவர்களுக்கு அறமே கேடு விளைவிக்கும் என்பது இதன் பொருள்.

"தீயவை செய்தார் கெடுத னிழறன்னை
வீயா தடியுறைந் தற்று."

— என்னுங் குறளிலும்

"பிறர்க்கின்னா முற்பகற் செய்யிற் றமக்கின்னா
பிற்பகற் றாமே வரும்."

என்னுங் குறளிலும் தீவினை செய்பவர்கள் கெடுவார்கள் என்பதும் முற்பகலிலே பிறருக்குத் தீமை செய்தவர்களைப் பிற்பகலிலே தீமைகள் தாமாகவே சென்றடையும் என்பதும் தெளிவாக உரைக்கப்பட்டுள. இவ்வாறு பொதுவாக மட்டுங் கூறியதோடமையாது தீமை செய்யும் அரசும் அழியும் என்பதையும் தமிழ் மறை வலியுறுத்துகிறது.

ஒருவன் செய்யும் தீமையிலும் ஒரு குழுவினர் செய்யுந் தீமை பெரிது. ஒரு குழுவினர் செய்யும் தீமையிலும் ஒருநாட்டு அரசினர் செய்யும் தீமை பெரிது. அரசினர் செய்யும் தீமையிலும் பெரிய தீமையை வேறெவரும் செய்தல் முடியாது. அன்றியும் பிறர் செய்யும் தீமையை நீக்கி முறைசெய்து நீதியை நிலைநாட்டவேண்டிய கடப்பாடு உடைய அரசினர் தீமை விளைவிப்பாராயின்—பெரும்பான்மையினருடன் சேர்ந்து சிறுபான்மையினரை நசுக்குவாராயின் அந்த அரசினர் அழிந்தாலன்றிச் சிறுபான்மையினர் தலைதூக்க முடியாது. இத்தகைய கொடுங்கோலரசை அறம் அழித்துவிடும்; துன்புறும் மக்களின் கண்ணீரே தேய்த்துவிடும்; அரசினர் தாமாகவே தம்மைக் கெடுத்துக் கொள்வர் என்று கூறித் தமிழ் மறை சிறுபான்மை மக்களுக்கு அறத்தின் ஆற்றலில் நம்பிக்கையை ஊட்டுகிறது.

''அல்லற்பட்டு ஆற்றுது அழுத கண்ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை''

— என்றும்

''எண்பதத்தான் ஓரா முறைசெய்யா மன்னவன்
றன்பதத்தாற் றுனே கெடும்.''

— என்றும்

''இடிப்பாரை யில்லாத வேமரா மன்னன்
கெடுப்ப ரிலானுங் கெடும்,''

என்றுந் தமிழ்மறை கூறுவது காண்க.

அரசேயன்றி அவ்வரசையுடைய நாடுங் கெடும் என்பதையும்.

''நாடொறு நாடி முறைசெய்யா மன்னவன்
நாள்தொறும் நாடு கெடும்.''

என்னுங் குறள் கூறுகிறது.

தீமை செய்கிறவர்களைத் தாமாகக் கெடச் செய்யவும் தானுகக் கெடுக்கவும் அறம் முயலும் என்று திருக்குறள் கூறுவதால் கொடுமைக்குட் பட்டவர்கள் தம் உரிமையைப் பெறுதற்கு அறப் போர் செய்யாதிருத்தல் கூடாது. ''பெருந் தன்மை'; என்று கூறிக்கொண்டு மாற்றுருடன் அடிமைகள்போல ஒத்துழைப்பது கோழைத்தன மாகும். மாற்ருரை வன்முறைச் செயல்களால் ஊறுபடுத்தலோ அவர்களுக்கு வேறெவ்விதமான இன்னல்களைச் செய்தலோ கூடாதென்பதே தமிழ் மறை கூறும் அறம். ''கண்மூடித்தனமாகத் தீமை செய்தவர்களுக்தும் நன்மை செய்கிறேம்'' என்று

"வறட்டு வேதாந்தம்" பேசிக்கொண்டு மனிதப் பண்பை - பெருந்தகைமையை இழந்து மாற்ருருக்குப் பின்சென்று அடிவருடிகளாய் அடிமைகள் போல்வாழுநலைத் தமிழ்மறை பழித்தே உரைக்கிறது என்பதையும் மக்கள் உளங்கொளல் வேண்டும்.

"ஒட்டார்பின் சென்ருெருவன் வாழ்தலின் அந்நிலையே
கெட்டான் எனப்படுதல் நன்று."

— என்றும்

"மருந்தோமற்றுன் ஓம்பும் வாழ்க்கை பெருந்தகைமை
பீடழிய வந்த விடத்து" — என்றும் திருக்குறள்

கூறிஉயிர் கொடுத்தும் உரிமைபெறுமாறு தூண்டுகிறது. உரிமையிழந்த மக்கள் தம் உரிமையைப் பெறமுயலல் வேண்டும்; அறப்போரில் ஈடுபடல்வேண்டும். தம் இனத்தை இவ்வாறு உயர்த்த முயல்பவர்களுக்குத் தெய்வமும் உதவி செய்ய விரைந்து வரும் என்றும் தமிழ்மறை தெளிவாகக் கூறுகிறது.

"குடிசெய்வ லென்னு மொருவற்குத் தெய்வ
மடிதற்றுத் தான்முந் துறும்."

— என்பது காண்க.

அறப்போர் எதிர்பாராத பல வழிகளிலே மாற்ருருடைய மனத்தை மாற்றும்; அவர்களுடைய செல்வத்தைத் தேய்க்கும், தீமைகள் பலவற்றை விளைக்கும்; அவர்களுக்குள்ளே போட்டியையும் பூசலையும் உண்டாக்கும்; உண்மையை உணர்ந்து, உரிமைகளை நல்கச்செய்யும். அறப்போரில் ஈடுபடும் மக்கள் தமிழ்மறை கூறும் இந்த உண்மைகளை அறிந்து எதற்கும் உள்ளஞ் சோராமல் உறுதியுடன் தொடர்ந்து போராடிஞல் ஈற்றில் எண்ணியவற்றை எண்ணியவாறு பெறலாம்.

# திருக்குறளை விளக்கும் நூல்கள்

தமிழ்மறையாம் திருக்குறளைப் போலப் புலவர்களை ஈர்த்து அவர்களை ஆட்கொண்டதொரு நூல் உலகில் இல்லை. திருக்குறளின் சாயல் படியாத தமிழ் இலக்கிய நூல் திருக்குறளின் பின் தோன்றவில்லை என்று கூறலாம். தமிழ்கூறு நல்லுலகிலே தோன்றிய புலவர்கள் யாவரும் திருக்குறளை நன்கு கற்று அதிலே திளைத்துத் தம் படைப்புக்களில் அதன் சொற்றொடர்களையும் கருத்துக்களையும் புகுத்தியுளர்.

தமிழ்மறையின் விழுமிய கருத்துக்களில் உள்ளத்தைப் பறிகொடுத்த புலவர் பெருமக்கள் அக் கருத்துக்களுக்கு உதாரணங்காட்டி அவற்றின் சிறப்பை விளக்க முற்பட்டுளர். இவர்கள் திருக்குறள்களை ஈற்றடிகளிற் பொதிந்து முதலிரு அடிகளிலும் அத் திருக்குறள்களின் கருத்தை விளக்கும் கதைகளையும் நிகழ்ச்சிகளையும் அமைத்துப் பாடியுளர். இவ்வாறு பாடப்பட்ட நூல்களிற் பெரும்பாலன வெண்பாக்களால் ஆக்கப்பட்டுள. இவ்

வெண்பாக்கள் பெரும்பாலும் பெரியோர்களையும் தெய்வங்களையும் பாட்டுடைத் தலைவர்களாகக் கொண்டுள. இதனால் இவை இத்தலைவர்களுடைய பெயருடன் சார்த்திப் பெயர் பெற்றுள.

இத்தகைய நூல்களை இயற்றிய புலவர்களிற் சிலர் புராணக் கதைகளை உதாரணங்களாக எடுத்து உரைத்தனர்; சிலர் சைவ நாயன்மார்களுடைய வரலாற்றை மட்டும் பயன்படுத்தினர்; சிலர் சைவ சித்தாந்தக் கொள்கைகளைப் பொருத்தமுற அமைத்துக் காட்டினர்.

திருப்புல்லாணிமாலை எனும் நூல் திருமாலின் திருவிளையாடல்களைத் திருக்குறள்களுடன் இணைத்துக் கூறுகிறது. காந்திமுதுமொழி வெண்பா எனும் நூல் காந்தியடிகள் வரலாற்றோடு திருக்குறள்களைச் சேர்த்து உரைக்கிறது. தாலாட்டிலே திருக்குறள்களைப் பொதிந்து நீதிநெறித் தாலாட்டு எனும் பெயருடனும் ஒரு நூல் இயற்றப்பட்டுளது. முதுமொழிமேல் வைப்பு எனும் நூல் பாட்டுடைத் தலைவரின்றிப் பாடப்பட்டுளது.

இந்நூல்களிற் பெரும்பாலன திருக்குறளின் அதிகாரங்கள் ஒவ்வொன்றிலுமிருந்து ஒவ்வொரு குறளை எடுத்துப் பொதிந்து பாடப்பட்டுள. திருக்குறட் குமரேச வெண்பா ஆயிரத்து முந்நூற்று முப்பது குறளுக்கும் உதாரணங்காட்டி விளக்குகிறது. சினேந்திர வெண்பாவும் எல்லாத் திருக்குறளையும் விளக்குதற்கு எழுந்த நூல் என்பர்

உ. வே. சாமிநாதையர். இந்நூல் சமண மதப் பெரியார் ஒருவரால் இயற்றப்பட்டது. இதில் சில வெண்பாக்களே இப்பொழுது கிடைக்கின்றன.

இந்நூல்களின் அமைப்பு முறைகளையும், ஆசிரியர்களையும் காலத்தையும் பிறவற்றையும் ஆராய்வோம்.

''ஆன்ற சபையி லடங்காச் சிசுபாலன்
ஏன்றிறந்தானன்றே இரங்கேசா! — சான்றோர்கள்
காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்
அதனினூஉங் கில்லை யுயிர்க்கு.''

இவ்வெண்பா இரங்கேச வெண்பா எனும் நூலிலுளது. இந்நூல் சூடாமணி எனவும் வழங்கும். இதில் நூற்று முப்பத்து மூன்று வெண்பாக்கள் உள. இதனைப் பிறைசைச் சாந்த கவிராயர் பதினெட்டாம் நூற்றாண்டில் இயற்றினர்.

''கற்புநிறை கத்தூரி அம்மையொடு பன்னளும்
பொற்புறுமில் பூண்டதென்கொல் காந்தியே! -அற்பின்
அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றிற் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவ தெவன்''

இச்செய்யுள் காந்தி முதுமொழி வெண்பாவிலிருந்தெடுக்கப்பட்டது. காந்தி அடிகளின் வாழ்விலிருந்து எடுக்கப்பட்ட நிகழ்ச்சிகளைத் திருக்குறளுடன் இணைத்துக் கூறுவதால் இது இப் பெயர் பெற்றது. நூற்று முப்பத்து மூன்று வெண்பாக்கள் கொண்ட இந்நூலை இந்நூற்றாண்டில் செ. ரெ. இராமசாமிப்பிள்ளை பாடினர்.

"இறைமுருகன் முன்னின் றிசைத்தமொழி தேரான்
சிறையிருந் தான்முன் சிவசிவா—புறவுறுப்பின்
யாகாவா ராயினு நாகாக்க காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு."

இப்பாட்டையுடைய நூல் சிவசிவ வெண்பா எனப்படும், வீரசைவரான சென்னமலையர் இதனைப் பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இயற்றினர்.

"எல்லா முணர்ந்தும் வியாதன் இயம்பியவச்
சொல்லாலே நாவயர்ந்தான் சோமேசா — வல்லமையால்
யாகாவா ராயினு நாகாக்க காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு."

இப்பாட்டுப் பலருக்குப் பழக்கமான சோமேசர் முதுமொழி வெண்பாவில் உளது. இதனைப் பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே சிவஞான முனிவர் செய்தார். இந்நூலிலும் நூற்று முப்பத்துமூன்று வெண்பாக்கள் உள.

திருக்குறட் குமரேச வெண்பா இந்நூற்றாண்டிலே நம்முடன் வாழ்ந்துவரும் பெரும்புலவர் சகவீர பாண்டியன் பாடியது. இந்நூலில் ஆயிரத்து முந்நூற்று முப்பத்து மூன்று வெண்பாக்கள் உள. இவ்வெண்பாக்களுக்கு ஆசிரியர் சிறந்த விளக்கவுரையினை விரிவாக எழுதிப் பெரும்பணி ஆற்றியுளர். இந்நூல் நாலாயிரத்தறுநூறு பக்கங்களைக் கொண்டதொரு பெருநூலாகும். இந்நூலில் இருந்து எடுத்த ஒரு செய்யுளைக் கீழே காண்க;

"அன்றுண்மை நாணம் அறநீங்கி ஏனுதயன்
குன்று தெழுந்தான் குமரேசா — நன்றுக
நாளுெடு நல்லாண்மை பண்டுடையேன் இன்றுடையேன்
காமுற்றுர் ஏறு மடல்."

திருத்தொண்டர் வெண்பா எனவும், திருத்தொண்டர் மாலை எனவும், பெரியபுராணச் சரித்திர வெண்பாமாலை எனவும் வழங்கும் நூலை இயற்றிய ஆசிரியர் பெயர் தெரியவில்லை, நூற்றெருரு வெண்பாக்களையுடைய இந்நூலில் உள்ள ஒரு வெண்பாவினை ஈண்டுக் காண்க.

"பொய்ப் பொருள்மாற் றுன்புரிந்த பொய்த்தவவே
டப் பொருளாய்
மெய்ப்பொருளார் கண்ட விதந்தானே — மெய்ப்பொருள்
எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."

திருப்புல்லாணிமாலை எனும் நூல் கட்டளைக் கலித்துறையால் ஆக்கப்பட்டது; திருமாலின் மாயச் செயல்களைத் திருக்குறளுடன் இணைத்துக் கூறும் இந்நூற்செய்யுள் ஒன்றினைப் படித்து மேலே செல்வோம்.

"மூக்கிற்கு மோப்பக் குழையு மனிச்ச முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்தென்ப ராற்சென்று
நூற்றுவர்பா
லேக்குற் றிடாது வீதுரன் மனைவிருந் தென்னநின்றுன்
காக்கத் தனிப்பொரு ளானுன்புல் லாணியிற்
கார்வண்ணனே."

திருமலைக்கொழுந்து வெண்பா எனும் நூல் திருமலை வெண்பா எனவும் வழங்கும். இது திருமலைக் கொழுந்துப்பிள்ளை என்பவரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்பட்டது. இந் நூல் மறைந்துவிட்டது. ஆனால், புறத்திரட்டுச் சுருக்கத்திலே இருபத்தேழு வெண்பாக்கள் காணப்படுகின்றன.

''சொல்வசை பொறுது துணிந்துவிது ரன்றனது
வல்வில் ஒடித்தான் திருமலைக் கொழுந்தே —
தொல்லுலகில்
தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு.''

இவ்வெண்பா அவற்றுள் ஒன்றாகும். இந்நூலிலுள்ள வெண்பாக்கள் சிறப்புடையனவாகத் தோன்றவில்லை.

தினகர வெண்பா பதினாறும் நூற்றாண்டிலே தினகரபிள்ளைமீது பாடப்பட்டது. நூற்றுமுப்பத்தாறு செய்யுள்களைக் கொண்ட இந்நூலின் ஆசிரியர் நாகராசன் என்பவராவார். இந்நூலிலிருந்தொரு வெண்பாவைப் படித்து மேலே செல்வோம்.

''நல்வசனஞ் சொல்லி நயந்தோர் தமைவணங்கல்
செல்வ முனக்கே *தினகரா!* — அல்லவோ
எல்லார்க்கு நன்றாம் பணித லவருள்ளுஞ்
செல்வர்க்கே செல்வந் தகைத்து.''

இந்நூற்றாண்டினரான மு. பொ. ஈசுரமூர்த்தியாபிள்ளை திருக்குறள் அதிகாரங்களின் கருத்தை

அமைத்துத் தாலாட்டுப் பாடல்களைப் பாடித் தம் நூலுக்கு நீதிநெறித் தாலாட்டு என்று பெயரிட்டார்

''ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்
பேதையைப்போல் பேதை உண்டோ பேசாய்
என்கண்மணியே.''

இஃது அந்நூலிலுள்ள தாலாட்டுப் பாடலில் ஒன்று.

முதுமொழி என்றும் திருக்குறள் போற்றப் படும். சைவசித்தாந்தக் கருத்துக்களுக்குப் பொருத்தமான நூற்றெண்பத்தாறு குறள்களை எடுத்துச் சைவ சமயத்தோடு தொடர்புடைய கதைகளுடன் பொருத்திப் பாடப்பட்டதே முது மொழி மேல்வைப்பு எனும் நூலாகும். இந்நூலில் அறத்துப்பால், பொருட்பால் காமத்துப்பால் வீட்டின் பால் என நான்கு பிரிவுகள் உள. இவற்றுள் முன்னைய மூன்றுமே திருக்குறட் பாக்களையுடையன. கடைசியான வீட்டின்பால் திருவருட்பயன் பாடல்களை விளக்குகிறது. பதினேழாம் நூற்றாண்டிலே தோன்றிய இந்நூலின் ஆசிரியர் கமலை வெள்ளியம்பலவாணத் தம்பிரானவார்.

''இறைவர்க்குத் தொண்டாய் இடர்தீர்ந்த தன்றிப்
பெறுபயனும் வாகீசர் பெற்றார் — அறிஞர்
வினையான் வினையாக்கிக் கோடல் நனைகவுள்
யானையால் யானை யாத்தற்று.''

இது முதுமொழிமேல் வைப்பு எனும் நூலிலுள்ள வெண்பா.

முருகேசரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு சிதம்பரம் ஈசானிய மடம் இராமலிங்க சுவாமிகளாற் சென்ற நூற்றூண்டிற் பாடப்பட்ட நூல் முருகேசர் முதுநெறி வெண்பாவாகும்.

''நீதியிற்பாஞ் சாலிகடா விற்குவிடை நேர்விசுன்னன்
மூதவையிற் சொற்றுன் முருகேசா — காதலினுல்
சொற்கோட்ட மில்லது செப்ப மொருதலையா
உட்கோட்ட மின்மை பெறின்.''

இதனைப் போன்ற நூற்று முப்பத்து மூன்று வெண்பாக்கள் இந் நூலிலுள.

பாகை அழகப்பன் எனும் புலவர் காவை வடமலையப்பபிள்ளை மீது வடமலை வெண்பாவைப் பாடினுர். இந்த வடமலையப்பபிள்ளையின் மகனே முன்னர்க் குறிப்பிட்ட திருமலைக் கொழுந்துப்பிள்ளை என்பவர். பதினேழாம் நூற்றுண்டிலே தோன்றிய இந் நூலில் நூற்றெட்டு வெண்பாக்கள் உள. காமத்துப்பாலிலிருந்து ஒரு குறளும் எடுக்கப்படவில்லை.

இந் நூலிலுள்ளதொரு வெண்பாவைக் கீழே காண்க.

''கூனிமொழி கேட்டுக் கொடியவளாய்க் கைகேயி
மானிலங்கொண்டாள் வடமலையே — ஆனல்
நிலத்தியல் பால்நீர்திரிந் தற்ருகு மாந்தர்க்கு
இனத்தியல்ப தாகு மறிவு,

இந் நூல்களைத் தவிர அரசன் சண்முகனுர் திருவள்ளுவர் நேரிசை எனும் ஒரு நூலை இயற்றினுர். ஆயிரத்து முந்நூற்று முப்பத்து மூன்று திருக்குறள்களையும் தனித்தனி ஒவ்வொரு விருத்தததில் அமைத்துப் பாடப்பட்ட ஒரு பழைய நூலும் உளதென்பர்.

# திருவள்ளுவர் தொடர் ஆண்டு

இக் காலத்திலே வரலாற்றுக்கும் பிறவற்றுக்கும் கால எல்லையாகக் கிறித்த தொடர் ஆண்டை மக்களிற் பெரும்பாலார் கொண்டுளர். உலக வரலாற்றிலே கிறித்துநாதர் அவதாரம் சிறந்ததொரு நிகழ்ச்சியாகக் கொள்ளப்பட்டபடியாலும், அறிவியற்றுறையிலும் அரசியற்றுறையிலும் முன்னேற்றமடைந்த மேலைத் தேயங்களில் வாழும் மக்களிற் பெரும்பாலானோர் கிறித்த சமயத்தினராகையாலும் கிறித்த தொடராண்டு சிறப்படைந்து நிலைத்துளது.

இதனைவிடத் தமிழ்ப் பஞ்சாங்கங்களிற் பின்வரும் தொடராண்டுகளுங் குறிக்கப்படுகின்றன; சிருட்டியாதி வருடம், கலியுக வருடம், சாலிவாகன சக வருடம், விக்கிரம சக வருடம், கொல்லம் வருடம், கிசரி வருடம், புத்த வருடம்.

இந்தத் தொடர் ஆண்டுகள் யாவும் சமயங்களோடும் பிறநாட்டு அரசர்களோடும் தொடர்

புடையனவாயிருக்கின்றனவேயன்றித் தமிழ்மொழியோடும் தமிழினத்தோடும் தொர்புடையனவாயமையவில்லை.

தமிழ் அரசர்களுடைய கல்வெட்டுக்களிலே காணப்படும் காலக் கணக்குகள் அவர்கள் முடிசூடி ஆளத்தொடங்கிய ஆண்டிலிருந்தே கணிக்கப்பட்டுள்ளன, தமிழ் மக்களிடையே பெருவழக்கிலிருக்கும் சாலிவாகன சக வருடம் அக் கல்வெட்டுக்களில் இடம் பெறவில்லை.

இச் சாலிவாகன சகவருடம் சாலிவாகனன் எனும் வடநாட்டு அரசனல் இற்றைக்கு 1880 ஆண்டுகளுக்கு முன்னர் நிலைநாட்டப்பட்டதென்பர் இவ்வரசனுக்கு முன்னர்ப் பல்லாயிர ஆண்டுகளாக நயத்தக்க நாகரிகத்துடன் வாழ்ந்த தமிழ் மக்கள் தம் நாட்டுப் பெருமகன் ஒருவனுடன் இணைந்த தொடர் ஆண்டை நிலைநாட்ட முயலாதது பெரும் விந்தையாக இருக்கிறது. வட நாட்டரசன் ஒருவன் நிலைப்படுத்திய ஒரு தொடர் ஆண்டை வரவேற்று வழங்கித் தமிழினத்தின் பழமையையும் — பண்பையும், சிறப்பையும் — செல்வாக்கையும் சிதைத்து வந்தமை பெரும் வெட்கத்துக்கிடமானதாகவும் இருக்கிறது.

தமிழ் நாட்டிலே, தமிழ் மக்களிடையே நிகழ்ந்த மானக்கேடான-நகைப்புக்கிடமான செயல் இது ஒன்றுதானு? தமிழ் நாட்டுப் பணத்தைக் கொண்டு தமிழ் மன்னர்கள், தமிழ் நாட்டிலே,

தமிழர்களுக்காகக் கட்டுவித்த கோவில்களிலே— தமிழ் மக்கள் வழிபடுங் கோவில்களிலே தமிழ் மொழிக்கு முதலிடம் கொடுக்கப்படவில்லை. தமிழ் நாட்டிலே தமிழ் மக்களால் தமிழிசை ஒதுக்கப் பட்டுள்ளது. தமிழ்நாட்டு ஊர்களின் தனித்தமிழ்ப் பெயர்கள் பிறமொழிப் பெயர்களாக மாற்றப்பட் டுள்ளன. தமிழ் மக்களின் பெயர்கள் கூடத் தமிழ்ப் பெயர்களாக அமையவில்லை. சென்னை மாகாணத்துக்கு இன்னும் ''தமிழ்நாடு'' எனும் பெயர் வைக்கப்படவில்லை. வட இந்தியாவிலே தமி ழர்கள் ''மதருசிகள்'' என வழங்கப்படுகின்றார் களேயன்றித் ''தமிழர்கள்'' எனப் போற்றப்பட வில்லை. நம் மக்களிற் பலரைப் பிடித்துள்ள ''தீண் டாமைப் பேய்'' இன்னும் அவர்களை ஆட்டுகிறது.

''கற்றோன்றி மண் தோன்றாக் காலத்தே முற்றோன்றி மூத்தகுடி'' என்று தன்னைப் புகழும் தமிழினம் — பழமை பாராட்டும் தமிழினம் — இன்று தன் தாழ்வையும் வீழ்ச்சியையும் சிறிது சிந்தித்தல் வேண்டும். வாய்ச் சொல்லில் வீரர்க ளாவதிற் பயனில்லை; மானத்துடன் தலை நிமிர்ந்து வாழுதற்கு வேண்டியவற்றைச் செய்தல் வேண்டும். தமிழன் தமிழனைத் தமிழுக்கு எல்லாத் துறையி லும் முதன்மை கொடுத்து வாழுதல் வேண்டும். தமிழ் இனத்திற்கு இழிவு தரும் சின்னங்களையும் செயல்களையும் பழக்க வழக்கங்களையும் ஒழித்து விடல் வேண்டும்.

பழமையும் செழுமையும் வாய்ந்த மொழியையும், வனப்பும் வளமும் நிறைந்த இலக்கியத்தையும், சீரும் சிறப்பும் பொருந்திய நாகரிகத்தையுமுடைய தமிழ் இனத்திற்கு அவ்வினப் பெரியார் ஒருவருடன் தொடர்புடைய தொடர் ஆண்டு வேண்டுமென மறைமலையடிகள், திரு. வி. க. முதலிய தமிழ்ப் பேரறிஞர்கள் உணர்ந்தார்கள். திருவள்ளுவர் தொடர் ஆண்டைத் தமிழ்மக்கள் வழங்கவேண்டுமெனக் கூறினர்கள்.

பல சமயத்தவர்களாக வாழும் தமிழ் மக்கள் யாவராலும் போற்றப்படும் பெருமை வாய்ந்தவர் திருவள்ளுவரேயாவர். தமிழினம் பல்லாண்டு காலமாக வாழ்ந்து கண்ட உண்மைகளை உலகம் முழுவதும் ஏற்கத்தக்க முறையில் எடுத்துரைக்கும் நூல் அவர் இயற்றிய திருக்குறளேயாகும். இந் நூலுக்கு இணையானதொரு இலக்கிய நூல் இந்த உலகில் இல்லை. இதனலேயே, இந்த நூலைத் தந்து தமிழின் பெருமையையும், தமிழரின் சிறப்பையும் உலகறியச் செய்த திருவள்ளுவருக்கு அறிஞர் வரிசையில் முதலிடத்தைத் தமிழ் மக்கள் அன்றும் இன்றும் கொடுத்துளர். எனவே தமிழரின் தொடர் ஆண்டு திருவள்ளுவர் ஆண்டென வழங்கப்படுதல் பல்லாற்ருனும் பொருத்தமுடையதே.

திருவள்ளுவர் தொடர் ஆண்டை நாம் வழங்குவதால் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த தமிழ் மக்களின் நாகரிகச் சிறப்பையும், பண்பாட்டின் உயர்வையும் நினைக்கும் வாய்ப்பைப் பெறு

கிறோம், ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் திருவள்ளுவர் கூறிய வியத்தகு கருத்துக்கள் அவருள்ளத்திலே தோன்றுதற்கேற்ற சூழ்நிலையையும் நிலைக்களனையும் உண்டாக்குவதற்கு, அவருக்கு முன்னரும் பல்லாயிர ஆண்டுகளாகத் தமிழர்கள் நல்ல நாகரிகம் படைத்தவர்களாக வாழ்ந்திருத்தல் வேண்டும் என்பதையும் அறிகிறோம், சுருங்கக் கூறின் திருவள்ளுவர் தொடர் ஆண்டு தமிழினத்தின் பல்லாயிர ஆண்டு வாழ்வைப் — பண்புமிக்க நாகரிக வாழ்வை — உலகத்துக்கு உணர்த்தத்தக்கது எனலாம்.

மேலும், திருவள்ளுவர் தொடர்ஆண்டை நாம் கையாளுவதால் திருவள்ளுவரையும் அவருடைய நூலையும் இடையிடையே நினைக்கின்றோம். இந்த நினைப்புத் திருவள்ளுவருடைய அறிவுரைகளை எமது வாழ்வில் வழிகாட்டிகளாகக் கொள்ளுவதற்குப் பெரிதும் உதவும். சிறுவர்கள் உள்ளத்திலும் இத் தொடர் ஆண்டு, திருவள்ளுவர் யார்? அவரை ஏன் போற்றுதல்வேண்டும்? என்பனபோன்ற ஆராய்ச்சிகளைப் பிறப்பிக்கும். இதனால் அவர்களிடத்திலே திருவள்ளுவரைப்பற்றிய அறிவு இளமையிலே உண்டாகும்; அவர்கள் வாழ்வும் வளம்பெறும்.

திருவள்ளுவரைப் போற்றுதற்கும் அவருக்கு எமது நன்றியை யுரிமைப் படுத்துதற்கும் திருவள்ளுவர் தொடர் ஆண்டு நமக்கு வாய்ப்பளிக்கிறது. திருவள்ளுவரைப் போற்றுவதாற் பிறநாட்டறிஞருடைய வியப்புக்கும் மதிப்புக்கும் ஆளாகிறோம்,

என்பதையும் நாம் மறுத்தல்கூடாது. பிறமொழிகளில் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய நூல்கள் சாதாரண மக்களால் இப்பொழுது படித்தறிய முடியாதனவாய்ப் போய்விட்டன. வடமொழியிலே தோன்றிய வேதங்கள் இதற்குச்சான்று பகர்கின்றன. நமது தமிழ்மொழியில் ஈராயிரம்ஆண்டுகளுக்குமுன் தோன்றிய இலக்கியங்களோவெனில் இன்றும் நம் மக்கள் படித்தறியத் தக்கனவாயிருக்கின்றன. இவற்றுள்ளே திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள் யாவரும் - குழந்தைகளும் படித்தறியத் தக்கதாயிருக்கின்றது.

இந்த உலகிலே தமிழ் நாட்டிலேதான் சமயச்சார்பில்லாத ஒரு நூலை ஈராயிரம் ஆண்டுகளாகத் தலைமுறை தலைமுறையாகப் போற்றிவருகிறோம்; படித்துப் பயன்பெற்று வருகிறோம். பழமைக்கும் பழமையாகவும் புதுமைக்குப் புதுமையாகவும் விளங்கும் இந்நூலையும் இதன் ஆசிரியரையும் இன்றும் நாம் யாவரும் பலவாறு போற்றுகிறோம் என்பதை அறியும்பொழுது, பிற நாட்டார் திகைப்பும் வியப்பும் அடைகின்றனர். இதற்குச் சான்றாக ஒரு செய்தியினைக் குறிப்பிட விரும்புகின்றேன்.

எமது தமிழ்மறைக் கழகம் கொழும்பில் நடத்திய ஐந்தாவது திருக்குறள் மாநாட்டிலே திருக்குறளைப்பற்றிப் பேசுதற்கு இசையுமாறு உலகப் பேரறிஞராகிய அல்பேட் சுவைச்சருக்கு எழுதினேன், மாநாட்டிற் கலந்துகொள்ள முடியாத தம் நிலைமையை விளக்கி அவர் எனக்கு எழுதிய

கடிதத்தில் "ஈராயிரம் ஆண்டுகளுக்குமுன் தோன்றிய திருக்குறளை இன்று தமிழ்மக்கள் எவ்வாறு போற்றுகிறார்கள் என்பதை நேரிற் பார்த்து அறிய ஆவலுடையவனாயிருக்கிறேன்" என்று குறிப்பிட்டுளர்.

"திருக்குறளைத் தமிழ்மறை எனப் போற்றுகிறோம். அதன் ஆசிரியருக்கு ஊர்தோறும் விழா எடுக்கிறோம். வீடுதோறும் அவர் திருநாளைக் கொண்டாடுவிக்க முயல்கிறோம்" என்று யான் அவருக்கு எழுதினேன். இச்செய்திகளை அறிந்து அவர் அளவிலாத மகிழ்ச்சியடைந்தார்.

திருவள்ளுவரின் பெயரால் ஒரு தொடர் ஆண்டையும் நிலைநாட்டித் தமிழ்மக்கள் யாவரும் அதனை வழங்கிவருகின்றனர்" என்று பிறநாட்டார் கூறத்தக்க நிலைமையை நாம் விரைவில் உண்டாக்குதல் வேண்டும், திருவள்ளுவர் தொடர் ஆண்டை இன்று பலர் வழங்குகிறார்கள். இதுவரை இதனைப் பற்றி எண்ணாதவர்கள் இனித் தயங்காமல் இத்தொடர் ஆண்டை வழங்குவதற்கு முன்வரல் வேண்டும்.

திருவள்ளுவர் தொடர் ஆண்டினை மறைமலை அடிகள் கணித்த முறைப்படியே இன்றுநாம் வழங்குகிறோம். இப்பொழுது திருவள்ளுவர் 1983-ஆம் ஆண்டு நடக்கிறது. திருவள்ளுவர் தொடர் ஆண்டு தை முதல் நாளிற் பிறக்கிறது. கிறித்த தொடர் ஆண்டுத் தொடக்கத்துக்கு 31 ஆண்டுகள் முந்தித்

தொடங்குகிறது. திருவள்ளுவர் தொடர் ஆண்டில் ஈராயிரம் ஆண்டு கி. பி. 1969 ஆகும். திருவள்ளுவருடைய ஈராயிரம் ஆண்டு நிறைவுவிழாவை 1969-இல் உலகம் முழுவதும் சிறப்பாகக் கொண்டாடச் செய்தல்வேண்டும்.

திருவள்ளுவர் திருநாளை வைகாசி அனுடத்திலே தமிழ்கூறு நல்லுலகம் இப்பொழுது கொண்டாடுகிறது. எனவே 1969 இல் வைகாசி மாதம் முழுவதும் திருவள்ளுவருடைய ஈராயிரம் ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுமாறு எமது தமிழ் மறைக் கழகம் வேண்டுகோள் விடுத்துளது,

திருவள்ளுவர் ஆண்டு ஈராயிரத்துக்குமுன் தமிழ்பேசும் மக்கள் யாவரும் தமிழுக்கு எலலாத் துறையிலும் முதன்மை கொடுத்தற்கும், திருவள்ளுவர் திநநாளை ஆண்டுதோறும் ஒவ்வொரு வீட்டிலும் கொண்டாடுவதற்கும், திருவள்ளுவர்தொடர் ஆண்டை வழங்குதற்கும் முயல்வார்களாக; துளங்காது தூக்கம் கடிந்து தொழிலாற்றுவார்களாக திருவள்ளுவர் ஆண்டு ஈராயிரத்துக்கு (தி. ஆ. 20(0) இன்னும் பன்னிரண்டு ஆண்டுகளே இருக்கின்றன.

''அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்.'' — தமிழ்மறை 443

(1957 ஆம் ஆண்டில் சுதந்திரன் பத்தாவது மலரில் வெளியிடப்பட்டது.)

# தலைமை உரை

இத்திருக்குறள் மாநாட்டை இவ்வளவு சிறப்பாக நடத்தும் இம் மாநகரின் மக்கள் யாவர்க்கும் நன்றி கூறுகின்றேன். இவர்களுடைய ஒற்றுமை உணர்ச்சியும், தமிழ்ப் பண்பும், திருக்குறட் பற்றும் போற்றத்தக்கன. எமது தமிழ்மறைக் கழகத்தின் முதலாவது மாநாட்டை இங்கே சிறப்பாக நடத்துதற்கு முன்வந்த திருவள்ளுவர் கழகத்தாருடைய பெருந்தொண்டு இங்கு வந்திருக்கும் இந்தியப் பேரறிஞர்களையும் வியப்படையைச் செய்துவிட்டது. பல திங்களாக முயற்சிசெய்து இப்பெரும் பணியைச் சிறப்பாக நிறைவேற்றியுள்ள திருவள்ளுவர் கழகத்தாருக்கு எமது கழகம் மாத்திரமன்றித் தமிழ்மக்கள் யாவருமே நன்றி கூறக் கடமைப்பட்டவர்களாவர். இம் மாநாட்டை நடத்துவது மாத்திரமன்றி இங்குள்ள மக்கள் யாவரையும் தத்தம் வீடுகளிலும் திருவள்ளுவர் திருநாளைக் கொண்டாடவுஞ் செய்த இக் கழகத்தாரின் பெருஞ் செயலை எவ்வாறு போற்றுவது? விடாமுயற்சியின் சிறப்பை — உண்மைத் தொண்டின் பயனை — இன்று இங்கே காணும் வாய்ப்பு இங்குள்ளார் யாவர்க்கும் கிடைத்துள்ளது.

''அருமையுடைத் தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்.''

என்று வள்ளுவர் கூறியதனை இக் கழகத்தார் மெய்ப் பித்துளார்.

பல்லாயிரம் ஆண்டுகளாகச் சிறந்த நாகரிக வாழ்க்கை நடத்திய தமிழ்மக்கள் இவ்வுலகத்திலே இன்பமாக எவ்வாறு வாழலாம் என்று ஆராய்ந் தார்கள். அவர்கள் தம் ஆராய்ச்சியின் முடிவாக, அனுபவத்தின் பயனாகப் பல உண்மைகளை அறிந் தார்கள். இந்தப் பேருண்மைகளை — வாழ்வாங்கு வாழும் வழிகளை – நமக்கு எடுத்துக் கூறும் திருநூலே திருக்குறளாகும். இதனால், இந் நூல் தமிழினத்தின் மதிப்பொணாத அருநிதியாய்த் திகழுகிறது. சாதி, மத, நிற வேறுபாடுகளின்றி எல்லா மக்களும் எக் காலத்தும் போற்றுதற்குரிய நன்னூல் இவ்வுலகில் இஃதொன்றே. தமிழின் பெருமையையும், தமிழி னத்தின் சிறப்பையும், தமிழ்ப் பண்பாட்டின் செம் மையையும், தமிழறிஞரின் சிந்தனையின் உயர்வை யும் எடுத்துரைக்கும் இத்தெய்வ நூலுக்கு இணை யான நூல் உலகிலுண்டோ? சிந்திக்கும் வன்மை உள்ளவர்களையும், உணரும் ஆற்றல் படைத்தவர் களையும் ஈர்த்து ஈர்த்து இன்புறுத்தும் இந்தச் சிந்த னைக் களஞ்சியத்தின் பெருமையினை அளவிட்டுரைத் தல் முடியுமா? பல துறையாக விரிந்து செல்லும் வாழ்வில் ஏற்படுஞ் சிக்கல்களைத் தீர்க்கும் ஆற்றல் இப் பொதுமறையின் தனிச் சிறப்பன்றோ! நன்மைக் கும் – தீமைக்கும், அறத்துக்கும்—மறத்துக்கும், தன்

நலத்துக்கும்—பிறர் நலத்துக்கும், மனிதப் பண்புக் கும்—மிருகப் பண்புக்கும் ஏற்படும் போராட்டத் திலே மனிதன் வெற்றிகண்டு மனிதனுக அமரனுக• வாழ வழிகாட்டும் அறநூல் இஃது என்பதை அறி யாதோர் உளரோ?

பகையை, அன்பினுலன்றிப் பகையினுல் ஒழிக்க முடியாது; தீமையை, நன்மையினுலன்றித் தீமையி னுல் அழிக்க முடியாது என்பனபோன்ற பேருண் மைகளே அழுத்தந் திருத்தமாக எடுத்துப் பறை சாற்றும் நமது தமிழ் மறையின் சிறப்பை எவ்வாறு கூறலாம்!

இந்த உலகம் இன்பமாக இயங்குதற்கும், அமைதியாக வாழ்வதற்கும் பண்புடையவர்கள் பெருகவேண்டும்; பண்புடையவர்கள் இவ்வுலகில் இன்றேல் இந்த உலகமே அழிந்துவிடும் என்பதை,

> ''பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அஃதின்றேல்
> மண்புக்கு மாய்வது மன்.''

எனும் குறள் கூறுகிறது. எவ்வளவு கூரிய அறிவு டையோரும் பண்பில்லாதவர்களாயிருப்பின் அவர் கள் மரத்தைப் போன்றவர்கள் என வள்ளுவர் கூறுகிருர்.

> ''அரம்போலுங் கூர்மையரேனு மரம் போல்வர்
> மக்கட்பண்பு இல்லா தவர்.''

பண்பிலாதாரின் அறிவு மாத்திரமன்றி அவர் தம் பெருஞ் செல்வமும் பயனற்றதென்பது வள்

ளுவர் கருத்து. இதனை யாவரும் நன்கு அறிந்த ஓர் உதாரணத்தால் விளக்குகிறார். தூய்மையற்ற கலத்திலே நல்ல பாலை வைத்தால் திரைந்து கெட்டுப் போகும். இதனைப்போலவே, பண்பிலாதவர் பெற்ற பெரிய செல்வமும் அவர்க்கும் பிறர்க்கும் பயன்படாது கெட்டுவிடும் என்பதை

''பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்
கலந்தீமை யால்திரிந் தற்று.''

எனும் குறளிலே யாவரும் எளிதில் உணரத்தக்க தாக விளக்குகிறார்.

தீமைகளைச் செய்கிறவர்களிடத்தும் யாம் பண்பு உடையவர்களாய் நடக்கவேண்டும். இவ்வாறு நடவாமை இழிவான செயலாகும். தீமை செய்கின்றவர்களுக்கும் நன்மை செய்தலையே வள்ளுவர் உயர்ந்த பண்பாக — சால்பின் பயனாக — தலையாய அறிவாக — மாசற்றார் குறிக்கோளாகப் பல குறள்களிலே கூறுகிறார்.

''இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு''
''அறிவினு ளெல்லாந் தலையென்ப தீய
செறுவார்க்கும் செய்யா விடல்.''
''கறுத்தின்னா செய்தவக் கண்ணும் மறுத்தின்னா
செய்யாமை மாசற்றார் கோள்.''

ஒருவன் தன்னைத் திருததி அன்பும் பண்பும் உடையவனாக வாழ்ந்தால் அவனுடைய குடும்பம் செம்மைப்படும்; அவன் வாழும் ஊர் சிறக்கும்;

அவனுடைய நாடு நலம்பெறும்; உலகமே உயர்வடையும். இதுதான் வள்ளுவருடைய அடிப்படையான கொள்கையாகும். இதனுலேயே, ஒருவன் மேற்கொண்டொழுகவேண்டிய சிறந்த பண்புகளையும் அவன் நீக்கவேண்டிய தீய குணங்களையும் அவர் எடுத்து விளக்கியுளர்.

வீடும் நாடும் நலமுற அவர் கூறும் சட்டதிட்டங்கள் அவற்றைப் படிப்போர், கேட்போர் தம் உள்ளங்களைத் தொடத்தக்கன; "இதுவரை உண்மை தெரியாது அலைந்தோம், அல்லற்பட்டோம், உமிக்குத்திக் கை ஓய்ந்தோம்; இப்பொழுது உண்மையை அறிந்தோம்; இனி இன்பமடையலாம், அன்புடன் அமைதியாக வாழலாம்" என்று எண்ணச் செய்வன; எண்ணி, எண்ணி நல்வாழ்வு வாழச்செய்வன.

பிறரிடத்து அன்பு வை, பிறருக்குத் தீமை செய்யாதே, என்று மாத்திரம் வள்ளுவர் கூறவில்லை. 'உன்னிடத்தும் நீ அன்பு வை; உனக்கும் நீ தீமை செய்யாதே; உன்னைக் காக்கும் முறையை அறிந்துகொள்; நோயின்றித் துன்பமின்றி வாழும் வகையைத் தெரிந்துகொள், உனக்கு நன்மை செய்கிறயா என்று ஆராய்ந்து பார்' என்றுங் கூறுகிருர்.

"தன்னைத் தான் காதலனுயின் எனைத் தொன்றும்
துன்னற்க தீவினைப் பால்."

"தீப்பால தான் பிறர்கட் செய்யற்க நோய்ப் பால
தன்னை அடல்வேண்டா தான்."

''நோய்எல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர்.''

''அருங் கேடன் என்ப தறிக மருங்கோடித்
தீவினை செய்யான் எனின்.''

''தன்னைத்தான் காக்கிற் சினங்காக்கக் காவாக்கால்
தன்னையே கொல்லுஞ் சினம்.''

இவைபோன்ற குறள் மணிகள் எத்தகையோருடைய உள்ளத்தையும் உருக்கி உண்மையையுணரச் செய்யுமன்றோ!

மக்கள் பலர், பிறருடைய குற்றங்களைக் கண்டு அவற்றைப் பரப்புவதிலேயே தம் நேரத்தையும் ஆற்றலையும் வீணுக்குகின்றனர். இத்தகையோர் தம்மிடத்துள்ள குற்றங்களையும் காண்பாராயின் இந்த உலகத்தில் தீமையுண்டாகுமா என்று கேட்கும் வள்ளுவர் வாய்மொழி புலப்படுத்தும் பேருண்மையை இனியாகுதல் மக்கள் உணருவார்களா?

''ஏதிலார் குற்றம்போல் தங்குற்றங் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு''

'தீதுண்டோ' எனுஞ் சொல் எவ்வளவு உருக்கத்தையும் இரக்கத்தையும் பிறப்பிக்கிறது. இக் குறளைப் பன்முறை படித்துப் பாருங்கள். உங்கள் உள்ளம் உங்களை அறியாமலே உயர்வடையும்; உண்மையிற்றிளைக்கும்.

''தன்னுயிர்க் கின்னாமை தானறிவான் என்கொலோ
மன்னுயிர்க் கின்னா செயல்.''

எனும் வள்ளுவர் வாய்மொழியைப் படித்தவுடன் உணர்ச்சி பெருத உள்ளமுடையவர்களை மக்களென்று கூறலாமா?

"யாம் சிறந்த அன்புடையோம், உயர்ந்த அருளுடையோம், பரந்த அறிவுடையோம், நல்ல சால்புடையோம், விழுமிய ஒழுக்கம் உடையோம், பெரிய கல்வி உடையோம், நல்ல குலம் உடையோம்." என்றெண்ணியுஞ் சொல்லியும், இவற்றின் காரணமாகப் பிறராற் பாராட்டப்பட்டும் வாழ்வோர், இவற்றின் அடையாளங்களாக வள்ளுவர் கூறுவனவற்றைக் கேட்டறிந்துணர்ந்தவுடன் இவற்றுள் ஒன்றேனும் தங்களிடம் இல்லை என்று கூறும் நிலைமைக்கு வந்துவிடுவார்கள். தமது இழிந்த நிலைமையை—பொய்த்து உயிர் வாழுதலை—உணர்வார்கள். உண்மையாக வாழ — உள்ளத்தாற் பொய்யாது வாழ விரும்புவார்கள்.

> "தன்நெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
> தன்நெஞ்சே தன்னைச் சுடும்."

என்பது உண்மை; முழுதும் உண்மை என்று பறைசாற்றுவார்கள், பண்புடையவர்களாய் வாழ முயல்வார்கள். அன்பு, அருள், அறிவு, சால்பு, ஒழுக்கம், கல்வி, குலம் முதலியவற்றுக்கு அடையாளங்களாக வள்ளுவர் கூறுவனவற்றுட் சிலவற்றை ஈண்டுக் குறிப்பிட விரும்புகிறேன். இவற்றை, நாடோறும் மக்கள் நினைத்துக்கொண்டால் நல்வாழ்வு வாழலாம்; பண்புடையவர்களாகலாம்.

> "அன்பிலார் எல்லாந் தமக்குரியர் அன்புடையார்
> என்பும் உரியர் பிறர்க்கு."

> "அல்லல் அருள்ஆள்வார்க்கு இல்லை வளிவழங்கும்
> மல்லல்மா ஞாலம் கரி."

''அறிவினுன் ஆகுவதுண்டோ பிறிதின்நோய்
தன்நோய்போல் போற்ருக் கடை.''
''இன்ன செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு.''
''ஒழுக்க முடையவர்க் கொல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல்.''
''கற்றதனுல் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்ருள் தொழாஅ ரெனின்.''
''நலம்வேண்டின் நாணுடைமைவேண்டும்குலம்வேண்டின்
வேண்டுக யார்க்கும் பணிவு.''

வள்ளுவர் தந்த இந்தத் தமிழ்மறையின் பெருஞ் சிறப்புக்களை உணர்ந்தே இன்று வரையும் தமிழ்ப் புலவர்கள் வழி வழியாக இதனைப் போற்றி வந்திருக்கிருர்கள்; பிறநாட்டார் பலர் தத்தம் மொழியில் மொழி பெயர்த்திருக்கிருர்கள். வள்ளுவர் கூறியபடி உள்ளத்தாற் பொய்யாதொழுகி உலகத்தார் உள்ளத்தெல்லாம் நிறைந்து விளங்கிய காந்தியடிகள் திருக்குறளைப் படித்தறிதற்காகத் தமிழைக் கற்ருர். அவருடைய அடிச்சுவட்டினைப் பின்பற்றி வாழ்பவரும், பூதான இயக்கத்தின் தலைவராய் உலகத்தையே வியப்படையச் செய்து வருபவருமாகிய ஆச்சார்ய விேேனாபா நாடோறும் இதனை ஓதி வருகிருர்.

இனி வருங் காலத்தில் நமது தமிழினம்—ஏன் உலக மக்கள் யாவருமே—இன்பமாகவும் அமைதியாகவும் நல்வாழ்வு வாழவேண்டுமெனின் எல்லாருடைய எண்ணமும் சொல்லும் செயலும் திருக்குறள் வகுத்த நெறியிலே செல்லல் வேண்டும். பிற நாட்டினர்க்கு வழிகாட்டும் முறையில் நாம்

நமது தமிழ் மறையைப் போற்றி அது வகுத்த வழியிலே நின்றொழுகி இன்பமடைய முதலில் முயற்சி செய்தல் வேண்டும். சாதி மத வேறுபாடின்றித் தமிழினைப் பேசும் மக்கள் யாவரும் ஒன்று சேர்ந்து தமிழ்ப் பண்பாட்டின் களஞ்சியமாக — யாவர்க்கும் பொதுவான நெறியைப் புகலும் பொதுமறையாக—விளங்கும் திருக்குறளைப் போற்றுவோம்; அதனுடைய ஆசிரியரின் பெருஞ்செயலை நினைவு கூர்வோம்.

ஒரு நாளேனும் திருக்குறளைப்பற்றி எண்ணுமல், திருக்குறள் என்றொரு சிறந்த நூல் இருக்கிறதென்று அறியாமல், அறிந்தும் அதன் அருமை பெருமைகளை உணராமல், அதனைப் படித்தும் அது வகுக்கும் பொதுநெறியில் ஒழுகாமல் வாழும் மக்களுக்கு அந்நூலின் அருமை பெருமைகளை அறிவித்தற்கும், அதனில் அவர்களை ஈடுபடச் செய்தற்கும் எமது தமிழ்மறைக் கழகம் எண்ணியது. வையகமெங்கும் ஒரு நாளிலே திருவள்ளுவர் திருநாளைக் கொண்டாட வேண்டுமென்றும். ஒவ்வொரு வீட்டிலுங் கொண்டாட வேண்டுமென்றுங் கேட்டு அறிக்கைகள் வெளியிட்டோம்.

தமிழறிஞர்கள் மாத்திரமன்றிச் சங்கங்களும் பத்திரிகைகளும் எமது முயற்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் நல்கின; கல்கி, சுதந்திரன், ஈழகேசரி, செந்தமிழ்ச் செல்வி, தமிழ் நாடு, ஆத்மசோதி. தர்ம சக்கரம், வீரகேசரி, சமூகத் தொண்டன் முதலிய பத்திரிகைகள் தலையங்கம் முதலியன எழுதியும் உற்சாகமூட்டின. ஈழத்திலும் தமிழகத்திலும் மாத்திரமன்றி மலாயா, பர்மா, தென்னுபிரிக்கா முதலிய இடங்களிலும் வாழும் தமிழ் மக்கள் இன்று திருவள்ளுவர் திருநாளைக் கொண்

டாடுகிறார்கள். எமது வேண்டுகோட் கிசைந்து திருச்சி, சென்னை, இலங்கை, சிங்கப்பூர் வானொலி நிலையங்கள் இன்று விசேட நிகழ்ச்சிகளை ஒலிபரப் புகின்றன. தமிழில் மாத்திரமன்றி ஆங்கிலம், சிங்களம், தெலுங்கு முதலிய மொழிகளிலும் திருக் குறளையும் அதன் ஆசிரியரையும் பற்றிய பேச்சுக் கள் ஒலிபரப்பப்படுகின்றன. எமது சிறு முயற்சி இவ்வளவு பெரும் பயனை அளித்ததற்குக் காரணம் மக்கள் பலருக்குத் திருக்குறளிலுள்ள ஆர்வமேயா கும். இந்த ஆர்வத்தை எல்லாரிடத்திலும் உண் டாக்கி எல்லா மக்களையும் உண்மை வழியில் இன்ப வாழ்வு வாழச் செய்வது பேரறிஞர் தங் கடனாகும்.

இவ்வாண்டிலே எல்லா ஊர்களிலும் திருவள் ளுவர் திருநாளைக் கொண்டாடச் செய்துவிட்டோம். எம்முடன் ஒத்துழைத்த பத்திரிகைகளுக்கும், சங் கங்களுக்கும், தமிழ்ப்பேரறிஞர்களுக்கும், வானொலி நிலையங்களுக்கும் நன்றி கூறுகிறோம். அடுத்த ஆண்டிலே திருவள்ளுவர் திருநாளை ஒவ்வொரு நாட்டிலும் மாத்திரமன்றி ஒவ்வொரு வீட்டிலுங் கொண்டாடச் செய்தல்வேண்டும். இதற்குத் திருக்குறளிலீடுபட்ட அன்பர்கள் யாவரையும் உதவி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம். சமயப் பூசல், சாதிப்பூசல், இனவேற்றுமை பணவேற்றுமை முதலிய பல காரணங்களாற் பிளவுபட்டுக்கிடக்குந் தமிழினத்தை ஒன்றுபடுத்தும் ஒரு திருநாளாக —தமிழினைப் பேசும் மக்கள் யாவரும் ஒன்றுசேர்ந்து கொண்டாடும் ஒரு நன்னாளாக—இந்த வள்ளுவர் திருநாள் பொலிவதாக! வாழ்க தமிழ்மறை! வாழ்க உலகம்!

[இருபத்தேழு ஆண்டுகளுக்கு முன்னர் திருக்கோணமலை யில் திருவள்ளுவர் கழக ஆதரவில் திருவள்ளுவர் திருநாளில் நடந்த தமிழ்மறைக் கழகத்தின் முதலாவது திருக்குறள் மாநாட்டில் 28—6—53 இல் நிகழ்த்திய உரையின் சுருக்கம்.]

ரி
ப்
,
க்
க்
ரி
ம்
ா
ள
ட
.
ள்
.
ங்
வி
த
ரு
ங்
த்
ம்
ப்
ம
ந்
க
து
ர்
ற!

லை
ரில்
ள்
ம்.]

THAMILARASI

## கா. பொ. இரத்தினம், பா. உ.

# எழுதிய நூல்கள்.

விலை ரூபா

1. தமிழ்மறை விருந்து-வைகாசி 1980 5-00
2. பச்சைமண்ணும் சுட்டமண்ணும் - தை, 1980 3-00
3. தாவாரம் இல்லை
4. இலங்கையில் இன்பத்தமிழ்
5. இலக்கியங் கற்பித்தல்
6. நூற்றுண்டுகளில் தமிழ்
7. அடிமைச் சாசனம்
8. மனப்பால்
9. தனி ஆட்சி
10. தடுப்புக்காவலில் பத்துநாள்கள்

## வெளிவரவிருப்பன

1. கற்பக மலர்
2. இமயத்து உச்சியில் (கவிதைகள்)
3. தமிழுணர்ச்சி
4. சொல்வண்ணம்

## காந்தளகம்

*13, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

ஸ்ரீ காந்தா அச்சகம், 213, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்